www.gnanam.info
www.gnanam.lk
ISSN-2478-0340

மார்ச் 2021

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை :
ரூபா 100/=

250



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாபெரும் இலக்கியப் போட்டிகள்!

ஞானம் பிரதம ஆசிரியர் **தி. ஞானசேகரனின்**
**80ஆவது அகவையை** முன்னிட்டு ஞானம் சஞ்சிகை
நடத்தும் **மாபெரும் இலக்கியப் போட்டிகள்**

**பரிசுத் தொகை ரூபாய் 300,000/=**



2000ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரிவரை வெளிவந்த
சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான பரிசுப் போட்டிகள் ஆறு பிரிவுகளில் நடைபெறுகின்றன.

(01) **முதற் பிரிவு** : **நாவல் - குறுநாவல் -** நாவல், குறுநாவல், குறுநாவல் தொகுப்பு.
(02) **இரண்டாம் பிரிவு** : **சிறுகதை -** குறைந்தது 9 சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுப்பு.
(03) **மூன்றாம் பிரிவு** : **கவிதை -** கவிதைத் தொகுப்பு – மரபுக் கவிதை, புதுக்கவிதை, காவியம்.
(04) **நான்காம் பிரிவு** : **கட்டுரை -** பொருட்பரப்பு எதுவாகவும் இருக்கலாம்.
(05) **ஐந்தாம் பிரிவு** : **ஈழத்துப் பழந்தமிழ் ஆய்வு -** பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரியது.
(06) **ஆறாம் பிரிவு** : **ஈழத்துச் சிற்றிதழ்.**

### போட்டிகளுக்கான விதிமுறைகள் :

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். ஆனால் ஒருபிரிவுக்கு ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். போட்டி முடிவுத் திகதி 30–06–2021. அதன் பின்னர் வந்துசேரும் படைப்புகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஞானம் ஆசிரியர் குழுமத்துடன் போட்டி தொடர்பான கடிதம், தொலைபேசித் தொடர்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஞானம் பதிப்பகத்தில் வெளிவந்த நூல்கள் இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி - Editor, Gnanam, 3-B, 46th Lane, Colombo 06, Sri Lanka என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். தபால் மேலுறையின் இடதுபக்க மூலையில் பங்குபற்றும் போட்டிப் பிரிவின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

### பிரிவு 1 – 4 மேலதிக விதிமுறைகள் :

ஆகக் குறைந்தது 80 பக்கங்கள் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும். நூலின் இரண்டு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். போட்டியாளர்கள் தமது இலக்கிய முயற்சிகள் உள்ளடங்கிய தம்மைப்பற்றிய சிறுகுறிப்பு ஒன்றினையும் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பட்டியலையும் வேறாக இணைத்தல் வேண்டும்.

### பிரிவு 5 மேலதிக விதிமுறைகள் :

தற்போது பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிக்கென எழுதப்பெற்ற ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மாத்திரமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். பட்டப்படிப்புக்கு சமர்ப்பித்த ஆய்வுகளையோ அதன் பகுதிகளையோ அனுப்பமுடியாது. ஆய்வுக்கட்டுரைகள் ஆகக் குறைந்தது A4 தாளின் 40 பக்கங்களில் தட்டச்சு செய்து 2 பிரதிகளை அனுப்புதல்வேண்டும். அனுப்பப்படும் ஆய்வு அவரால் எழுதப்பட்டது என்பதற்கான பல்கலைக்கழக துறைத்தலைவரின் உறுதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

### பிரிவு 6 மேலதிக விதிமுறைகள் :

போட்டியில் பங்குபற்றும் சிற்றிதழின் ஆசிரியர் ஈழத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும் (1) சிற்றிதழ் பற்றிய சிறுகுறிப்பு (2) இதுவரை காலமும் வெளிவந்த இதழ்களின் அட்டைப்படம், பொருளடக்கம், ஆசிரியத் தலையங்கம் ஆகியவற்றின் போட்டோ பிரதிகள் (3) வெவ்வேறு காலங்களில் வெளிவந்த 10 இதழ்களின் இரண்டு பிரதிகள் ஆகியவற்றை இணைத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக பரிசுத் தொகைகளும் பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.**

**முதற்பரிசு ரூபா 25,000/=** **இரண்டாம் பரிசு ரூபா 15,000/=** **மூன்றாம் பரிசு ரூபா 10,000/=**

– ஞானம் நிர்வாக ஆசிரியர்

ஒளி: 21
சுடர்: 10
250-2

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....

### ⊙ கவிதைகள்
*மைதிலி தயாபரன்* 04
*கீத்தா பரமானந்தன்* 11
*அஷ்ரஃப் சிஹாப்தீன்* 16
*ஜின்னாஹ்* 27
*என். சண்முகலிங்கன்* 27
*சோ.ப.* 33
*திருமதி கலாநிதி ஜீவகுமாரன்* 41

### ⊙ சிறுகதைகள்
*தேவகி கருணாகரன்* 05
*யோகேஸ்வரி சிவப்பிரகாசம்* 12
*மதிவதனி* 20
*சாலியகுணவர்தன / மலரன்பன் (மொழிபெயர்ப்புச் சிறுகதை)* 30
*சுதாராஜ்* 37

### ⊙ கட்டுரைகள்
*பத்மா இளங்கோவன்* 09
*நாட்டியகலாநிதி கார்த்திகா கணேசர்* 17
*சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)* 23
*B. சந்திரன் ஐயர்* 28
*பேராசிரியர் சபா ஜெயராசா* 34
*நூலகவியலாளர் என். செல்வராஜா* 47

### ⊙ நூல் அறிமுகம்
*வசந்தி தயாபரன்* 25

### ⊙ பத்தி
*பேராசிரியர் துரை மனோகரன்* 53

### ⊙ வாசகர் பேசுகிறார் 55

# ஆசிரியர் பக்கம்

## ஞானம் இயங்கிவந்த பாதையும் எதிர்காலத் திட்டங்களும்

அன்புடையீர்.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றிலும், முக்கியமான மைற்கல் ஒன்றை நாம் தொட்டு நிற்கின்றோம் என்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து மாதம் தவறாது வெளிவந்து, 250 இதழ்களைத் தொடுவது என்பது தமிழ் இலக்கியச் சிற்றிதழ் வரலாற்றிலே இமாலயச் சாதனை. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே விரல் மடித்து எண்ணக்கூடிய சிறுசஞ்சிகைகளை 250ஆவது இதழை இதுவரை தொட்டுள்ளன. அவற்றுள்ளும் ஞானம் மாத்திரமே மாதந்தவறாது வெளிவந்து இச்சாதனையை படைத்திருக்கிறது. இது ஒரு தனிமனித சாதனையல்ல. வாசகர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் ஆகியோர் அனைவரதும் கூட்டுமுயற்சி என்பதை நாம் பணிவோடு பதிவுசெய்ய விரும்புகிறோம்.

இந்த நீண்ட பயணத்தின் சாட்சியங்களாக நீங்கள் ஒவ்வொருவரும் இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் எமது நன்றியுடன்கூடிய வணக்கங்கள். எதிர்வரும் காலத்திலும் எமது இலக்கியப் பணிசிறக்க உங்கள் ஆதரவை வேண்டிநிற்கிறோம்.

250 இதழ்கள் கடந்த நிலையில் திரும்பி நோக்குகையில் எமக்கு மலைப்பாக உள்ளது. தமிழ்பேசும்மக்கள் வாழ்கின்ற அத்தனை நாடுகளிலிருந்தும் எழுதிய எழுத்தாளர்களின் படைப்புகள் – ஆயிரக்கணக்கான கவிதைகள், கட்டுரைகள், ஆயிரத்துக்கும் அண்மித்த சிறுகதைகள், நூற்றுக்கும் மேற்பட்ட அட்டைப்பட அதிதிகள், 65க்கும் மேற்பட்ட நேர்காணல்கள், என நீண்ட கனதியான உள்ளடக்கப் பட்டியலை நாம் ஞானத்தில் காணமுடிகிறது.

நவீன தமிழ் இலக்கியத்தின் அத்துணை பரிமாணங்களையும் ஞானத்தின் இதழ்கள் அவ்வப்போது தொட்டுவந்துள்ளன. அதேவேளை, ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியப் பெருமைகளையும் நாம் அவ்வப்போது பதிவுசெய்து வந்துள்ளோம். ஈழத்து இலக்கியத்தின் சமகாலச் செல்நெறியாக விளங்கிய போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் உள்ளடங்கலாக, கொரோனா வரையிலான அனைத்துக் கருப்பொருள்களையும் ஏதொவொரு இலக்கியவடிவத்திலே ஞானம் இதழ்கள் ஆவணப்படுத்தியுள்ளன. அதுமட்டுமன்றி எமது பயணத்தின் மைற்கற்களாக அமைந்த 50, 100, 150, 175, 200, 250ஆவது சிறப்பிதழ்கள் அனைத்தும் ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியின் சமகால ஆவணப்பதிவுகளாக அமைந்தன. எதிர்காலத்தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிப்போக்கினை ஆய்வுசெய்வோர் நாம் வெளிக்கொணர்ந்த இந்த சிறப்பிதழ்களைத் தவிர்த்துச் செல்ல முடியாத நிலையுள்ளது.

புத்தாயிரம் ஆண்டு தொடங்கி ஈழத்து இலக்கிய வரலாற்றை துணியமுனைவோருக்கு ஞானம் இதழ்களும் வழிகாட்டியாக அமையுமானால் அது ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் பணிக்கு கிடைத்த வெற்றியாகவே கொள்ளலாம். அடிப்படையிலே சிற்றிதழ்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழவேண்டும். அப்பணியை ஞானம் சிறப்பாக – மிகச்சிறப்பாகவே செய்துள்ள திருப்தி எமக்கு ஏற்படுகின்றது.

இது நாம் வந்த பாதை....

இனிவரும் காலத்திலே ஈழத்து இலக்கிய உலகிற்கு ஞானம் ஆற்றவேண்டிய பணிகள் எவை? என்ற வினாவை முன்வைக்கும்போது அதற்கான விடைகளாக நீண்டதொரு பட்டியல் எம்முன் விரிகின்றது.

அவற்றுள் நாம் உடனடியாகச் செய்யக்கூடிய பணிகள் எவை? என்கின்றபோது **நான்கு பணிகள்** எம்மால் அடையாளம் காணப்பெற்றன.

**(1) ஈழத்து இலக்கியத்தின் காலக்கண்ணாடியாக தொடர்ந்தும் இயங்குதல்** – இதுவரைகாலம் ஞானம் ஆற்றிவந்த இலக்கியச் செயற்பாடுகளை மேலும் செழுமைப்படுத்தி தொடர்ந்து இயங்குதல். இது ஞானம் சஞ்சிகைச் செயற்பாட்டின் அடிப்படை நோக்கமாக அமைகின்றது.

இவற்றுள், மூத்த தலைமுறையினரையும் இளந்தலைமுறையினரையும் ஞானம் என்கிற தளத்திலே

சங்கமிக்கவைத்து இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டல், ஈழத்தமிழர்களுக்கும் புலம்பெயர்ந்த தமிழர் களுக்கும் இடையே இலக்கியப் பாலமாக அமைதல் போன்றனவும் அடங்கும்.

**(2) அடையாளப்படுத்தல்** – கடந்த 20 ஆண்டுகால ஈழத்து இலக்கியம் இதுவரை கண்டிராத வேகமான மாற்றங்களைக் கண்டுவருகின்றது. வகைமை, வடிவம், கருப்பொருள், வெளியீட்டு முறைமை, ஆகிய கோணங் களில் இந்த வேகமான மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன.

போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், போருக்குப் பின்னரான இலக்கியம், புலம்பெயர் இலக்கியத்தின் மடைமாற்றம், கொரோனா இலக்கியம் எனப் பல கருப்பொருள்கள் சார்ந்த படைப்புகளை இந்த இருபது ஆண்டுகாலத்திலே காணமுடிந்தது. இது கருப்பொருள் கண்டுவரும் வேகமான மாற்றங்கள்.

அடுத்து, இலத்திரனியல் சமூக வலைத்தளங்கள் பாரியதொரு வேகமான மாற்றத்தை இலக்கிய வடிவங் களிலும் வெளியீட்டு முறைமைகளிலும் ஏற்படுத்தி வருகின்றன. ஒரு படைப்பை வெளியிடுவதற்கு "எடிட்டர்" இல்லாத – தரநிர்ணயம் செய்யப்பெறாத வெளியீட்டுத்தளங்களாக இந்த வலைத்தளங்கள் இயங்கி, அனைவரும் "எழுத்தாளர்களாகின்ற" நிலை ஏற்பட்டுவருகின்றது. இதன்பயனாக பட்டியல்படுத்தமுடியாத எண்ணிக்கை யிலே படைப்புகளும் நூல்களும் தினந்தினம் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. அயல்வீட்டிலே உள்ளவர் வெளியிட்ட நூல் பற்றிய விபரத்தை தெரிந்துகொள்ளும் முன்னதாக புற்றீசல்களாகப் புத்தம்புதிய நூல்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

இந்தநிலை தொடரப்போகின்றது. இந்த வேகமான மாற்றங்கள் ஈழத்து இலக்கியத்திலே ஏற்படுத்தப் போகின்ற தாக்கத்தை இன்னும் 20 ஆண்டுகளின் பின்னரே நாம் சரிவர அடையாளம் காணமுடியும்.

இந்த நிலையிலே ஓர் இலக்கிய அளவீடாக எழுத்தாளர்களுக்கான **ஒரு போட்டியை ஞானம் நடத்தத் தீர்மானித்துள்ளது.** இதன் வாயிலாக கடந்த 20 வருட காலத்திலே (2000–2021) ஈழத்து இலக்கியப் பரப்பிலே அச்சுவாகனம் ஏறிய நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை பிரிவுகளில் தரமான நூல்களை அடையாளம் காண முயல்கிறது.

**(3) ஈழத்துப் பழந்தமிழ் சார்ந்த ஆய்வுகள்** – கடந்த சில ஆண்டுகளாக, ஈழத்துப் பழந்தமிழ் சார்ந்த ஆய்வுப்பரப்பிலே தொய்வுநிலை ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இந்த நிலை மாறவும், ஆய்வு மாணவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும் நோக்குடனும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலே ஈழத்துப் பழந்தமிழ் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் ஒரு போட்டியை ஞானம் நடத்துகின்றது.

**(4) ஊக்கப்படுத்தல்** – இலக்கியப் பரப்பிலே சிறுசஞ்சிகைகளின் வகிபாகம் ஞானத்தால் நன்கு உணரப்பெற்ற ஒரு விடயமாகும். சமகாலத்திலே வெளிவருகின்ற ஈழத்துச் சஞ்சிகைகளின் பணிகளை அங்கீ கரித்து ஊக்கப்படுத்தும் முகமாகவும் ஞானம் ஒரு போட்டியை நடத்துகின்றது.

இங்கே குறிப்பிட்ட ஞானம் செய்கின்ற **உடனடி செயல்முறைகள்** யாவையும் காலத்தின் தேவையாகவே நாம் கருதுகின்றோம். இவை நாமாகவே நம் தோள்களின்மீது ஏற்றிக்கொண்டுள்ள சுகமான சுமைகள். இங்கு குறிப்பிட்ட போட்டிகளுக்காக மாத்திரம் இலங்கைப் பணம் ரூபாய் மூன்று இலட்சத்தை 2021ஆம் ஆண்டிலே ஞானம் ஒதுக்கியுள்ளது.

ஞானம் 1ஆம் இதழிலே "இக்கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடரவிழைகிறோம்" என்று குறிப்பிட்டு காலடி எடுத்து வைத்த நாம், 250ஆவது இதழைத் தொட்டிருக்கும் இத்தருணம்வரை எமது ஆரம்ப நோக்கத்திற்கிணங்க இயங்கிவந்துள்ளோம். தற்பொழுது, ஈழத்து இலக்கியத்திலே ஆங்காங்கு ஒளிபாய்ச்சிக் காட்டி திசைமுகப்படுத்தவேண்டிய பொறுப்பும் எமக்குச் சேர்ந்துள்ளதாக உணர்கின்றோம். அவ்வுணர்வுடனேயே நாம் இயங்குகின்றோம்.

குளத்தின் வெளியிலே நின்றவாறு குளத்திலே நீந்தும் வாத்து ஒன்றினை நோக்குபவர்களுக்கு, வாத்து எத்துணை அமைதியாகவும், சீராகவும் நீந்துவதாகத் தோற்றம்தரும். அது தன்னளவில் பெரியதொரு முயற்சி எடுப்பது வெளியே தெரிவதில்லை. வெளியே நின்று பார்க்கும்போது நாமும்கூட இலகுவில் இவ்வாறு செய்துவிடலாமோ என எண்ணத்தோன்றும். ஆனால், நீருக்குள் சென்று, அந்த வாத்தின் கால்களைப் பார்ப்பவர்களுக்கு மாத்திரமே, மேற்புறத்திலே வெளித்தெரிகின்ற சீரான அமைதியைப் பேணுவதற்கு எத்துணை தூரம் தன்னுடைய கால்களை வேகமாக அந்த வாத்து இயக்கிக்கொண்டிருக்கின்றது என்ற உண்மைநிலை தெரியவரும். இந்த உதாரணமானது ஈழத்திலே தமிழ் இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து செய்துவருகின்ற அனைத்து இலக்கிய சஞ்சிகைகளுக்கும் பொருந்தும். ஞானத்துக்கும் இது பொருந்தும்.

**பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!**

# யாரென்று.... பார்க்கிறாய்?

– மைதிலி தயாபரன்



பிரிவினை என்பது
பிறப்புடன் சேர்ந்தது..
ஆணென்றும் பெண்ணென்றும்
அடுத்துணர வைத்தது
தலைப்பிள்ளை ஆண்பிள்ளை
பெற்றவளுக்குத் தோஷமில்லை..
தத்தி நடந்த வேளைமுதல்
தடுமாற்றம் தொடங்கியது
சுவையான கறியிலும் இல்பாகம்
கழுவும் எச்சிற்தட்டு மணம்குடிக்கும்
பசுமை நினைவுகளன்றிய பால்யம்
அத்தனையும் களைந்தெடுத்து
கல்வியில் உயர்ந்தாளவள்
அப்பாவின் தொழிலிருக்கு அண்ணாவுக்கு
கல்வியின்றேல் கவலையில்லை
பெற்றவர்களின் பேச்சு கேட்டது

பருவந்தந்த பொல்லாத பலவுள
பாராதே, பேசாதே, நடக்காதே
அறிவுரைகள் பல அவளுக்கு
குடும்பமானம், குலவிளக்கு
எத்தனையோ நற்பெயர்கள் ஏறிமிதிக்க
அத்தனையும் கடந்த அறிவுத்தேடல்
படிப்பு, பட்டம், நேர்முகத் தேர்வு.
இவர்களும் வருகிறார்களோ.!
ஏளனப் பார்வைகள்
தன் காலில் நிற்க
தனக்கொரு வாகனத்திற்கு
சாரதி அனுமதிப்பத்திரம்
ஆயிரம் கேள்விகள், நக்கல்கள்
அடித்துப்பிடித்து வெற்றி..
கழுதை வயது வந்துவிட்டதே
கல்யாணம் இல்லையா... ?
சில நாரதர்கள், பல நலன்விரும்பிகள்
சந்தையில் மாட்டை நிறுத்திய
ஆய்வாளர்கள் அவைகூடியது
பட்டம், பதவி, வேதனம்
பலதும் உண்டு ஆணுக்கு
புறக்கணிக்கத்தக்கதாம் அவளது

சந்தை முடிந்தது அரவமடங்கியது
சத்தமில்லாமற் கால்வைத்தால்
புகுந்தவீடு
தறிகெட்டுத் திரியும்போது தெரிவதில்லை
“தாயிற் சிறந்ததொரு கோவிலில்லை.”
திருமணத்தின் பின்பு - ஆடவனுக்கு
அன்னை சொன்னாற்தான் அன்னம்..
அநியாயத்துக்கு நடிப்பு.. ?
“வேலைக்குப் போகும் சாக்கில்
வீட்டு வேலைக்கு முழுக்கு”
மாமியாரின் புதிய கண்டுபிடிப்பு
அனைத்தையும் தாண்டிய புன்னகை
நடிப்பில் இன்னொரு பாணியோ.?

திருமணத்திலிருந்து நாட்கணக்கு
“இன்னும் இல்லையா பிள்ளைகள்?”
சுமந்தவைகளையும் தாங்கும்
சுமைகளே..
அடுத்தடுத்து நான்கு பிள்ளை
அதற்கு மேலும் வேலைத்தொல்லை..
பகுத்தறிவில் ஏனோ பஞ்சங்கொண்ட
புதினக்கோமாளிகள் அவளுக்கு மேல்
“படித்தவர்களா?”
பலதடவை எழுந்த கேள்வி
சுலபமாகத் தட்டுவதற்கு
சுமக்கும் சுமையெலாம் அடுக்கு
அப்பப்பா என்ன அக்கறை ..!
வீழேன்.! சாயேன்.! விட்டுவிடேன்.!
திரும்பிப்பாரென் காற்சுவட்டை
வீராப்படையும் வேளைபோக
வெட்கிக் குனியும் நேரமெலாம்
விடாது கொட்டும் விழிநீரருவி

கல்விக்கண் திறப்பதற்கு
தானே மாயவேண்டும் தினமும்
பெண் என்பதாற் கண் அல்லவா.!
தயக்கமின்றிய மனக்கிடக்கை
“நாடு மாறினும் நாள் மாறினும்
நாம் மாறோம்”
வெற்றியை நோக்கிப் போவதானால்..
விடமும் விருந்தாகும் வாழ்க்கையிது
முடிவாக பலன் கிடைத்தது.
முழுமாநிலமும் சொல்லிமுடித்தது
“தந்தை மகற்காற்றும் கடமை
தவறாமல் நிகழ்ந்ததாம்”
அடைமொழியில் அவர்பெயரன்றோ!
ஆருக்குத் தெரியும் அவளின் பணி
அப்போதுமே மௌனப்புன்னகை அது
அவளி(னி)ன் வெற்றிப்புன்னகை..
ஆயிரம் அர்த்தத்துடன் அவள்பார்வை
அன்னவளை... ஆனவளை....
அனைத்தையும் சுமந்தவளை
அகத்தினில் அக்கினிகொண்டும்
உறங்கிநிற்கும் எரிமலையாய்
அழகுவதனம் கொண்டவளை..
அண்டம் போன்று அனைத்தையும்
அணைத்து புன்னகையால்
அடக்கியவளை
யாரென்று நினைத்து... நீ
பார்க்கிறாய்..?






தேவகி
கருணாகரன்

அன்று சனிக்கிழமை, வாசல் கதவுமணி அடித்தது. கணவர் முரளியும் வீட்டில் இல்லை. மீனா ஆவலோடு ஓடிப்போயக் கதவதைத் திறந்தாள். அவளுடைய சினேகிதி ரேணுவைக் கண்டதும் சந்தோசத்துடன், வா, வா எனக் கையைப்பிடித்து உள்ளே அழைத்துக்கொண்டு வந்தாள்.

“உன்னைக் கனநாளாக் காணயில்லை. ஒருக்கா எப்படி இருக்கிறாய் எண்டு பாத்திட்டுப் போவம் எண்டு கிளம்பிவந்தனான்.” என்றபடி கதிரையில் அமர்ந்தவள் மீனாவின் அழகான மாநிறமுகம் வாடியிருப்பதைக் கவனித்துவிட்டு,

“மீனா ஏன் சோர்ந்துபோயிருக்கிறாய். உன்னுடைய பிரச்சனைதான் என்ன?”

“எல்லாத்தையும் சொல்லுறேன். முதல்லே இரண்டு பேருக்கும் டீபோட்டுக் கொண்டுவாறன்” என்றவள் உள்ளேபோய் இரண்டு கப்பில் கிறீன்டீ போட்டுக்கொண்டுவந்து ரேணுவுக்குக் கொடுத்துவிட்டு தானும் டீயைக் குடித்தபடி,

“ரேணு எனக்குமட்டும் ஏன் இப்படிப்பட்ட வாழ்க்கை,. இங்கு சிட்னிக்குப் புலம்பெயர்ந்தபின் கஸ்டப்பட்டு ஆங்கிலம் படித்துவிட்டு பிறகு லாப் அசிஸ்டன்டுக்குப் படித்து வேலையானேன். அம்மாவும், புரோக்கர்மார் பின்னாலே அலைந்து திரிந்து எனக்கு இந்தக் கல்யாணத்தைச் செய்துவைத்தா. நானும் நல்ல வாழ்க்கை அமைந்துவிட்டது என மகிழ்ந்தேன். மூன்று வருசம் முரளியும் நானும் சந்தோசமாகத்தான் வாழ்ந்தோம். கடந்த இரண்டுவருசமா அவர் குடித்துப்போட்டு வீட்டைவந்து கத்துறதும் என்னை அடிக்கிறதும் வழக்கமாயிட்டுது, நான் இரவில் அழுது அழுது நித்திரை இல்லாமல், கிடந்துவிட்டு காலையிலே உடல் அலுப்போடு வேலைக்குப்போவேன். இப்ப என்னடா என்றால் நான் மலடியாம், என்னோடு வாழமுடியாதாம். விவாகரத்து கேட்கிறார். நான் என்ன செய்வேன் ரேணு!!” என மேசைமேல் தலையைக் கவிழ்த்துக்கொண்டு விம்மிவிம்மி அழுதாள்.

ரேணு அவள் தலையைத் தடவியபடி, “அழாதே, என்ன செய்வது விதி எங்கள் வாழ்க்கையைப் புரட்டிபோடுது. மீனா, முரளி ஒரு சீனப்பெண்ணோடு திரிகிறான் எண்டு சொன்னியே. அதைப்பற்றி............?”

ஞானம்

ஆறுதல் பரிசு

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி 2020



"ஓம் ஓம், அந்தச் சீனப்பெட்டையோட சனிஞாயிறு தங்கிவிட்டுவாறார். சீனத்தி பிரெக்னன்டாம். என்னை விவாகரத்து செய்திட்டு அவளைக் கட்டப்போறாராம்."

"அப்படியோ? வேறு ஒருத்தியிட்டே போறவனோடு என்ன வாழ்க்கை! விவாகரத்தை குடுத்திட்டு. நீநிம்மதியா இருக்கலாம்."

"ஐயோ நான் டிவோசியா போவேன். இங்கே இருக்கிற எங்கள் சனம் எப்படியெல்லாம் முதுகுக்குப் பின்னாலே கதைப்பார்கள்."

"நீ என்ன அந்தச் சனங்களுக்காகவா வாழுறாய். முரளி உன்னோடு தாம்பத்திய வாழ்க்கை வாழுறானா? இல்லையே. அவனில்லாவிட்டால் என்ன? உனக்கு உத்தியோகம் இருக்கு அவனை நம்பி நீ வாழத்தேவையில்லை. நானும்தான் உள்நாட்டுப் போர்மூட்டம் அப்பாவை இழந்திட்டு அம்மா, தம்பிமாரோடு சிட்னிக்கு வந்துசேர்ந்தேன். நான் வேலைசெய்து தம்பிமாரைப் படிப்பித்துவிட்டேன். அம்மாவும் போய்ச்சேர்ந்தபின், தனித்து நின்ற எனக்கு தம்பிமார் கல்யாணம் செய்துவைப்பினம் என நினைத்தேன். ஆனால் அவர்கள் என்னைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு தம்பி குஜராத்தி பெண்ணையும், மற்றவன் ஒரு அவுஸ்திரேலிய வெள்ளை பொம்பிளையையும் கல்யாணம் கட்டி உல்லாசமாக இருக்கினம். நான் தனியச் சீவிக்கிறேன். தம்பிமார் என்னட்டவந்து போறதுகூட இல்லை. ஆனால் பணக்கஷ்டம் வந்தால்மட்டும் ஓடிவருவினம். அக்கா! எனப் பாசமாக அழைத்ததும் மனம் இளகி காசைக்குடுத்திடுவேன். அவர்களுடைய ரிசேர்வ் பாங்க் நான்தான்." என்று தன் மனதிலிருந்த ஆதங்கத்தைக் கொட்டினாள் ரேணு.

"ஓம் நீயும் பாவம்தான். ஏன் ரேணு நீ வேலைக்குப் போறாய்வாறாய். உனக்குப் பிடித்தவர் அமைந்தால் கல்யாணம் கட்டுறதுதானே?"

"நான் விரும்பி என்ன பிரயோசனம். என்னை ஒருவர் விரும்பவேணுமே. என்னைப்பார்? போலியோ வந்து ஊன்றுகோல் பிடித்துக்கொண்டு காலை இழுத்துஇழுத்து நடக்கும் என்னை ஆர் விரும்பி கட்டப்போறாங்கள். தாய்தகப்பன் இருந்திருந்தால், சீதனமும் இருந்தா புரோக் கரைக் கொண்டு பேசிக்கீசி எனக்குக் கல்யாணம் செய்துவைச்சிருப்பினம்."

"ம்....ம்....ம். முரளியைப்போல ஒருவன்தான் வந்துவாய்ப்பான். எனக்கு சீதனமாகக் குடுத்த ரொக்கக்காசை விவாகரத்தின்போது திருப்பித்தரச்சொல்லி முரளியிட்ட கேள்எண்டு அம்மா சொல்லுறா. இதை லாயர்ட்டச் சொல்ல அவர் அது என்ன டவுரி. அப்படி தான் கேள்விப்படவில்லையாம். ஏதாவது எழுத்திலே இருக்கா என்று கேட்கிறார்."

"அப்படியோ?"

"அம்மா சொல்லுறா ஊரிலே யாழ்ப்பாணத்து தேசவழமையின்படி கலியாணம் ரிஜஸ்டர் பண்ணும்போது சீதனம் இவ்வளவு எனப் பத்திரத்திலே எழுதப்படுமாம். கலியாணமானவர்கள் பிரிந்தால் சீதனமாகக் குடுத்ததை கணவர் மனைவிக்குத் திருப்பி குடுத்திடவேணுமாம். இங்கே அந்த தேசவழமை செல்லாது என்று அம்மாவுக்குச் சொல்ல, அவ தன்தலையிலே அடித்து போச்சு!போச்சு! உண்ட அப்பா சேர்த்து வைத்தகாசு துலைஞ்சுப்போச்சு என ஒப்பாரிவைக்கிறா."

"உண்ட அம்மாவை நினைத்தா வருத்த மாயிருக்கு. நாங்களும் என்னபாவம் செய்தோமோ? ஆறுதல் சொல்ல ஒருவரு மில்லாமல் தவிக்கிறோம். ஆ மீனா நான் பேஸ்புக்கிலே இருக்கிறேன். நீ இருக்கிறீயா?

"இல்லை ஏன்?

"நான் இருக்கிறேன். மேரி எண்ட புனை பெயரையும் உருவரைப் படிவத்தில் (profile) ஒரு குழந்தையின் படத்தையும் போட்டிருக் கிறேன். என் அடையாளத்தை மறைத்திருப்பதால் கூச்சப்படாமல் என் வேதனைகளை அதில் கொட்டித் தீர்ப்பேன். அதில் ஒரு ஆறுதல் கிடைக்கிறது. சிலபேர் தங்கள் கவலைகளை சொல்லி எனக்கு ஆறுதலும் சொல்வார்கள். ஆனால், அனஸ்டேசியா என்ற ஒரு பெண் சொல்லும் அறிவுரைகள் எனக்கு பிரயோச னமாகவும் ஆறுதலாகவும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் ஏற்படுத்துகிறது. நீயும் பேஸ் புக்கில் பதிந்துக்கொள்ளேன்." என்றாள்.

"அனஸ்டேசியா! அழகான பெயர். எந்த நாட்டை சேர்ந்தவள்?

"கூகுளில்போய் பார்த்தேன் அன்ஸ்டேசியா ருசியா நாட்டுப்பெயர். உருவரைப் படிவத்தில் (profile) ஒரு அழகான குழந்தையின் போட்டோ மட்டும் போட்டிருக்கிறா, சரி நான் வாறேன். முரளி எப்பவருவார்?"

"வந்தநேரம் கண்டுகொள்ள வேண்டியது தான்" என சலிப்போடு சொன்னவள், வாசல் வரை சென்று சினேகிதியை வழியனுப்பி வைத்தாள் மீனா.

மீனாவும் பேஸ்புக்கில் ரீட்டா என்ற பெயரில் ஒருபூங்கொத்தின் படத்தோடு பதிந்துகொண்டாள். குறிப்பின்றி தேர்ந்து மூன்று பெண்களுக்கும் கூடவே அனஸ்டேசியாவுக்கும் ஃப்ரெண்ட் அழைப்பு விடுத்தாள். தன் உண்மையான அடையாளத்தைப் போடாததால் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் தனது நிலைமையையும், தான் அனுபவிக்கும் மனவேதனையையும் அதில் எழுதினாள். ரேணுவிடம் கூடச் சொல்லாமல் தேக்கி வைத்திருந்த கவலைகளை அதில் கொட்டித் தீர்த்தாள். அனஸ்டேசியாவும் உடனேயே அழைப்பை ஏற்றுக்கொண்டு மீனா பேஸ்புக்கில் எழுதியதை எல்லாம் வாசித்துவிட்டு, ஒருநாள் மீனாவுக்கு பேஸ்புக் மெசெஞ்சரில்,

"ரிட்டா உமது கணவர் உம்மிடம் விவாகரத்து கேட்கிறார், வேறு ஒரு பெண்ணை விரும்புகிறார் என்னும் தாழ்வு மனப்பான்மையும் பாதுகாப்பற்ற மனநிலையோடு இருக்கிறீர்கள். இந்த வருத்தம் உமது மனதில் நிறைந்திருக்கிறது. அதில் இருந்து நீர் வெளியேவர வேண்டும். உமக்கும் எனக்கும் தலைக்குமேல் ஒரு கூரை இருக்கிறது. எங்களுக்கு கைகால் இயங்கிக்கொண்டிருப்பதால் வேலைக்குப்போய் சம்பாதித்து எமக்கு வேண்டியதை பெற்று கொள்ளக் கூடியதாகவிருக்கிறது. வயிறார சாப்பிடுகிறோம். விதவிதமா உடை அணி கிறோம். இது ஏதுவுமே இல்லாமல் பட்டினி கிடக்கும் ஏழைகளையும் நோய், நொடியோடு கிடந்து அழுந்தும் மனிதரையும் நினைத்துப் பார்த்தால் உமது வாழ்க்கையின் அருமை புரியும். உமது வாழ்க்கையில் உள்ள பொசிடிவ் விசயங் களை ஆறுதலாக இருந்து யோசித்து பாரும்." என எழுதியிருந்தார்.

மீனாவும் அனஸ்டேசியா சொன்னதைப் பலதடவை தன்மனதில் ஓடவிட்டாள்.

"அனஸ்டேசியா, தனது அடுத்த மெசெஜில், "கைகால்கள் இழந்த மாற்றுத் திறனாளிகளை நீர் நேரில் பார்த்திருப்பீர்தானே. கண்பார்வை இழந்தவர்கள், ஊமைகள். இவ்வளவு குறைகளோடு அவர்களும் வாழ்கிறார்கள்தானே. இப்படிப்பட்டவரை உம்முடைய அன்றாட வாழ்க்கையில் பார்த்திருப்பீர்தானே. கடவுள் உமக்கு அப்படிப்பட்ட குறைகள் வைக்க வில்லையே. ஆகையால் உம்மிடம் இருக்கிற வற்றின் மதிப்பை உணர்ந்து மகிழ்வோடு இருக்கப்பாரும். என் வாழ்க்கை இப்படியா போயிட்டுதே என அழுது வாழ்வை வீணாக் காமல் இருக்கிறதை கொண்டு மனநிறைவோடு வாழப்பழகிக் கொள்ளும்," என எழுதியிருந்தாள்.

ஒரு வாரத்திற்குப்பின் அனஸ்டேசியா பேஸ்புக் மெசெஜில், "ரீட்டா உம்மை பிடிக்காத கணவர், வீட்டுக்கே வராத கணவரோடு வாழ்ந்து என்ன பிரயோசனம். உங்களுக்கிடையே எந்தவித உறவுமில்லையே, பாலியல் உறவுமிராது என நினைக்கிறேன். அவன் கேட்கிற விவாகரத்தை குடுத்திடு. நீர் இந்த 21ஆம் நூற்றாண்டு பெண். உம்மாலே தனியே சந்தோசமாக வாழமுடியும். சந்தோசம் என்பது மனதைப் பொறுத்தது. உமது தோற்றத்தை விரும்புகிறவனும் உமது மனதைப் புரிந்தவனையும் ஒருநாள் நீர் சந்திக்கலாம். உமது எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கைவையும்.

உமக்கு ஒரு பிள்ளை வேணுமென்றால் ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளும். உமது தனிமைக்கு மருந்தாக இருக்கும். ஒரு பிள்ளைக்கு வாழ்வுகொடுத்த மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்கும்." என எழுதியிருந்தாள்.

அனஸ்டேசியாவின் வார்த்தைகள் மீனாவுக்கு புத்துணர்ச்சியூட்டியது மீனா இப்போது புதுதெம் போடு வேலைக்குப் போய்வந்தாள். முரளியின் விருப்பப்படி விவாகரத்துக்குச் சம்மதித்து ஆறுமாதத்தில் விவாகரத்தும் கிடைத்தது. ஒரு குழந்தையை, தான் பிறந்த மண்ணான யாழ்ப்பாணத்திலிருந்து தத்தெடுப்பதற்கு வேண்டியதைச் செய்வதில் ஆசையோடு மும் முரமாக ஈடுபட்டாள்.

ரேணுவிற்கும் அனஸ்டேசியா பேஸ்புக் மூலம் பல மெசெஜ்கள் எழுதியிருந்தாள். அதில் கடைசியாக, "ரேணு உமது தனிமை உம்மை எவ்வளவு வாட்டுகிறது என எனக்கு விளங்கு கிறது. நீர் உமது தாய் சகோதரர் என வாழ்ந்த போது, தனிமை உம்மை வாட்டவில்லை. இப்போது அவர்கள் உம்மோடு இல்லை என்றதும் நீர் தவிக்கிறீர். நீர் உமது ஓய்வுநேரங்களில் அநாதைப் பிள்ளைகள் பராமரிக்கிற ஒரு

அமைப்பிற்குப்போய் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்யலாமே. அல்லது அப்படி யான அமைப்பில் முழுநேர வேலையைத் தேடிக் கொள்ளும். உமக்குச் சம்பளமும் கிடைக்கும், அந்தப் பிள்ளைகளோடு சந்தோசமாகப் பொழுதும்போகும். அநாதைப் பிள்ளைகளுக்கு அன்புகாட்டுவதும், அவர்கள் முகத்தில் பிரகாசிக்கும் மகிழ்ச்சியும் அவர்கள் எங்கள்மேல் காட்டும் அன்புமே ஒரு தனிசுகம்," என நம்பிக்கை ஊட்டும் முகமாக எழுதியிருந்தாள்.

ரேணுவும் அநாதை பிள்ளைகள் பரா மரிக்கும் ஒரு அமைப்பில் மேட்ரன் வேலை தேடிக் கொண்டாள். இரவும் பகலும் குழந்தைகளோடு சந்தோசமாகப் பொழுதுகள் கழிந்தன. தனிமை என்ற சொல்லையே ரேணு மறந்துபோனாள்.

மீனாவும் ரேணுவும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். பேஸ்புக் சினேகிதி அன்ஸ்டேசியா வோடும் பேஸ்புக்மெசேஜிங்கில் அவர்கள் தொடர்பு தொடர்ந்தது. இருவரும் தங்கள் வாழ்க்கையிலும் உள்ளத்திலும் புத்துணர்வு கொடுத்த சினேகிதியை சந்திக்க விரும்பினர்.

"நீங்கள் இந்த உலகில் எங்கே வசிக்கிறீர்கள்? எங்களால் முடியுமானால் அங்குவந்து உங்களைச் சந்திக்க விருப்பப்படுகிறோம்," என மெசேஜ் பண்ணினார்கள். அடுத்தநாளே, தான் அவுஸ்திரே லியாவில் நியுவ்சவுத்வேல்ஸ் மாநிலத்திலுள்ள கட்டும்பா என்னும் இடத்தில் வாழ்வதாகவும், தனது விலாசத்தையும் அலைபேசி இலக்கத் தையும் கொடுத்து பதில் எழுதியிருந்தாள் அனஸ் டேசியா. இருவரும், கட்டும்பா தாங்கள் வசிக்கும் சிட்னியில்லிருந்து நூறுகிலோ மீட்டர் தொலைவில் இருப்பதை இட்டு சந்தோசப்பட்டனர். அலைபேசியில் அனஸ்டேசியாவோடு தொடர்புகொண்டு அடுத்து வருகிற சனிக்கிழமை மதியம் இரண்டுமணிக்கு அவளைச் சந்திக்க ஒழுங்குசெய்தனர்.

சனிக்கிழமை காலை பத்துமணிக்கு மீனா தன்காரில் ரேணுவையும் ஏற்றிக்கொண்டு கட்டும்பா நோக்கிச்செலுத்தினாள். காரின் பின் ஆசனத்தில் சிவப்பு ரோசாப்பூ கொத்தும் மீனா செய்த சொக்கலட்கேக்கும் இருந்தது.

சரியா இரண்டுமணிக்கு அனஸ்டேசியா வீட்டு வாசற் கதவுமணியை அடித்தனர். ஒரு வயதுபோன வெள்ளைக்காரப் பெண்மணி இனியமுகத்தோடு அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அனஸ்டேசியா வின் தாயாராக இருக்கவேண்டும் என அனுமானித் தார்கள். பேஸ்புக்கில் மெசென்ஞ்சராலே அவர்கள் வாழ்க்கைக்கு புது அர்த்தத்தையும் மனநிம்மதியையும் கொடுத்த அந்த அற்புதமான அருமையான பெண்மணியைப் பார்க்கப் போகிறோம் என்னும் ஆவலோடு உள்ளே சென்றனர். அந்த விசாலமான அறையின் ஒருபக்கத்தில் இருந்த மேசைமேல் ஒருகணினி. அதற்கு முன்னால், தெளிந்த மினுமினுக்கும் சிவந்த நிறதோலுடன், பிறைநெற்றியும் கருநீல கண்களும், கூர்நாசியும், தாராள சிவந்த இதழ்களும், அலையலையாக தோள்வரை தவழ்ந்த மென்சிவப்புநிற முடியுடனும் ஒரு அழகிய தேவதை அமர்ந்திருந்தாள். அவள் வாயில் பிடித்திருந்த குச்சியினால் கணினியில் டைப் அடித்துக்கொண்டிருந்தாள். அவர்களைக் கண்டதும் குச்சியை ஒருபக்கமா போட்டுவிட்டு, புன்னகைத்தபடி,

"வாருங்கள் வாருங்கள். வந்து இருங்கள். நீங்கள் என்னைப்பார்க்க வந்ததில் மிக்க மகிழ்ச்சி," என ஆங்கிலத்தில் கூறினாள். சோபாவில் அமர்ந்த மீனாவும் ரேணுவும் அவள் எழுந்து வருவாள் என எதிர்பார்த்தனர், ஆனால் அவள் எழவேயில்லை. அவள் தன்வாயினால் இயக்கப்பிடியை (joystick) இயக்க அவள் அமர்ந்திருந்த சக்கரவண்டி அவர்களை நோக்கி நகர்ந்தது. அருகே வந்தவள், "மேரி! ரீட்டா! ஆம் ஐ ரைட். நான் அனஸ்டேசியா. தாமதித்தற்கு சொறி," என நேர்த்தியான வெள்ளை முத்து வரிசைபற்கள் தெரிய பரந்த புன்சிரிப்போடு கூறினாள்.

இவ பிரபலமான 'மை லை∴ப்' என்ற ஆங்கில டெலிடிராமவிலே ஆட்டமும் பாட்டுமாக நடித்த கவர்ச்சி நடிகை கரோலின் அல்லவா?" என மெதுவாக ரேணு மீனாவுக்கு சொன்னாள்

"ஓம், ஒரு கார் விபத்......தில்....! இந்த ஐந்து வருசமா அந்த டிராமாவில் அவ நடிப்பதில்லையே? பதிலளித்தாள் மீனா.

பிரமிப்பில் பேச்சிழந்திருந்த மீனாவையும் ரேணுவையும் பார்த்து "இந்த ரோசாப்பூக்கள் எனக்கா?" என அனஸ்டேசியா கேட்க, மீனா எழுந்து பூக்களை அவள் மடியில் வைத்தாள். ரேணுவோ இன்னும் திகைப்பில் இருந்து விடுபடாமல் அமர்ந்திருந்தாள்.

○○○




பன்னெடுங் காலங்களுக்கு மேலான நீண்ட நாகரீக வரலாறு கொண்டவர்கள் தமிழர்கள்..! இவர்கள் கலைகள் பலவற்றிலும் வல்லமை படைத்து இனிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.

ஆடல், பாடல் போன்ற இன்கலைகளிலும் அதிக நாட்டம் கொண்டிருந்தனர்.

அழகிய பரதக்கலை இதற்குச் சான்று பகர்கின்றது.

கலைகளை அறுபத்து நான்காகக் கண்டு மகிழ்ந்தவர்கள் இவர்கள்.

காலத்திற்குக் காலம் ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் ஏற்பட்ட கலை வளர்ச்சியும், மன்னர்களின் ஆர்வமும், ஆதரவும் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும், காவியங்களாகவும், கல்வெட்டுகளாகவும் நின்று இன்றும் காட்சிப்படுத்துகின்றன.

கோவில் கோபுரங்கள், அரண்மனைகள், கோட்டைகள் ஆகியவற்றில் அழகிய சிற்பங் களையும், எழில் ஓவியங்களையும் அதிகம் காணலாம்.

கட்டிடக் கலையின் நுட்பங்களையும், உயிரோட்டமான எழில் சிற்பங்களையும் இந்துக் கோவில்களில் இன்று நாம் நின்று பார்த்து ரசிக்கிறோம்.

கட்டிடக் கலையில் வல்ல எமது முன்னோரின் தொழில் நுட்பங்களை அண்ணாந்து பார்த்து வியக்கின்றனர் மேலைத்தேச தொழில்நுட்பவியலாளர்களும் விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்களும்..

எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் அறிவியலில் இவ்வளவு உச்சம் பெற்றுள்ளதை வான சாஸ்திரக்கலை, சோதிடக்கலை இன்றும் சான்று பகர்கின்றது.

“சோதிடம் பொய்யானால் கிரகணத்தில் பார்” என்பார்கள்.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் வரும் சூரிய சந்திர கிரகணங்களை கணித நுட்பத்தினால் முன்னரே கணித்துக் காட்டும் அறிவியல் மேம்பாடு தமிழனுடையது என்றால் மிகையல்ல...

இப் பல்கலை உணர்வுகளோடும் சிறப்புற்று வாழ்ந்த மக்களின் நலனில் அக்கறைகொண்ட முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் தங்கள் தவவாழ்வு மூலம் கண்டறிந்து கொடுத்த அரும்பெருங் கலையே யோகக் கலையாகும்.



**பத்மா இளங்கோவன்**
**(பத்மபாரதி)**

யோகம் என்றால் இரண்டறக் கலத்தல் - ஒன்று படுதல் - ஒருமித்த நிலை - மனம், எண்ணங்களை அடக்கி ஒருநிலைப்படுதலாகும்.

ஆன்மீக வார்த்தைகளில் சொல்வதானால் மனத்தைப் புருவ மத்தியில் நிறுத்தி எண்ணங்களற்ற - சலனமற்ற நிலையை உணர்தலாகும்.

ஆக்ஞாச் சக்கரத்தில் ஞான ஒளியைக் காணுதலாகும். அதாவது அறிவுக் கண்களைத் திறத்தலாகும்.

இதுவே மனம் ஒருநிலைப்படுவதைக் குறிக்கிறது. இந்த நிலையையே ஞானிகள் விரும்பி ஏற்று அமைதிகண்டு பேரானந்தம் கண்டனர்.

மேலும் மானிடரின் உலகியல் வாழ்விற்கு வேண்டிய மனநல - உடல்நல உயர்விற்கு வழிகாட்டும் பயிற்சி நெறிகளைக் கற்றுத் தருவதே யோகக் கலையாகும்.

இவ்வாறு மனித மூளையின் அமைதிக்கும் அதன் விருத்திக்கும் இந்த யோகப் பயிற்சி உதவி நிற்கிறது என்றால் வியப்பில்லை.

ஒரு மனிதன் முழு வெற்றிபெற முன் னின்று உழைப்பது மூளையே..

நமது எண்ணங்களைச் சீர்ப்படுத்திச் செப்பனிட்டுச் செயற்படுவதற்கு மூளைக்கு பேருதவி புரிகிறது யோகப் பயிற்சி.

மனம் சீரானால் உடல் சீராகிறது. உடல் சீரானால் மனம் சீராகிறது. இவை இரண்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்பு கண்கூடாகத் தெரிகிறதல்லவா...

உடல் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது மனம் மகிழ்வாக இருக்கமுடியாது. எனவே மனதையும், உடலையும் சீராக்கும் யோகக் கலை நாம் நோயற்று வாழ உதவுகின்றது என்பது வெள்ளிடைமலை.

யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு மனக் கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு ஓரளவு வேண்டும். அபபோதுதான் முழுமையான பயனை அடைய முடியும்.

இதற்குக் குடிப்பழக்கம், போதைப் பழக்கம் தவிர்க்கப்பட வேண்டும்.

“விட்டுக்கொடுத்தவன் தோற்றுப் போன தில்லை.” கட்டுப்பாட்டை விளக்கும் அழகான வாக்கியமிது.

“ஒருவேளை உண்பவன் யோகி.
இருவேளை உண்பவன் போகி.
மூன்று வேளையும் உண்பவன் ரோகி.”
பெருந்தீனி கேடு தரும்....

யோகப் பயிற்சி ஆரம்பிக்கும்போது மனம் உடல் தளர்வான நிலையில் - இறுக்கமற்ற நிலையில் இருக்க வேண்டும்.

நோய்கள் - வலிகள் உள்ளபோது யோகப் பயிற்சிகள் செய்வது தகாது.

ஒழுங்காக யோகப் பயிற்சிகள் செய்துவரும்போது மனம் நலமடைகிறது. உடல் நலம் பெறுகிறது. மனம் ஒரு நிலைப்பட்டு ஆசைகள் குறைந்து நல்ல குண இயல்புகள், பழக்க வழக்கங்கள் மெல்ல மெல்ல இயல்பாகவே விருத்தியடைகின்றன.

இவ்வாறே உடல் உறுப்புகளும் இலகுவாகி, உள்ளுறுப்புகளுக்கும் நல்ல இயக்கமும், ஒழுங்கான இரத்தச் சுற்றோட்ட மும் கிடைக்கிறது.

இதனால் உடல் பளபளப்பும், சுறுசுறுப்பும், இளமைத் தோற்றமும் கிடைக்கிறது. அத்துடன் சீரான உடல் இயக்கத்தினால் உற்சாகம், மகிழ்வான மனநிலை, மன அமைதி யாவும் கிடைக்கின்றன.

மேலும் நரம்புகள், தசைகள், தமனிகள் யாவும் நன்றாகத் தொழிற்பட்டு நாம் நோயற்ற வாழ்வு வாழ வழி கிடைக்கின்றது.

மனித குலத்திற்கே கிடைத்த அரும்பெரும் பொக்கிசமான இந்த யோகக் கலையை நம் மக்கள் பலரும் மறந்து போனமை துரதிஸ்டமே..

இன்று இக்கலையின் மகத்துவம் அறிந்த உலக நாடுகள் பலவும் இக்கலையைப் பயன்படுத்தி உயர்வடைகின்றன.

இதனாலன்றோ மேலும் விரிவடைந்து பயன் கொடுக்குமுகமாக, இதற்கு மதிப்பளித்து ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் யோகா தினமென ஒரு நாளைக் கொடுத்து கௌரவித்துக் கொண்டாடுகின்றார்கள்.

உலகச் சுற்றுசூழல் மாசுகளும், நோய்களும் மலிந்துள்ள இன்றைய காலகட்டத்தில், கூடவே கொரோனா நோயோடும் போராடும் மக்கள், மன நலத்துடனும், உடல் நலத்துடனும் வாழ விழிப்புணர்வு பெற்று யோகக் கலையின் மூலம் பயன்பெற வேண்டும்.

மனிதனின் சுகமான வாழ்வுக்கு நற் சிந்தனைகள், நற்செயல்கள், தூய காற்று, தூய நீர், சத்தான உணவு, தேவையான ஓய்வு, உடற் பயிற்சி மிகவும் அவசியம். அத்துடன் யோகப் பயிற்சியின் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுக் கொடிய நோய்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம்..

பாவனையற்ற இயந்திரங்கள் எவ்வாறு துருப்பிடித்து அழிகின்றனவோ, அவ்வாறு தான் மனிதவுடல், மனம், மூளை, உள் ளுறுப்புகள் என்பன பயிற்சியற்றுப் போனால் நோய்வாய்ப்பட்டுவிடும்.

ஓய்வுபெற்ற உடல் எவ்வாறு புத்துணர்வு பெறுகின்றதோ, அவ்வாறே ஓய்வினால் மூளையும் புத்துணர்வு பெறுகின்றது.

யோகப் பயிற்சியின் மூலம் புத்துணர்வு பெற்ற மூளை, திறம்படச் செயற்பட்டு எண்ணங்களைச் சீர்ப்படுத்தி, மனிதனை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது.

மிகச் சக்தி வாய்ந்த மனித மூளையின் நாற்பது வீதம்தான் சாதாரணமாக மனிதன் பயன்படுத்துவதாகத் தெரியவருகிறது.

யோகப் பயிற்சியின் மூலம் மன அமைதியைப் பேணி, மூளையின் சக்தியைப், பாவனையை மனிதன் இன்னும் அதிகம் பெற்று பயனடைய வேண்டுமல்லவா...

எண்ணங்களையும், ஆசைகளையும் குறைப்பதற்காக மனிதன் அன்றிலிருந்து அரும்பாடுபட்டு வருகிறான்.

இதற்காகவே புத்தர் போன்ற ஞானிகளும், துறவிகளும் தோன்றித் துறவின் மூலம் ஆசைகளைக் குறைக்க வழிகாட்டினர்.

இன்றைய சூழலில் யாவர்க்கும் அது சாத்தியமில்லைத்தான்...

இல்லறத்தில் இருந்துகொண்டே எளிய யோகப் பயிற்சிகள் செய்வதன் மூலம் சீரான வழி கிடைக்கிறது.

வயதானவர்களும், கால்களை நீட்டி மடக்கிப் பெரிய ஆசனங்களைச் செய்ய முடியாதவர்களும், தங்கள் நாற்காலி இருக்கைகளில் அமர்ந்தவாறே கண்களை மூடித் தியானிக்கலாம். முடிந்தவர்கள் சுலப மான பத்மாசனமிட்டுச் சின் முத்திரையில் அமர்ந்து தியானம் செய்தாலே போதும்.

மெல்ல மெல்ல உடலும் மனமும் இலகுவாகி, மேலும்மேலும் இப்பயிற்சிகளுக்கு இடங்கொடுத்து உடல், மன இயக்கத்தைச் சீர்ப்படுத்தி நோயற்ற வாழ்வு வாழ நம்மை அழைத்துச் செல்கிறது யோகா..!

நோய் வரமுன் நம்மைக் காத்து, மனவுறுதியுடனும் உடலுறுதியுடனும் இன்ப மயமான அழகிய வாழ்க்கை வாழ யோகக் கலை கைகொடுக்கும்..!

மனித சமுதாயம், விழிப்புணர்வு பெற்று யோகக் கலையைப் போற்றி வளர்த்து, உடல் உள ஆரோக்கியமான இனிய யோக வாழ்வை வாழ்ந்திடக் காண்போம்..!

○○○

# காதலெனும் மலர்வனம்

காதலெனும் மலர்வனம்
காத்திருப்பில் தினம்தினம்
கோர்த்து வைக்கும்
கற்பனைச் சரம்
பார்த்திருக்கும் பாதையிலே
பரவசங்கள் நிறைத்திருக்கும்
பாதச்சுவடு தேடி
பனிமலராய்க் கரைந்திருக்கும்

தூக்கத்தை மறந்திருந்து
ஏக்கத்தில் வாழ்ந்திருந்து
ஏகாந்த வேளையிலே
மோகத்தில் திளைத்திருக்கும்
மோதிடும் தென்றலிடை
முகவரிகள் கேட்டிருக்கும்
முகமலரைத் தரிசிக்க
முப்போதும் காத்திருக்கும்

விழியாலே கதைபேசி
களிகொண்டு ரசித்திருந்து
மொழியற்ற மௌனத்தில்
மொழிந்திடும் பலசேதி
இதயங்கள் இடம்மாற்றி
இனிமைகளைச் சுரந்திருக்கும்
உணர்வின் தாலாட்டில்
ஒன்றாகி இணைந்திருக்கும்

உணவும் கசப்பாகி
உறவும் பகையாகி
உலகம் எதிர்ப்பாகி
உயிரே காதலென
உறுதியுடன் நிலைத்திருந்து
இறுதிவரை தொடர்ந்திருக்கும்
காவியமாய் வாழ்வினிலே
ஓவியமாய் நிலைத்திருக்கும்

**– கீத்தா பரமானந்தன்**



சிறுகதை

# நிலையாது கலையும்

**ம**தன் பழைய நினைவுத் தடாகத்துள் வீழ்ந்து கிடந்தான். செந்திருவின் முகம் அத்தடாகத்துள் மிதந்து மிதந்து மறைந்தது. கூடவே எமாவின் வதனமும்.

மதனும் செந்திருவும் உறவினர்கள்தான் என்றாலும் இலங்கையிலுள்ள மதனின் வீடு செந்திருவின் வீட்டிற்கு அருகில் அமைந்திருந்ததுதான் அவர்களது நட்பிற்கு அடிக்கல் நாட்டியது. மதனின் அம்மம்மா இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவரைச் சந்திப்பதற்காக அம்மா வருடம் ஒருமுறையேனும் இலங்கைக்குப் போய் இரு வாரங்களேனும் அவருடன் தங்கியிருந்து வருவது வழக்கம். அவ்வாறு போகும்போது மதனோ அல்லது அவனது தங்கை குமுதாவோ அல்லது இருவருமோ சேர்ந்து செல்வார்கள்.

அம்மம்மா வீட்டில் அவர்களுக்கு விளையாட்டுத் தோழர்களாக செந்திருவும் சகோதரர்களும் வருவார்கள். ஆரம்பத்தில் அங்கிருக்கும்வரைதான் அவர்களது நட்புறவு இருந்துவந்தது. அங்கிருந்து விமானம் ஏறும்வரை அவர்களது நினைவுகள் தொடரும். அதன் பின்னர் அவர்களைப் பற்றிய நினைவுகள் மனதிலிருந்து மறைந்துவிடும்.

பிரித்தானியா வந்ததும் பள்ளித் தோழர்களுடனான ஆட்டம். கொண்டாட்டம். மதனுக்குப் பிடித்த தோழி எமா. அவள் ஆங்கிலேயப் பெண். மதன் ஆசைப்பட்டு வாங்கி வைத்திருந்த பொம்மை போன்றே இருந்தாள். அதனால் அவள் மீது அவனுக்கு ஈர்ப்பு அதிகம். எமா மதனின் பிரியமிகு தோழியாக இருந்துவந்தாள்.

காலம் செல்லச் செல்ல அவர்கள் வளர்ந்துவந்தார்கள். அரும்பு மலராகும்போது உருவ மாற்றத்துடன் அதனுள் அழகும் நறுமணமும் புகுந்துகொள்வதுபோல் அவர்களுள் அறிவாற்றல், செயல்திறன், மன உணர்வுகள் என்பனவும் வளர்ந்து உருமாற்றங்களை ஏற்படுத்தின. அந்த உடல் உள வளர்ச்சி, அவர்களுள் தீட்டிய விசித்திர உணர்ச்சிக் கோலங்களை அவர்களாலேயே புரிந்துகொள்ளவியலாத தடுமாற்றத்துள் சிந்தை சிக்கிவிட சரியான காரணங்கள் விளங்காது முடிவுகள் எடுக்க முடியாது தவிக்கும் பருவம்.

எமாவுடன் பொழுதுகளைக் கழிப்பதையே மதனின் மனது வேண்டி நிற்கும். ஏதோ ஒரு சாட்டைத் தேடிப்பிடித்து அவளருகிற்கு



யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மதனைக் கொண்டு சென்றுவிடும். இம்முறை அம்மாவுடன் இலங்கைக்குச் செல்வதையும் தவிர்த்துவிடத்தான் அவன் முனைந்தான். ஏனோ போகவே விருப்பமற்றிருந்தது.

அம்மம்மா அடுத்த முறை இவர்கள் வரும் போது தான் உயிரோடு இருப்பது சந்தேக மென்று பேரப்பிள்ளைகளையும் அழைத்து வருமாறு அம்மாவிடம் கூறிவிட்டதால் மதனும் போகவேண்டியதாகிவிட்டது.

அம்மம்மாவின் வீட்டிற்கு வந்து ஒரு முழுநாள் ஓடி மறைந்துவிட்டது. செந்திரு எங்கு மறைந்தாள் என்று தெரியவில்லை. அவளது சகோதரர்கள் இருவரும் வந் திருந்து பிரித்தானியா பற்றி ஏதேதோ கேட் டுக்கொண்டிருந்தார்கள். மதனுக்கு அவர் களைப்போல் தமிழில் சரளமாக உரையாட இயலவில்லை. ஒருவாறுசமாளித்தான். என்றாலும் அவன் கூறிய பலவற்றை அவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. அவர்கள் சொல்லியவற்றையும் அவன் அவ்வாறுதான் விளங்கிக்கொண்டான். இடையே செந்திரு ஏன் வரவில்லை என்றும் கேட்டுவைத்தான்.

அவன் கேட்ட பின்னர் வரலாம் என்று காத்திருந்தது போல் சிறிது நேரத்தால் அவள் வந்தாள். உள்ளே ஏதோ தேவையாக வந்த பாவனையில் சிறிது நேரம் கரைந்தது. அவனும் அவளைக் காணாதவன் போலவும் தேடாதவன் போலவும் கிடைத்த புத்தகமொன்றை வாசிக் கும் பாவனையில் அமர்ந்திருந்தான். எனினும் உள்ளே ஒரு குறுகுறுப்பு துடிப்பதை உணர்ந் தான்.

''தமிழ் புத்தகம் வாசிப்பீங்களா?''

ஆச்சரியத்தில் தோய்ந்து வந்த அவளது கேள்வி அவனைத் திடுக்குற வைத்தது.

தமிழ் வாசிப்பதா? ஓ! அவசரத்தில் தமிழ் புத்தகத்தை எடுத்து விரித்து வைத்திருந்திருக் கிறான். அவன் அடுத்த கணமே தன்னை சுதாகரித்துக்கொண்டு 'எழுத்துகள் நினைவிருக் கிறதா என்று பார்க்கிறேன். எப்போ வந்தீர்கள்? எங்கேயாவது போயிருந்தீர்களா? ஆளைக் காணவில்லையே?' என தவறைச் சமாளித்தவன், தொடர் கேள்விகளை அடுக்கி அவள் மேலும் வினாக்களைத் தொடுப்பதைத் தொடரவிடாது, உரையாடலைத் தொடர்ந்தான். நேரம் உரையாடலுடன் கலந்து கரைந்ததை இருவரும் கவனத்தில் எடுக்கவில்லை. அங்கு இருந்தவரை இவ்வாறான பல சந்திப்புகள் மகிழ வைத்தன.

புறப்படும் நாளன்று அவளுடைய முகத்தில் கவலையின் படிவு பரந்திருந்ததை அவன் கண்டுகொள்ளவில்லை. எல்லோருக்கும் ஒரே வகையான கையசைப்புத்தான் அம்மம்மாவை மட்டும் கட்டியணைத்து முத்தமிட்டு விடை பெற்றுக்கொண்டான். ஏமாற்றம் வந்து செந்திருவைக் கட்டிக் கொண்டது.

விமானம் ஏறிய பின்னர்தான் மதனின் மனத்தில் மென் திரையாக ஏக்கமொன்று கவிந்து வருவதான ஓர் உணர்வு தலைநீட்டி தானாய் மறைந்தது. செந்திருவின் நினைவு மதனை வாட்டியது என்று கூறவியலாது. வீட்டில் தனிமை கிடைக்கும் போதுகளில் ஏறெடுத்துப் பார்க்கத் தயங்கும் கண்களும் குறும்புப் பேச்சுமாக செந்திருவின் முகம் இடையிடையே நினைவில் தலைகாட்டும்

செந்திரு மதனின் ஒவ்வொரு பார்வைக்கும் அசைவுக்கும் ஏதேதோ அர்த்தமிருப்பதான கற்பனையில் காதலொன்றைக் கனவுகண்டு கொண்டிருந்தாள். அதற்கு அவளுடைய அம்மாவும் ஒரு காரணமே. அம்மாவுக்கும் மதன் தன் மருமகனாவான் என்ற எண்ணம் உள்ளே பொதிந்து கிடந்திருக்கவேண்டும். ''வெளி நாட்டிலை இருக்கிற எங்கடை பெடியள் இங்கைதான் பொம்பிளை எடுக்க விரும்புறாங்கள். அங்கை வளந்த பிள்ளையளை விரும்புறேல்லை.'' என்று அடிக்கடி அம்மா கூறுவது அவள் மதன் தன்னைக் காதலிக்கிறான் என்ற கற்பனையை வளர்க்கக் காரணமாகியது.

இடையிடையே நினைவிற்குள் வந்தாலும் எமாவுடன் பொழுதுகள் கழிவதால் மதனின் மனம் அவளை மறுகணமே உதறிவிட்டுவிடும். நாட்கள் செல்லச்செல்ல அந்த அருட்டல்களும் நின்றுபோனது.

அன்று எமாவைச் சந்திக்க நேரம் இருக்குமா என மதன் அலைபேசியில் தொடர்பு கொண்ட போது தனக்கு நேரமில்லை என அவள் கூறி விட்டாள். மதன் சிறிது நேரம் கணினியுடன் காலத்தைக் கடத்திப் பார்த்தான். வழமையாக அதனுடன் இருந்தால் அப்படியே மூழ்கிப் போவான். அன்று மனம் கட்ட விழ்த்து ஓட ஆரம்பித்தது. வேறு என்ன செய்யலாம்? பூங்காவைச் சுற்றிவரலாம் என்று தோன்றவே புறப் பட்டான். சுற்றி வந்தவன் சிறிது நேரம் செல்ல ''எங்காவது இரு'' என கால்கள் கட்டளையிடத் தொடங்கவே கண்களைச் சுழலவிட்டான். கோடை காலம் என்பதால பூங்காவின் மலர்ப் படுகைகள் வெவ்வேறான அழகிய கோலம்

கொண்டிருந்தன. மதனின் விழிகள் தாமே சென்று செம்மஞ்சள் மலர் பாத்தியின் மேல் புரண்டன. எமாவுடன் வரும்போது அதனருகே இருந்து உரையாடும் பழக்கம் அவைகளை அங்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். அது அவளுக்குப் பிடித்தமான வர்ணம். எழுந்து நிமிர்ந்த கண்களில் பட்ட அந்தப் பெண் எமாவைப் போலவே தெரிந்தாள். அவனுக்கு சிரிப்பு வந்தது. தன் அனுமதியின்றியே தன் கண்கள் படும் பாட்டை கவனத்தில் எடுத்தபோதே இந்தச் சிரிப்பு பிறந்தது. தன் மனம் எமாவில் எவ்வளவு இலயித்திருக்கின்றது என்பதையும் அவன் கணிப்பிட்டுக்கொண்டான்.

அதேவேளையில் அப்பெண் இவனிருந்த பக்கமாகத் திரும்பினாள்.

அது…அது... எமாதான். காதல் கண்களுள் மோகத்தை ஏற்றி யாரோ ஒரு பெண்ணை எமா என்று ஏமாற்றவில்லை. அது எமாவேதான்.

வேறொரு பையனுடன் எமாவைக் காண நேர்ந்தால் கசப்பிற்குள் அவனது மனம் ஓடிச் சென்று வீழ்ந்து தத்தளிக்கும் இன்றும் கண்களுள் ஊற்றெடுத்த கசப்பு கீழிறங்க ஆரம்பித்தவேளை எமா மதனை அடையாளம் கண்டுகொண்டு அந்தப் புதியவனுடன் அவனை நோக்கி வந்தாள். அவளைக் காணாத பாவனையில் எதிர்த் திசையில் நடக்க மதனின் மனம் எண்ணினாலும் கால்கள் அசைய மறுத்துவிட்டன.

‘‘ஹாய் மதன். இது என் நண்பன் யேகப். நான் முன்பு இருந்த வீட்டிற்கு அயல்.’’ மிகவும் இயல்பாக எமா அந்தப் புதியவனை அறிமுகம் செய்தாள். மதன் எதுவும் பேச மறந்து நின்றிருந்தான். எமா யேகப் பக்கம் திரும்பி ‘‘இவன் என் நண்பன் மதன்’’ என அறிமுகம் செய்யவும் ‘‘ஹாய்’’ என்றவாறு முகம் மலர கையை நீட்டினான் யேகப். தன்னுணர்வு பெற்றவனாக மதனும் ‘‘ஹாய்’’ என்றவாறே கையைப் பற்றிக் குலுக்கினான்.

‘‘எனக்கு நேரமாகிறது. போகலாமா?”

எமாவிடம் கேட்டான் யேகப்.

‘‘நான் மதனுடன் வருகிறேன். நீ போய் வா’’. என யேகப்பை கட்டியணைத்து விடை கொடுத்தாள் எமா. இது அவர்களது பண்பாடு. ஆனால் எமா அப்படி உறவாடும்போது அவனால் தாங்க முடிவதில்லை. ஏனைய பையன்கள் இத்தகைய உறவாடல்களை இலகுவாக எடுத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு எடுக்க ஏன் அவனால் இயலவில்லை என்ற வினாவிற்கு மதனின் மூளை விடை தேடி அலைந்து களைத்துப்போனது. தன் மனம் எமாவை விரும்புகிறதோ? அதை அவனால் நிச்சயிக்க இயலவிலலை.அவன் விரும்பினாலும் எமா அவனை விரும்ப வேண்டுமே. அவளைப் பொறுத்தவரை அவர்களிடையே நிலவுவது நட்பு மட்டுமே.

வீடு வந்த பின்னரும் இதைப் பற்றியே மனம் ஆராய்ந்துகொண்டிருந்தது. இடையே செந்திருவின் நினைவும் வந்தது. கடந்த கால சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்து சூழலை மறந்து அமர்ந்திருந்துவிட்டான். நேரத்தைப் பார்த்தான் மதன். மதியம் கடந்து ஒரு மணியை எட்டிக் கொண்டிருந்தது. பசியைக் கூட உணராது இந்த எண்ணங்களில் மூழ்கியிருந்திருக்கிறான்.

உணவை எடுக்கவென எழுந்தவனது கண்களுள் ஜன்னல் வழியாக வந்து புகுந்தாள் வெளியே வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த ஸாரா. இவள் இந்த மதிய வேளையில் எங்கே போகிறாள்?

ஸாரா அண்மைக்காலத்தில் அவனது கல்லூரியில் கற்க வந்து சேர்ந்திருக்கிறாள். இதே வீதியில் குடியிருக்கிறேன் என்று ஒரு நாள் கூறினாள். காலையில் கல்லூரிக்குப் போகும் வேளையில் சந்திக்க நேர்ந்தால் பேசிக்கொண்டே போவார்கள். அந்நேரத்தில் தம்மைப் பற்றிய விபரங்கள் சிலவற்றையும் தெரிவிக்க நேர்வதுண்டு.

ஸாராவுடன் அவளது தாயாரும் போய்க் கொண்டிருந்தாள். வழமையாக அவர்களிருவரும் போகும்போது குழந்தை தள்ளு வண்டியில் இருத்தி அவளது அக்காவின் மகளையும் கொண்டு செல்வார்கள். இன்று காணவில்லை.

ஸாராவும் அவளது அம்மாவும் அக்காவின் குடும்பமும் ஒரே வீட்டில்தான் வாழ்ந்து வருகிறார்கள். ஸாராவின் அக்கா, கணவர் இருவரும் வேலைக்குப் போக அவர்களது இரு பிள்ளைகளையும் அம்மா கவனித்துக் கொள்ள இவ்வாறு ஒன்றாக வாழ்வது வசதியாக இருக்கிறதாம். இதுவும் வழி நீளம் நடந்த உரையாடல்களில் அறிந்துகொண்டதுதான். இந்த நடைமுறை நமக்குப் பழக்கமானது என்றாலும், இந்த நாட்டவர்கள் எப்படி…? என்றொரு சந்தேகம் மதனுக்கு ஏற்பட்டாலும் தெளிவுபெற முடியவில்லை.

ஸாரா ஐரோப்பிய பையன்களிடமிருந்து சற்று எட்டவே நிற்பதுபோல் மதனுக்குத் தோன்றும். அவள் எமா போன்றவளல்ல. சட்டென நெருங்க தயங்க வைக்கும் இயல்பு கொண்டவள் என்பதான ஒரு பிரமையும் மதனுக்கு ஏற்பட்டிருந்தது.

ஸாராவின் முக அமைப்பு அவள் மங்கோலிய கலப்பு உள்ளவளோ என ஐயுற வைத்தது. அதனால் எமாவைப் போன்ற எடுப்பான நாசியுடன் கூடிய கூர்மையான வசீகரிக்கும் அழகு அவளிடம் இல்லை என மதனின் மனம் முடிவு செய்திருந்தது. அழகினால் பயனில்லை. குணம்தான் தேவையானது என்று மீண்டும் மீண்டும் அறிவு எடுத்துச் சொன்னாலும் உள்ளே கள்ளமாக அழகின் மீதான ஆசை ஒளிந்திருப்பது என்னவோ உண்மைதானே? ஒரு கணம் ஸாராவைப் பார்த்ததும் எழுந்த அவள் குறித்த எண்ணங்களை பசி அடக்கி விட்டது.

எழுந்து சென்று குளிர்சாதனப் பெட்டியிலிருந்த உணவில் விருப்பமானவற்றை பீங்கான் தட்டு ஒன்றில் பரிமாறி நுண்ணலை வெதுப்பியில் சூடாகுவதற்கு வைத்தான். அது தன் வேலை முடிந்ததென்று ஓலமிட்டும் அவனது கவனத்தை ஈர்க்க முடியாது ஓய்ந்து போய்க் கிடக்க நேர்ந்தது. உணவின் நினைவை பற்றியெரிந்த பசி இழுத்து வரவும் உணவை எடுத்துவந்து உண்ண ஆரம்பித்தான். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதும் மீளவும் செந்திரு முகங் காட்டினாள். அப்போது அந்த நிகழ்வும் நினைவிற்கு வந்தது.

மதன் இலங்கையில் இருந்த நாட்களில் ஒரு நாள் செந்திருவுடன் பேசிக்கொண்டிருந்த போது ஏதோ பொருள் தேவைப்பட்டபோது கிடைக்காது கஷ்டப்பட்டது பற்றி மதன் சொல்லவும் அப்படி ஏதாவது தேவைப்பட்டால் தன்னுடன் தொடர்புகொள்ளலாம் என ஒரு தொலைபேசி இலக்கத்தை செந்திரு கொடுத்தாள். மதனும் தன் நாட்குறிப்பில் அதைக் குறித்து வைத்தான். இதுவரை அது தேவைப்படவேயில்லை.

அவளுடன் பேசினால் என்ன?

புன்முறுவலுடன் செந்திருவின் முகம் பேச வருமாறு அழைத்தது. உணவை உள்ளே தள்ளிவிட்டு கைபேசியை எடுத்தான். எண் சரியாக இருக்குமோ என்ற அவனது ஐயம் தேவையற்ற ஒன்று என செந்திருவின் 'ஹலோ' குரல் கூறியது.

"நான் மதன்"

"என்ன அதிசயம்! எப்பிடி நம்பர் கிடைச்சது?"

"எப்படியோ கிடைச்சுது. எல்லாரும் சுகமாயிருக்கிறீங்களா?"

உரையாடல் பல இடங்களை பல விடயங்களை சுற்றி வந்து முக்கால் மணி நேரத்தின் பின்னர் முடிவுற்றது. அவளது தகவலொன்று மதனுக்கேற்படுத்திய அதிர்வு அவனை மேலும் பேசவிடாது தடுத்துவிட்டதென்றுதான் கூறவேண்டும்.

தேவையில்லாது மனதைக் குடைய நேர்ந்துவிட்டதே என தன்னையே நொந்துகொண்டான். அடுத்த சம்மர் விடுமுறைக்கு இலங்கைக்குப் போகவேகூடாது என உறுதி எடுத்துக்கொண்டான். அம்மா போனாலும் பிரச்சனை ஆரம்பமாகுமே?

"அடுத்த முறை எப்ப வருவீங்கள்? இந்த முறை அம்மா உங்கடை அம்மாவோடை கதைக்கிறதெண்டு சொல்லிக் கொண்டிருக்கிறா"

"என்ன கதைக்கப்போறா?"

"எங்கடை கலியாணத்தைப் பற்றி"

இந்த உரையாடல்தான் அவனுக்கு அதிர்ச்சி அளித்தது.

அப்படியான எண்ணம் அவளுள் எவ்வாறு முளைவிட்டது? மதனின் மனதில் அத்தகைய எண்ணமே இல்லையே. அம்மா ஏதாவது சொல்லி அதனால் இப்படி எண்ணம் தோன்றியிருக்குமோ? அம்மாவிடம் கேட்க வேண்டும். அம்மா இங்கே வாழ்ந்தாலும் யாழ்ப்பாண வாழ்க்கை முறையில் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இங்குள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து மதனின் பழக்கவழக்கங்கள் மாறிவிட்டதென்ற கவலை அவருக்கு. அதுமட்டுமல்ல. மதனின் அப்பா இங்கிருந்து சென்று இலங்கையில் பெண் தேடி அங்கிருந்த அம்மாவை மணமுடித்து அழைத்து வந்தவர். அதனால் அம்மாவும் தன்பாட்டில் ஏதாவது முடிவு செய்திருப்பாரோ? அப்படி ஏதாவது எண்ணம் அவருக்கிருந்தால் தன் நண்பர்களின் கதைகளைச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

மதனின் இரு நண்பர்கள் வீட்டுக்காரரின் சொல்லைக் கேட்டு இலங்கையில் திருமணம் செய்துகொண்டார்கள். இந்த நாட்டிற்கு வந்து அந்தப் பெண்கள் பட்ட பாடு.! நாட்கள் போகப்போக ஒருவாறு தம்மை மாற்றிக் கொண்டார்கள் என்றாலும் இந்த நாட்டில்

வளர்ந்த பெண்கள்தான் இந்த நாட்டிற்கு ஏற்ற வர்கள். அவர்களின் நாட்டில் எம் நாட்டு பண்பாட்டை நாம் கடைப்பிடிக்க இயல்வதில்லையே.

சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றுகிறது. எமாவும் இவ்வாறு சிந்திக்கலாம்தானே? அவனைத் திருமணம் செய்தால் அவளுடன் நட்பு என்று பழகுகின்றவனைக் கண்டே கோபம் கொள்வான். அதன் பின்னர் இல்வாழ்வு கேள்விக் குறியாகிவிடும்.

அம்மாவும் அப்பாவும் இங்கேயே நீண்ட காலம் வாழ்ந்து பழகியவர்கள். அப்படியிருந்தாலும் தங்கள் வீட்டில் நடக்கும்போது இங்குள்ள பழக்கங்களை சகிக்கமாட்டார்கள். அதனால் அவனது நிம்மதி பறிபோவது நிச்சயம். அவர்களைப் போல் மதனால் வாழ முடியாது. அவனது வாழ்க்கையை ஒத்ததாக அவனது பிள்ளை களின் வாழ்க்கை இருக்காது.

இரண்டு மூன்று இடங்களின் கலவை யாகும்போது இப்படியான குழப்பங்கள் உருவாகவே செய்யும்.. அவனது மனம் குழப்பமடைய இதுவேதான் காரணம். அவன் இங்குதான் பிறந்து வளர்ந்தான். எனினும் அவர்களைப்போல் நடந்துகொள்ள இயலவில்லையே. அதேவேளையில் இலங்கை இளைஞர்களை விடவும் மதனின் பழக்கங்கள் விருப்பங்கள் சிந்தனைகள் எல்லாமே வேறுபட்டவை. செந்திரு மதனின் குணாம்சங்களுடன் இணைந்து வாழ நிச்சயம் இடர்ப்படுவாள். அவன் அவளைப் பொறுத்தவரை ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது.

செந்திரு கண்களுள் கிறங்கிய கற்பனை களுடன் அவற்றை இழக்க மனமற்று கலங்கி நின்றாள்.

எமா தோழமையுடன் சிரித்தாள்.

மதனின் நினைவுத் தடாகத்துள் தோன்றிய அவ்வுருவங்கள் கலங்கி மறையத் தொடங்க ஒரு புறத்தில் நிற்பது..? ஸாரா. . .

○○○

# வடை மான்மியம்

- அஷ்ரஃப் சிஹாப்தீன்

எப்போதும் ஏளனமான அம்சமாக
எடுத்துக் கொள்ளப்படுகிறது
வடை

எல்லாச் சிற்றுண்டிகளுக்கும்போல்
அதற்கும் ஓர் அர்த்தம் இருக்கிறது
சுட்டோ வாங்கியோ
பசி வயிற்றுக்குப்
பரிமாறப் பொருத்தமானது

பருப்பு வடை
உளுந்து வடை
மசாலா வடை
கீரை வடை
மாசி வடை
இறால் வடை என்று
ஒவ்வொரு வகைக்கும்
ஒரு ருசி உண்டு
ஒரு செய்முறை உண்டு
ஓர் உழைப்பு உண்டு

வடையைக் கண்டுபிடித்தவர்
நமக்கு முக்கியமல்ல
ஆனால் வடை முக்கியமானது

ஏழை பணக்காரன்
படித்தவன் படிக்காதவன்
ஆள்பவன் ஆளாதவன் என்று
எல்லோரையும் கவர்ந்தது வடை

வடை எளிமையின்
எளிய அடையாளம்

உலகம் முழுக்க
எல்லா நாட்களிலும்
ஏகப்பட்ட வடைகள் சுடப்படுகின்றன

ஏமாற்றுக்காரர்கள் மட்டுமே
வாயால் வடைசுடுபவர்கள்
என்று வழங்கப்படுகிறார்கள்

பெயர்போன உணவகங்களில்
பெருந்தனக்காரர் வடை சாப்பிடுகின்றனர்

ஏழைப் பாட்டிகளால்
சுடப்படும் வடைகளைத்தான்
காகமோ நரியோ
ஏமாற்றி விட்டு
எடுத்துச் சென்று விடுகின்றது!

# ஐரோப்பிய அரங்கக்கலையில் தென் இந்திய தேவதாசிகளின் பாதிப்பு

பல நூற்றாண்டு காலமாக ஐரோப்பியர் இந்தியா நோக்கி வந்தார்கள். வந்த பயணிகள் இந்தியாவின் செல்வச் செழிப்பு, உயர்ந்தோங்கிய மாபெரும் கோயில்களின் கட்டிடச்சிறப்பு, அரசுகளின் படாடோபம், ஆடம்பரங்கள் என்பவற்றை பயணநூல்களாக எழுதினார்கள். இவற்றின் மூலம் கவரப்பட்ட அறிஞர்கள் இந்திய நாகரிகத்தை அறிய ஆர்வம்கொண்டு வந்தார்கள். வந்தவர்கள் எமது அறிவுச் செல்வங்களை ஆராய்ந்தனர். இந்தியாவை செல்வம்மிக்க நாடாக மட்டுமல்லாது சிறந்த அறிவும் கலாச்சாரமும் கொண்ட நாடாகக்கண்டு வியந்தனர்.

இவர்கள் இந்தியாபால் கொண்ட காதலோ வியக்கத்தக்கது. சூரியன் அஸ்தமனமாகாத மாபெரும் சாம்ராஜ்ஜியத்தை ஆண்ட விக்டோரியா மகாராணியார் தான் பிரித்தானிய பேரரசின் மகாராணி என முடிசூட்டி வாழ்ந்தவர். ஆனால் அவர் அத்துடன் திருப்திப்படாது, தனது ஆட்சிக்காலத்திலே தன்னை இந்திய நாட்டின் சக்கரவர்த்தினி (Empress of India) என பிரகடனப்படுத்தி அதற்கென தனிவிழாவும் நடத்தினார். இவ்வாறு "இந்திய சக்கரவர்த்தினி" எனக் கூறிக்கொள்வதில் பெருமைகண்டார்.

கிழக்கிந்திய கொம்பனியார் இந்தியாவிலே வியாபாரம் செய்த காலத்தில், இந்திய மன்னர்கள் போன்று உடையணிந்து தலைப்பாகையும் அணிந்து மகிழ்ந்தனர். இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் இந்தியாபால் மோகம் கொண்டன.

இந்திய தெய்வங்களும் புராணங்களும் சுவையூட்டும் பல விஷயங்களை இவர்களுக்கு வழங்கின. கீழைத்தேய நாட்டு செல்வங்களை அபகரித்து மேற்கு நாடுகள் செல்வச் செழிப்பிலே மிதந்தகாலமது. மக்கள் வருவாய்பெருக அவர்களுக்கு களிப்பூட்டும் பொழுதுபோக்குகளின் தேவையும் அதிகரித்தது. அரங்கக் கலைகள் மக்களை மிகவும் கவர்ந்த காலமது. புதிய புதிய கருப்பொருட்களைத் தேடிய கலைஞர்கள் இந்தியா சென்று வந்த பயணிகள் நூல்வாயிலாக பல புதிய விஷயங்களை அறிந்தனர்.

VictorHugs போன்றோரின் பயண அனுபவ நூல்கள் பிரெஞ்சு மக்களிடையே இந்தியாவை அறியவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. Hugo வின் 'Les Orientles' என்ற கவிதைத் தொகுப்பு 1829இல் ஒரே மாதத்தில் 14 தடவை மறுபதிப்பு பெற்றது.

கோயில்களிலே இறைவனையே மணாளனாகக் கொண்டு, அவனுக்காகவே ஆடும் தேவதாசியர் பற்றி பயணிகள் எழுதியவை மேற்கத்தியரைக் கவர்ந்தது. ஐரோப்பியர் இந்தியக் கோவில்களில் ஆடிய தேவதாசிகளை Bayadere எனவே குறிப்பிட்டனர். Marie Taglioni தேவதாசிகள் பற்றி எழுதிய 'Le Dieu et la Baydere' என்ற நூல் மிகப் பிரபலமானது.

William Dalrymple 2002இல் எழுதிய 'White Mughals, Love and Betrayal in Eighteenth Century India' என்ற நூலில் 1770 முதல் 1830 வரை இந்தியாவில் வாழ்ந்த ஆங்கிலேயர் இந்தியர்களாகவே வாழ்ந்தார்கள். இவர்கள் தமது கலாச்சாரமாக தேவதாசிகளை ஆசைநாயகிகளாகக் கொண்டிருந்தனர். இதற்கு ஒருசிலர் விதிவிலக்காகவும் இருந்திருக்கலாம் என எழுதினார்.




நாட்டியகலாநிதி
**கார்த்திகா கணேசர்**


இந்தவகையில் TacobHaafner என்ற டச்சுக்காரர் இந்தியாவிலும் இலங்கையிலுமாக 13 வருடங்கள் வாழ்ந்தவர், தமிழ் நன்றாகவே பேசக்கூடியவர். காதற்சுவை ததும்ப 1808இல் எழுதிய 'Reize in eenen palanquin' என்ற நூல் அன்றைய காலகட்டத்தை அறிய உதவுகிறது. இவர்தான் 1786இல் ஒரு இந்தியக் கோவில் நர்த்தகி மாமியா என்பவளில் காதல்கொண்டதாக எழுதுகிறார்.

மாமியாவும் அவள் குழுவினரும் தனது ஆடல் நிகழ்ச்சியை நிறைவுசெய்ததும் தனது காதலை வெளிப்படுத்தும் வகையாக,

மாமியா எனக்கு வெற்றிலை தந்தாள். ஆடல் நங்கையரின் காதல் நேர்மை அற்றது எனப் பரவலாக அறியப்பட்டதால் முதலில் நான் அதை மறுத்தேன். அவ்வாறு மறுத்தபோதும் என் ஆண்மனம் மாமியாவில் காதல்கொள்வதை உணர்ந்தேன். அவளில் என்னை இழந்தேன். Jacob Haafner. மாமியாவையும் தனது காதலையுமே கருவாகக்கொண்டு 'Reize in eenen palanquin' என்ற நூலை 1808இல் எழுதினார். Haafner தனது நாடக நூலில் மாமியாவை Reize என்ற பாத்திரமாக எழுதினார். மாமியா மிக இளம் வயதிலேயே இறந்துவிடுகிறாள். இதையே Haafner புயலில் அகப்பட்ட கப்பலில் இருந்து (டச்சு இளைஞனை) காப்பாற்றியபின் அவள் இறந்துவிடுவதாக கதையை முடிக்கிறார். மாமியா இறந்தபின் Haafner நாடு திரும்புகிறார்.

Haafner தேவதாசியுடன் கொண்ட உறவால் தனது நூலில் தேவதாசிகள் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இந்த நூல்மூலம் ஐரோப்பிய அரங்கக்கலைஞர்கள் தேவதாசிகள் பற்றி மிக விரிவாகவும் ஆழமாகவும் அறியமுடிந்தது.

Jacob Haafner-ஆல் டச்சுமொழியில் 1808-இல் எழுதப்பட்ட REIZE IN EENEN 1809-இல் ஜெர்மன் மொழியிலும் 1814-இல் பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இந்திய தேவதாசிகளின் ஆடலையும் வாழ்வையும் ஐரோப்பியர் அறிவதற்கு இந்நூல் பெரிதும் உதவியது.

இந்தியப் பெண்கள் கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறும் பரிதாபம் பற்றியும் மேற்கத்தியர் இடையே பேசப்பட்டமையால் அதை மையமாகக்கொண்டு 1770 -இல் இசை நாடகங்கள் உருவாகின. Antoine-Marin Lemierre என்பவர் 'La Veure du Malabar' என்ற நாடகத்தில் இந்துப்பெண் ஒருத்தி பிரெஞ்சு போர்வீரனில் காதல் கொள்கிறாள். அவள் கணவன் இறந்ததும் அப்பெண் அவள் கணவன் உடல்மீது விழுந்து உடன்கட்டை ஏறப்போகும் சமயத்தில் பிரெஞ்சு போர்வீரன் குதிரையில் வந்து அவளைத் தூக்கிச் செல்வதாக நாடகம் அமைகிறது.

Jacob Haafner-இற்கு முன்வந்த சில மேற்குநாட்டுப் பயணிகள் தேவதாசிகள் பற்றி பல கீழ்த்தரமான அபிப்பிராயங்களை ஐரோப்பியரிடையே பரப்பிவந்தனர். இவர்களில் முக்கியமானவர்கள் கிறிஸ்தவ மதகுருமார்கள். Haafner தேவதாசிகளுடன் வாழ்ந்தமையால் இவர் கிறிஸ்துவ மதபோதகர்களது கூற்றை ஆணித்தரமாக எதிர்த்து எழுதியிருந்தார். FRANCOIS BERNIER, ABBO RAYNAI, PIERRING SONNERAT இவர்கள் கோயில் தாசிகள் புரோகிதர்களான பிராமணர்களால் கேவலமாக நடத்தப்படுவதாக எழுதியுள்ளனர். 1817இல் BAPTIST பாதிரியான WILLIAM WORD கோயில் புரோகிதர்கள் தேவதாசிகளை பாலியல் ரீதியாக பிரயோகிப்பதாக எழுதினார்கள். ANTOINE DUBOIS 1816இல் மிகமிகமோசமாக பூஜைகளின் இடையிலும் எப்பொழுதெல்லாம் இவர்களுக்கு நேரம் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் இவர்கள் கேவலமாக நடந்துகொண்டார்கள் என எழுதியிருந்தார். கிறிஸ்தவ பாதிரிகள் இவ்வாறெல்லாம் எழுதிவந்தனர். ஆனால் எந்த ஒரு ஐரோப்பியரோ அல்லது மொகலாயர்களோ கோயிலுள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது மனம்கொள்ள வேண்டிய ஒன்று. பயணிகளாக வந்த கிறிஸ்துவப் பாதிரிகளால் கோயில் நர்த்தகிகள் பற்றி தவறான கருத்து மேற்கு நாடுகளில் பரப்பப்பட்டது. இது மேற்கத்திய அரங்கக்கலைகளுக்கு கருவாகவும் அமைந்தது.

Johann Wolf Von Goethe முதலிலே தேவதாசிகளை தன் நாடகப் பாத்திரமாக்கியவர். அவரது 'Indian Legend' என்ற ஆக்கம் இசைநாடகமாகவும் (Opra) நடன நாடகமாகவும் (Ballet) 1797 -இல் மேடையேறியது.

"மகாதேவ்" சிவனாரை குறிப்பது. இவரோ மாறுவேடம் பூண்டு மனித உலகுக்கு வருகிறார். ஒரு ஆடல் நங்கை அவரை உபசரித்து வீட்டிலே தங்கவைத்து உபசரிக்கிறார். அவள் அவர்மீது தன்னலம் அற்ற அன்பு பூண்டிருந்தார். அவளது அன்பை பரீட்சிக்கும் முகமாக (மகாதேவ்) அவர் இறந்துவிட்டதாக நடிக்கிறார். அவரது உடல் சிதைமூட்ட எடுத்துச் செல்லப்படுகிறது. அவளோ அவருடன் உடன்கட்டை ஏறத்துடிக்கிறாள். புரோகிதரோ நீ அவரது மனைவியல்ல, அவ்வாறு செய்ய வேண்டாம் என தடுக்கிறார்.

She falls down by the fire
Her cries cutting through the air
"I want my husband again
I seek far him in the crypt
Shall these limbs of such divine splendor
Fall in to ash before my very eyes
Mine He / was mine / I came before
Everyone else! Ah only one sweet night

அவளோ புரோகிதர் தடுத்தும் கேளாது சிதையிலே குதிக்கிறாள். ஆனால் அவளது தெய்வீக காதலன் மகாதேவன் அவளை நெருப்பிலிருந்து மீட்டு தெய்வலோகம் கூட்டிச் செல்கிறார். அவளோ பிறவாவரம் பெற்றாள்.

மிக பிரபலமான எழுத்தாளர் Etienne de Joyu பல வருடங்களாக இந்திய மண்ணில் பிரெஞ்ச் படையின் உயர் அதிகாரியாக பதவி வகித்தவர். அவர் “Notice historique sur les Bayaderes” என்ற பெயரில் ஒரு இசைநாடகத்தைத் தயாரித்தார்.

சிவனார் மாறு உருவிலே உலகில் மன்னர் தேவேந்திராவாக வாழும்பொழுது அந்தப்புரத்தில் 1200 ஆசைநாயகிகளை வைத்து இன்பவாழ்வு வாழ்ந்தார். ஒருநாள் அவர்கள் அன்பை பரிசோதிக்கு முகமாக தனக்கு நோய் கண்டுவிட்டதாக நடிக்கிறார். 1200 அந்தப்புர ஆசைநாயகிகளையும் அழைத்து தன்னில் உண்மையான அன்பு உள்ளவர்கள தன் உடல் தகனம் செய்யப்படும் பொழுது உடன்கட்டை ஏறும்படி கேட்டார். ஒரேஒரு பெண்மட்டும் இறந்த மன்னனின் உடல் அருகில் படுக்கிறாள். சிதை நெருப்பு மூட்டப்படுகிறது. சிவனார் எழுந்து யார் தன்னில் உண்மையான அன்பு பூண்டவர் என்பதைப் பார்க்கவே இவ்வாறு செய்ததாக கூறி அவளை தேவலோகம் அழைத்துச் செல்கிறார். அதன் முன் சிவனார் உலக மக்களுக்கு ஒரு கட்டளை இடுகிறார். இந்த நிகழ்வைக் கொண்டாடும் முகமாக சிவனை வணங்கும் கோயில்கள் யாவற்றிலும் கோயில் சேவையில் ஆடல் நங்கையர் நியமிக்கப்படவேண்டும் என்றார். அவர்கள் தேவதாசிகள் அதாவது இறைவனுக்குப் பிரியமானவர் என அழைக்கப்படவேண்டும் எனக் கட்டளை இட்டார். இந்த இசைநாடகத்தில் அரசன் தேவேந்திராவுக்கும் அரசிலமியா (இதுவே முக்கிய பெண்பாத்திரம்)வுக்கும் மிக விமரிசையாக திருமணம் நடந்து நாடகம் நிறைவுற்றது. இந்த ஆக்கம் 8 August 1810 மேடை ஏற்றப்பட்டு 1828 வரை ஐரோப் பாவின் பல பாகங்களிலும் பல தடவைகள் மேடைஏற்றம் பெற்றது.

‘Le Dieu et la bayaders’ இதன் ஆங்கிலப் பெயர்வு The maid of Cashmere என்பது. Daniel Auber Filippo Taglioni என்பவரால் நடன நாடகமாக உருவாக்கப்பட்டது. இங்கு பிரம்மாவே கதையின் நாயகன் ஆகிறார். பக்தி மிகுந்த தேவதாசி இசைமேல் கொண்ட காதல், தாபம், விரகம் ஆகியவற்றை சித்தரிப்பதாக அமைந்தது. 13 October 1830 முதலிலே மேடை ஏற்றப்பட்டு 14 வருடங்கள் தொடர்ந்து மேடை ஏறியது.

இத்தகைய இந்திய தேவதாசிகளை மையமாக வைத்து பல மேடை ஆக்கங்கள் உருவாகி இருந்தன. இவை மிகப் பிரபலமாக இருந்தவை மட்டுமே எடுத்துக் கூறப்பட்டது. இதன் மூலம் மேற்கத்தியர் எவ்வாறு இந்திய தேவதாசிகளில் காதல்கொண்டு தமது மேடை ஆக்கங்களை தயாரித்தனர் என்பதைக் கண்டோம்.

○○○

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி – 2021

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

**முதற் பரிசு : ரூபா 5000 /=**

**இரண்டாம் பரிசு: ரூபா 3000/=**

**மூன்றாம் பரிசு: ரூபா 2000/=**



ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**போட்டிக்கான விதிகள்**

**சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும்.**

**போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும்.**

**தபால் உறையின் இடது பக்க மூலையில்**

**“அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி” எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஞானம் அலுவலகம் – 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

**போட்டி முடிவுத் திகதி : 30.06.2021**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. – **ஆசிரியர்**

சிறுகதை

# இவர்கள் இரண்டாம் தலைமுறை

## தேடல்....2



மதிவதனி
(சுவிஸ்)



தம்பி மோகன் 15ஆம் திகதி லீவுதானே என்றாள் மங்களம். அம்மா எத்தனை தடவை சொல்றது எனக்கு அன்று ஒரு செமினார் இருக்கு லீவு எடுக்க முடியாதென்று.

அவருக்கு வேலையே இல்லை ஆ....ஊ....என்றால் டிக்கட்டை போட்டுக் கொண்டு சிறிலங்கா போய்விடுவார்.

நீங்கள் என்ன என்றால் ஏதோ புதுசா சுவிசுக்கு வருபவரை அழைத்து வருவதுபோல ஒவ்வொரு முறையும் லீவு எடு, லீவு எடு என்று பாடாய் படுத்திறீங்கள்.

வெள்ளைக்காரன் என்ன செய்றான் பெட்டியைத் தள்ளிக்கொண்டு பஸ்சில் ஏறி வீட்ட வந்து இறங்கிறான். எப்பதான் திருந்தப் போறீங்களோ என்று பிரசங்கம் செய்துகொண்டே காலில் ஷொக்ஷை மாட்டினான் மோகன்.

எந்தப்பதிலும் சொல்லாது கல்லாக இருந்தாள் மங்களம்.

வேலைக்குப்போற நேரம் எதுவுமே கதைக்கவேண்டா மென்று தனது வாயைக் கட்டிப்போட்டாளே தவிர மனதுக்குள் குமுறிக்கொண்டுதான் இருந்தாள்.

சரி அம்மா வாறன் என்றவன் கதவைத்திறந்து மூடப் போகையில் தாயின் முகத்தை ஒருகணம் பார்த்துவிட்டு பதிலுக்கு காத்திராது விறு என்று வெளியேறிவிட்டான்.

மங்களத்துக்கு இப்போது வெறுமை மட்டுமே முன்னே நின்றது. யாரிடமாவது கொட்டித் தீர்க்கவேண்டுமென்று மூளை குறுகுறுத்தது. மகன் தனது பிறந்தநாளுக்காக வாங்கிக்கொடுத்த ஐபோன் 10ஐ கையில் எடுத்தாள். ஸ்கிரினில் குமரனும் கவிதாவும் தாயை கட்டியணைத்துக்கொண்டிருந்தனர்.

ஏனோ கண் கலங்கியது மனது பாரமாக அழுத்தியது.

வேண்டாவெறுப்பாக மேசையில் போனை வைத்துவிட்டு ஜக்கட்டை போட்டுக்கொண்டு வெளியே காலாற நடக்கத் தொடங்கிவிட்டாள்.

பனிக்குளிர் முகத்தில் தடவி ஏதோ ஆறுதல் சொல்வது போல மங்களத்துக்கு தோன்றியது.

ஒரு நிமிடம் நின்று நிதானித்து மூச்சை இழுத்துவிட்டவள் இந்த இருபத்தைந்து வருடத்தில் மாறாதது என்றால் இந்தக்

குளிர்மட்டுந்தான் என்று நினைத்தவாறே தொடர்ந்து காலடிகளை வேகமாக வைக்கத் தொடங்கினாள்.

இந்த இரண்டு பிள்ளைகளையும் கையைப் பிடித்துக்கொண்டு எத்தனை தடவை நடந் திருப்போம்.

வயோதிபர் மடத்தில் இருந்து வியர்க்க விறுவிறுக்க வீடுவந்தாலும் அந்த மனுசன் ஓய்ந்து இருந்ததை மங்களம் இதுவரை பார்த்ததேயில்லை.

வா வெளிய போய் ஒரு சுற்று நடப்போ மென்று ஆரம்பித்துவிடுவார். பிள்ளைகளோடு ஓடி ஆடி விளையாடுவது என்றால் அவருக்கு நல்லாவே பிடிக்கும்.

சமையலறையில் நாள்முழுக்க கத்தியும் நெருப்புமாக களைத்திருந்தாலும் என்றுமே எதையுமே வெளிக்காட்டிக்கொள்ளாத மனம்.

மங்களம் இந்த வெளிநாட்டில் நமக்கிருக்கிற ஒரே உறவு இந்த இரண்டுபிள்ளைகள்தான். எல்லாச் சொந்தங்களையும் மறந்து வேறு நாட்டில் தனியாக வாழ்வதன் வலியை உனக்கு முதல் நான்தான் அனுபவித்தேன். ஏதோ புண்ணியத்தில் நீ வந்து சேர்ந்தாய் என்று சொல்லி பாசமாக புன்னகைப்பார் முருகன்.

இப்போதெல்லாம் ஊருக்குப்போய் வந்தாரென்றால் ஊருக்கு போறோம் வாறோம் ஆனாலும் உறவுகள் பணத்தோடுதான் பாசத்தை கூட்டிக்கழிச்சுப் பார்க்குதென்று வாயோயாது சொல்வது புதுமையாக இருந்தது மங்களத்துக்கு.

ஏன் யாராவது ஏதும் சொன்னவைகளா? என்று குடைந்து குடைந்து கேட்டாலும் ஏதோ கதையைச் சொல்லி மழுப்பிவிடுவார்.

இரவானால் ஒரு கிளாஸ் ரெட்வயினை உறிஞ்சுக்கொண்டே வழமையான மந்திரத்தை ஓதத்தொடங்கிவிடுவார் முருகன்

“நமக்கு இருக்கிற சொந்தம் இந்த இரண்டு பிள்ளைகள்தான் மங்களம்.

பிள்ளைகள் இங்கே பிறந்து வளர்ந்து நல்லாப் படிச்சு பெரிய வேலை செய்றாங்கள். கவிக்குட்டி கூட நம் விருப்படி நம் பெடியனை செய்து நல்லா இருக்கிறாள். தம்பி மோகனுக்கும் ஒன்றைப் பார்த்து முடித்துவிட்டால் நான் உலகம் சுற்றப் பறந்துவிடுவன்“ என்று ஆரம் பித்துவிடுவார்.

கேட்டுக்கேட்டு மங்களத்துக்கு புளித்து விட்டது.



அவரது ஆசையில் மோகனின் திருமணம் மட்டுமே இழுத்துக்கொண்டே போகிறது.

ஏனோ இப்போது வேண்டாமென்று ஒற்றைக் காலில் நிற்கும் மோகனை வற்புறுத்த இருவருக்குமே தெம்பு இல்லை. காரணம் வாழ்ற நாடு மட்டுமே...

பிள்ளைகள் நமது கலாச்சாரத்தில் வளர்ந்தாலும் வளர வளர தாங்கள் வாழ்கின்ற நாட்டின் கலாச்சாரத்தையும் தூக்கிப் பிடிக்குதுகள்.

தாம் தூம் என்று எதையும் பேசவும் முடியவில்லை.பக்குவமாக பேசினாலும் அம்மா உங்கள் காலத்திற்கு எந்த பிளைற்றும் பறக்காது என்று கேலிசெய்றான்.நடக்கும் போது நடக்கட்டும் என்று மனதை கட்டுப்படுத்த பழகிவிட்டாள் மங்களம்.

பிள்ளைகளுக்காவே வாழ்ந்து முடித்ததில் எங்கள் இருவருக்குமான வயோதிபத்தை வாழ்க்கை பரிசாக தந்து நிற்கிறது.

கவிதா லண்டனில் இருப்பதால் மோகன்தான் எல்லாத்துக்கும் என்று ஆயிற்று.

அவன் கையைப்பிடித்து நடக்கவும், அவனது தோளில் சாயவும் அவனது அன்பான வார்த்தைக்கும் மனசு விரும்புகிறது

இதுதான் காலத்தின் கோலமா? இருபது வருடங்களுக்கு முன் பிள்ளைகள் எங்களிடம்

இருந்து பெற்றதை மீண்டும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அறுபது வயது குழந்தைமனம் ஏங்குவது விசித்திரமாகத் தோன்றியது மங்களத்துக்கு.

இந்த நாட்டில் "நான் நான்" என்று வாழ்வதே சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் கருதுகின்றனர்.

இறுதிக்காலம்வரையில் யாரும் யாரையும் தங்கிவாழ்வதோ, தாங்கச்சொல்வதோ சுய மரியாதையின் குறைவாகவே உணர்கின்றனர்.

நாம் பெத்த பிள்ளைகளும் இந்த வாழ்க்கையின் இயல்புகளை அறிந்ததால் எங்களையும் அவர்களைப்போல வாழ்வதற் காகவே பழக்கப்படுத்தவும் எண்ணுகின்றனர்.

வணக்கம்....என்ற குரலைக்கேட்டு சிந்தனையோட்டத்தை நிறுத்திய மங்களம் எதிரேவந்த கவிதாவைப் பார்த்தாள். ஓ... கவிதாவே என்ன நடந்திட்டு வாறீயா?

ஓம் அக்கா சுகர் வந்திட்டு அதிலிருந்து இந்த பெட்டைகள் நடங்கோ அதைச் சாப்பிடாதீங்கோ இதைச் சாப்பிடாதீங்கோ என்று சின்னப்பிள்ளைக்குச் சொல்வது போல சொல்லுறாங்கள்.

எங்கட பாசத்திலதானே.... அக்கா.

நாங்கள் நல்லது கெட்டதைச் சொல்லி வளர்த்தது போல இப்போது இரண்டுபேரும் என்னை வளர்க்கிறாங்கள்...என்று மகிழ்ச்சியுடன் வாய்விட்டுச் சிரித்தாள் கவிதா.

நீங்களும் ஒரு சுற்று நடந்திட்டீங்கள் போல...

சரியக்கா பின்னேரம் டொக்டர். போய் சமைச்சிட்டு குளிச்சிட்டு ரெயின் எடுக்கவேண்டும் வாறன் என்றவாறு நடந்தாள் கவிதா.

ஏதோ பேய்மனது இப்போது வாய்விட்டுச் சிரிப்பதாக மங்களத்துக்கு தோன்றியது.

எதை எப்படி எடுத்துக்கொள்கிறோம் என்றதைப்பொறுத்தே சந்தோஷம் துக்கமும்.

மங்களத்துக்குள் புது ஞானம் பிறந்தது.

நாங்கள் எத்தனை தடவை இந்த நாட்டுப்பிள்ளைகளைப்போல அதைச் செய் இதைச்செய் என்று ஒப்பிட்டு சொல்லி வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப இயங்குவதற்குப் பிள்ளைகளைப் பழக்கியிருப்போம்.

இன்று படித்து வளர்ந்து நாலு நல்ல மனிதருடன் பழகும் போது கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு அவர்களும் எங்களையும் அவ்வாறே இயங்குமாறு சொல் வதை ஏன் ஏற்க மறுக்கிறது மனது?

ஏதோ முடிவெடுத்தவளாக உற்சாகத்துடன் கைகளை வீசி வீடுநோக்கி நடந்தாள் மங்களம்.

வைபரில் கணவர் முருகன் பனங் கிழங்கு கட்டுகளை தூக்கியவாறு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இலக்கங்களை அமத்தியவள் கணவரின் குரலைக்கேட்டு என்ன பனங்கிழங்கோடு மல்லுக்கட்டிறியல் என்றாள் வேடிக்கையாக.

சும்மா சிவனேசன் வீட்டுப்பக்கம் வந்தன். அஞ்சாறு பார்த்தி போட்டிருக்கிறான்.

அதிலொன்றை பிடுங்கினான் அவிப்போ மென்று. எத்தனை வருசமாயிற்று அதுதான் ஒரு படம் எடுத்தன் என்றார் சிறுபிள்ளையாக முருகன்.

சரி தம்பி மோகனுக்கு உங்களை கூட்டி வரமுடியாது போல ஏதோ செமினாராம். தம்பி தான் கட்டாயம் நிற்கவேண்டுமாம். அதான்... என்று மங்களம் மென்று விழுங்க.

நானென்ன சுவிசுக்கு புதுசா? அவனை கரைச்சல் படுத்தாதே..

நான் வாறன்.

கோப்பித்தூள் வேண்டுமா என்று பெரி யக்கா கேட்டவ என்றார் முருகன்.

ஒரு கிலோபோல போதும் என்றவள். ஊர் பஞ்சாயத்துகளை கேட்டுவிட்டு தொடர்பைத் துண்டித்தாள்.

மகனது செய்தி ஏதோ வந்திருப்பதாக வைபர் காட்டியது.

அம்மா சாப்பிட்டீங்களா?

செமினாரின் திகதியை மாற்றமுடியாது. ஹென்றி அப்பாவை கூட்டிட்டு வருவான். யோசிக்காமல் ஓய்வெடுங்க. வரும்போது ஏதாவது வேண்டி வரவேண்டுமா? என்று எழுதியிருந்தான்.

என்ர பிள்ளை என்றாள் மங்களம் வாய்விட்டு.

இல்லை தம்பி எல்லாம் இருக்கு நீ சாப்பிடு.

என்று எழுதியவள் ....

மனநிறைவோடு தனக்குப் பிடித்த பாரதியார் கவிதைகளை வாசிக்கத் தொடங்கினாள் மங்களம்.

❍❍❍

# வாழ்க்கையின் உயர்வுக்கு யாரோ ஒருவர் உதவியிருப்பார்

சூரியனின் கவர்ச்சி இல்லாவிட்டால் பூமியால் நிலையாகச் சரியாக தன்வழிப் பாதையில் சுழலமுடியுமா? புவியீர்ப்பு சக்தியின்றி மனிதர்களால் நிலைத்து நிற்க முடியுமா? கண்ணுக்குத் தெரியாது எங்கோ ஒரு மூலையில் இருந்து எம்மை அறியாமலும் அறிந்தும் பலரின் பங்களிப்புக்கள் எம்முடைய உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றன. எண்ணம் எம்முடையதாக இருந்தாலும் எம்மைத் தூக்கி நிறுத்த ஒருவர் துணைவருவார் என்பது உண்மையே. தற்போது பல நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள் என அனைவரின் வளர்ச்சிக்குப் பின்னே பலரின் உழைப்பும் உதவியும் தியாகங்களும் அடங்கியிருக்கும்.

கோடீஸ்வரன் பில்கேட்ஜ் உயர்வுக்கு அடிப்படையில் அவர் நண்பன் Paul Allem இருந்திருக்கின்றார். விஞ்ஞானி ஸ்ரீபன் ஹார்க்கின் (Stephen Hawking) ஆராய்ச்சிக்கும் ஆற்றலுக்கும் பின்னே டிக்ரான் தஹ்ரா (Dikran Tahta ) என்னும் கணித ஆசிரியர் இருந்திருக்கின்றார். கற்பித்தலில் மட்டுமன்றி அவரை சக்கர நாற்காலியில் தள்ளிக் கொண்டு செல்வது வரை அவரின் பங்களிப்பு இருந்திருக்கின்றது. நோய்வாய்ப்பட்டு தற்கொலைக்கு முயற்சியில் இருந்த போதும் அவரைக் காப்பாற்றி தன்னுடைய முயற்சியினால் ஹார்க்கிங் ஐ முன்னுக்கு கொண்டுவர கூடவே இருந்து காதலையும் அன்பையும் பகிர்ந்து கொண்டு ஒரு காதலியாக மனைவியாக தாதியாக கூடவே பயணித்தவர் ஜேன் ஹார்க்கிங் (Jane Hawhing) ஆவார். இவர்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாது விட்டால் வெறும் முகத் தசைகளின் அசைவை மட்டும் வைத்துக் கொண்டு வானத்தை நோக்கி ஸ்ரீபன் ஹார்க்கிங் ஆராய்ச்சிகள் நிகழ்த்தியிருக்க முடியுமா? வாடிக்கையாளர்களை நம்பியே உற்பத்தியாளன். அவனை ஊக்கிவிக்கும் வங்கிகள் என உயர்ச்சிக்குப் பின் பல கைகள் மறைந்திருக்கும் என்பது உண்மையே. நாம் காணும் உலகத்தை விட்டு இந்த பிரபஞ்சமும் இப்படித்தான் இயங்குகின்றது.

இன்று நாம் போற்றும் இரண்டு இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம் என்னும் இரண்டையும் எடுத்து நோக்கினால். இவை வெளிவருவதற்கும் காரணகர்த்தாக்கள் இல்லாமல் இல்லை. கம்பர் கம்பராமாயணத்தை எழுதிவிட்டு இதனை அரங்கேற்றுவதற்கு உதவி நாடி சடையப்ப வள்ளலிடம் செல்கின்றார். அவரோ சோழ மன்னனிடம் கம்பரை அனுப்புகின்றார். மன்னனோ தன்னுடைய அரசிலே உள்ள சிக்கல்களைக் காரணம் காட்டி திருவரங்க ஆச்சார்யார்களுக்கு திருவோலை அனுப்புகின்றான். ஆனால் அவர்களோ தில்லைவாழ் அந்தணர்களின் ஒப்பிதல் பெற்றுவரும்படி அனுப்புகிறார்கள். அப்போது பாம்புதீண்டி இறந்த ஒருவனை நாகபாசத்துப் பாடல்கள் பாடி வியாசர் உயிர்ப்பித்தாராம். அதன்பின்புதான் அவருடைய காவியம் சிறப்பு என்று தீட்சிதர்கள் ஒப்பிதல் கொடுத்தார்களாம். இவ்வாறு அலைந்து திரிந்து இறுதியில் திருவரங்கம் சென்று அரங்கேற்றம் தொடங்கும் போது நஞ்சடகோபனைப் பாடினாயா? என்று ஒருவர் தடுத்தார். பின் சடகோபரந்தாதி பாடினார். அதன் பின் அரங்கேற்றம் தொடங்க



**சந்திரகௌரி சிவபாலன்**
**கௌசி**
**ஜேர்மனி**

பல எதிர்ப்புகள் வைணவர்களிடமிருந்தெல்லாம் தோன்றியது. இறுதியில் ஸ்ரீமன்நாத முனிகள் இரணியவதைப் படலம் ஒன்றே போதும் கம்பரின் காப்பியம் தெய்வீக காப்பியம் தான் என்பதற்கு ஐயம் இல்லை. இது காப்பியத்தில் இடம்பெறலாம் என்றாராம். ஒரு நூல் அரங்கேற எத்தனை சோதனைகளைத் தாண்ட வேண்டும் என்பது தற்காலத்திலிருப்போர்க்குப் புரியாது. ஆனால், ஒரு நூல் வெளிவர பலரின் உதவிகள் இருந்திருக்கின்றன என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோல் மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல பிள்ளையார் எழுதியதாகவும் நிறுத்தாமல் வேகமாகப் பாடவேண்டும் என்று பிள்ளையார் நிபந்தனையிடப் பாடலைப் புரிந்து கொண்டு எழுத வேண்டும் என்று வியாசர் கட்டளையிட்டார். சம்மதித்த பிள்ளையார் வேதவியாசர் சொல்லச் சொல்ல எழுதிய வேகத்தில் பிள்ளையாரின் எழுத்தாணி உடைந்தது. உடனே தன்னுடைய தும்பிக்கையின் தந்தத்தை உடைத்து பிள்ளையார் எழுதினார் என வரலாறு கூறுகின்றது. இவ்வாறு மகா பாரதத்தின் தோற்றத்தில் பிள்ளையாரின் பங்கு இருந்திருக்கின்றது.

கம்பனின் அம்பறாத்துாணி என்ற புத்தகத்தில் நாஞ்சில் நாடன் ஒரு தனிப்பாடல் கொடுத்துள்ளார்.அதில்

**வில் கிடந்தது மிதிலையின் நகரிலே**
**கல் கிடந்தது கானகம் தன்னிலே**
**நெல் கிடந்தது சடையனின் வீட்டிலே**
**சொல் கிடந்தது கம்பனின் நெஞ்சிலே**
**உயர்ந்தெழுந்தது இராமனின் கதை அரோ**

சீதையைத் திருமணம் செய்வதற்கான சிவதனு என்ற அம்பு மிதிலையிலே இருந்திருக்கின்றது. இராமன் காலடி பெற்று உயிர் கொண்டெழுவதற்காக அகலிகை காட்டிலே கிடந்தாள், கம்பனுக்கு உதவுவதற்கான நெல் வெண்ணெய் நல்லூர் சடையப்பனின் வீட்டிலே கிடந்தது. இராமருடைய கதை எழுதும் அளவுக்கு சொல் கம்பரின் நெஞ்சிலே கிடக்கின்றது என்று எடுத்துக் காட்டினார். அதாவது இலக்கியங்கள் தோன்ற வாணிக வர்க்கம் பின் நின்றிருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளதும் நல்லதும் என்னும் கட்டுரையிலே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

“எவரோ ஒருவர் வருவார். என்னைத் தூக்கிவிடுவார்” என்று புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்திலே மட்டுவில் என்னும் இடத்தில் இருந்து வந்த புத்தகம் விற்பவர் ஒருவர் தன்னைக் கூட்டிக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் படிக்கவிட்டபோது பல பண்டிதர்களின் தொடர்பு கிடைத்ததாகக் கூறியிருக்கின்றார். அவர் மட்டும் வராமல் விட்டிருந்தால் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையை அவர் படைப்புகளை நாம் பெற்றிருக்கமுடியாது.

சங்க இலக்கியங்களிலே அகத்திணைப் பாடல்களில் வெகுவாகப் பேசப்படுபவர் தோழி. காதலன் காதலியிடையே காதல் மலர்வதற்கும் இரவுக்குறி பகற்குறி என்று சந்திப்பு நிகழ்வதற்கும் தோழியின் அர்ப்பணிப்பும் ஆலோசனைகளும் மிகுந்து இருந்திருக்கின்றன.

**அந்தணர் பெரியோய்! அவலமின்றி இருமின்**
**கோதாவரியின் குளிர்பூஞ்சாரலில்**
**அச்சம் ஊட்டிய ஞமலியை இன்று**
**கதமிகு சீயம் கடித்துக் கொன்றதே**

இப்பாடலின் சந்தர்ப்பம் காதலர் சந்திப்புக்கு தோழியின் உதவியை அழகாக எடுத்துக் காட்டுகின்றது. கோதாவரிக் கரையிலே ஒரு பூஞ்சோலையில் காதலர் இருவரும் சந்திக்க எண்ணினர். ஆனால், அதற்கு முன்னமே அந்த இடத்தில் ஒரு அந்தணர் உலாவிக் கொண்டிருக்கின்றார். அவரை எப்படி அந்த இடத்தில் இருந்து அனுப்பலாம் என்று எண்ணிய தோழியானவள் அந்த அந்தணர் நாய்க்கு அஞ்சுபவர் என அறிந்து வைத்திருக்கின்றாள். எனவே அவரிடம் சென்ற தோழி நீ அஞ்சாதே அந்த நாயை ஒரு சிங்கம் கொன்று விட்டது'' என்கின்றாள். நாய்க்கு அஞ்சுபவர் சிங்கம் என்றால் அந்த இடத்தில் நிற்பாரா? இவ்வாறு காதலுக்கு உதவிய தோழியர் அர்ப்பணிப்புகள் பற்றி சங்கப் பாடல்கள் பல எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு ஒருவரின் மகிழ்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், வெற்றிக்கும் பலரின் தியாகங்களும் ஒத்துழைப்புக்களும் உதவிகளும் நிச்சயம் அமைந்திருக்கும் என்பது உண்மையே.

❍❍❍

# கோகிலா மகேந்திரன் எழுதியுள்ள

# "அறிவியல் கதைகள்"






சிறுவர் கூட்டம் பாடசாலை மறந்து, நண்பர்களையும் பிரிந்து, வீட்டிலேயே கணினித் திரையின் முன்னால் சோர்வுடன் அமர்ந்திருக்கும் பெருந்தொற்றுக் காலமிது. இத்தகைய ஒரு கடினமான காலப்பகுதியில் "சோலைக்குயில் அவைக்காற்றுக்கள" வெளியீடாக சிறார்க்கான இந் நூல் வெளிவந்துள்ளது. காலத்தின் தேவைகருதி, சிறாரின் உளநலமும் கருதி, இதனை எழுதியுள்ளவர், எமக்கெல்லாம் நன்கு அறிமுகமான எழுத்தாளர் கோகிலா மகேந்திரன். கடந்த நவம்பரில் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல், இருபத்தாறு பக்கங்களில் கைக்கடக்கமாக வெளிவந்துள்ளது.

மாணவர்களின் மனதைப் படித்த ஆசிரியரான கோகிலா அவர்கள், 5ஆம் 6ஆம் 7ஆம் தர மாணவர்களை, இந்நூலின் இலக்கு வாசகர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கேற்ப, அறிவியல் உலகையும் அதன் விந்தைகளையும் கதை வடிவில் அவர்களுக்குச் சொல்ல விழைந்துள்ளார். சிறார் நூல்களைப் பொறுத்தமட்டில் ஈர்ப்புத்தன்மை என்பது மிகவும் அவசியமான பண்பு என்பது நாமறிந்ததே. எனவேதான், வண்ணப் படங்கள், கண்ணை உறுத்தாத எழுத்துருக்கள், கைக்கு இதமான வழுவழுப்பான தாள்கள் என்பவற்றுடன் இந்நூல் காட்சியளிக்கின்றது. வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் அவர்கள் வழங்கியுள்ள அணிந்துரை நூலுக்குக் கனதி சேர்க்கின்றது.

இந்த உலகை எம்முடன் பங்கிட்டுக் கொண்டுள்ள ஏனைய உயிரினங்களின் கதைகள் தாம் இந்த 'அறிவியல் கதைகள்'! சிறாரைப் பொறுத்தமட்டில், கதை சொல்லப்படும் முறைமை மிகவும் கவனத்துக்குரிய தொன்று. இங்கு அந்த உயிரினங்கள் சிறுவருடன் பேசுகின்றன, கடிதம் எழுதுகின்றன, பேட்டி வழங்குகின்றன. கூடவே, கதையும் சொல்கின்றன. அறிவியல் உண்மைகள் திரிபுபடாதவாறும், அதே சமயம் சிறாரின் ஆர்வத்தைத் தூண்டுமாறு அவற்றைப் பதப்படுத்தியும், கொடுப்பது சவாலானதொரு விடயமே. உளவியலின் நுணுக்கங்களை அறிந்தவரும், இலக்கியப் பரப்பில் தொடர்ந்து இயங்குபவருமான ஆசிரியர் அதுகுறித்து மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார் என்பது வாசிப்பின்போது புலனாகும் விடயம். எனவேதான் கட்டுரை–கதை என்ற இரண்டுக்கும் இடைப்பட்ட எழுத்துநடை ஒன்றை அவர் வரித்துக்கொண்டுள்ளார். புனைவுசாராத எழுத்துக்கள் முக்கியத்துவம் பெற்றுவருகின்ற இன்றைய காலகட்டத்தில், பதின்மவயதை எட்டிப்பிடிக்க உள்ள சிறாருக்கு, அந்நடை விருப்புக்குரியதாக அமையலாம்.



**வசந்தி தயாபரன்**

நூலின் உள்ளடக்கம் சிக்கலற்றது. ஆறு கதைகள் அங்கு ஆர்வத்தைத் தூண்டும் தலைப்புக்களில் காட்சியளிக்கின்றன. **நான்யார்?** என்ற கேள்வியுடன் தனது சுயசரிதையைக் கூறும் ஒரு டைனோசர், **நரிமடல்**

என்ற அடையாளத்துடன் கடிதம் எழுதும் ஒரு நரி, **சொண்டுப் பயணம்** செய்கின்ற கொட்டை வெட்டிப் பறவை, **மாசற்றார் கேண்மை** என நட்புரிமையுடன் பேசுகின்ற டொல்பின், **முருகைக் கல்லாருடன் ஒருபேட்டி** என சிறுமி ஒருத்திக்குப் பேட்டிவழங்கும் முருகைக்கல், **கிள்ளைமொழி** பேசும் பஞ்சவர்ணக்கிளி! இப் பன்மைத்துவம், உள்ளடக்கத்தைக் கவர்ச்சிகரமானதாகத் தூக்கி நிறுத்துகின்றது.

கருத்துப் பரிமாற்றத்தில் மொழியின் பங்கு குறைத்து மதிப்பிடமுடியாதது. அதிலும் சிறாருக்கான இலக்கியம் படைப்போர் இது குறித்து அதீதமான அக்கறை காட்ட வேண்டிய பொறுப்பைச் சுமக்கின்றனர். அவ்வகையில், தனது மொழியாள்கையில், மிகுந்த கவனம்செலுத்தியுள்ள நூலாசிரியர், விடயங்களுக்கு இடையே எமது பாரம்பரிய மொழிவழக்குகள், பழமொழிகள், கோட்பாடுகள் என்பவற்றையும் நாசூக்காக நுழைத்துள்ளார். 'வாழ்வு வந்தால் தாழ்வும் வரும்', 'மருந் துக்கும் இல்லாமல் போனோம்' முதலிய சொற் றொடர்கள், ஔவையின் 'நீர் அளவே ஆகுமாம் நீராம்பல்' டார்வினின் 'தக்கன பிழைத்து வாழும்' முதலியன அவற்றில் சில. வாசிப்பின் இடையே, இரசிக்கத்தக்க சில தொடர்களும் வருகின்றன. 'பெரிய உருப்படி தான்' என்ற டைனோசோர் பற்றிய வர்ணனை, 'சந்தோஷம் வந்தால் விரல் நுனியில் நடப்பேன்' என்று செல்லமாகக் கூறுகின்ற நரி. 'எப்போதும் சிரித்தபடி என் முகம்' என்று பெருமையுடன் சொல்லும் டொல்பின் என இவை வாசிப்பை அழகான அனுபவமாக்குகின்றன. 'எனது பெயர் அழகாக இல்லாவிட்டாலும் நான் வடிவுதான்' என்று கொண்டை வெட்டிப் பறவை பெருமிதம் கொள்வதையும், 'நான் அவ்வளவு பிரபல மானவனா? நான் முகப்புத்தகத்தில் இல்லையே!' என முருகைக்கல் கூறுவதையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ளலாம். எனினும் 'பேரனர்த்தம்' என்பது வாசகரின் வயதுக்குப் பொருத்த மாகுமோ என்று ஒரு எண்ணமும் எழவே செய்தது. அதுபோன்றே, ஜரிகை, ஜாதகம், கம்மி, காலி என்ற வார்த்தைப் பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டு இருப்பின் சிறப்பாக இருந்தி ருக்கும் எனத் தோன்றுகின்றது.

'நரி மடல்' கதையில் தனக்குத் தினமும் ஒரு முட்டை தருவதாக ஒப்பந்தம் கைச்சாத் திடவேண்டும் - அன்றேல் தான் 'பரியாக மாறிக் காட்டுக்குள் ஓடிவிடுவேன்' என நரி கூறுவது, சிறார்களின் ஆர்வத்தையும் இலக்கியத் தேடலையும் தூண்டுகின்ற ஒரு கொளுக்கியாக அமைந்துள்ளது.'பைன் மரம் பைபிளிலே பேசப்படுவது' என்ற தகவலும் இதை யொத்ததே! முருகைக் கற்களுக்கு 'வெப்பநிலை உயர்வு' காரணமாக ஏற்படும் நெருக்கீட்டை, இன்றைய கொரோனாவுடன் ஒப்பிட்டு மிகவும் சுலபமாக சிறாரின் மனதில் பதியச்செய்வது நூலாசிரியரின் ஆக்கத்திறமையைச் சுட்டுகின்றது.

அன்பு, ஒத்துணர்வு, நன்றி எனும் பண்பு நலன்கள், போதனையாகஅன்றி, இயல்பான மறைபொருளாக இந்நூலில் ஒளிந்திருக்கின்றன. தகவல்களும் அடுக்கடுக்காகத் திணிக்கப் படாமல், 'கஞ்சியில் பயறுபோல' கதையோட்டத் துடன் இயைந்து பயணிக்கின்றன. எனவே, அவை சலிப்பூட்டுவனவாக இல்லை. ஒவ்வொரு கதையும் தான் எடுத்துக்கொண்ட விடயப் பரப்பில் முக்கியமானவற்றைக் கட்டுக்கோப்புடன் சொல்லவும் தவறவில்லை, என்பது மகிழ்ச்சிக் குரியது. கோகிலா அவர்களின் செல்லப் பேர்த்தி நயனபாஷினியின் கைவண்ணம் ஓவியங் களாக,சிறுவர் நூலுக்கு அமையவேண்டிய இன்னொரு மேம்பட்ட பரிமாணத்தைக் கொடுக்கின்றது. நூலின் அட்டைப்படத்தைக்கூட அந்தப் பிஞ்சு விரல்களிடமேவிட்டிருக்கலாம் என்பது எனது கருத்து!

சிறுவர் இலக்கியத்தின்முக்கியத்துவம் பற்றிய அருட்டுணர்வு செழிப்பதற்கு,மூத்த எழுத்தாளர்களின் வரவு உதவும் என்பதில் ஐயமில்லை. சமூகச் சிக்கல்கள் பலவற்றுக்கான தீர்வுகளின் வித்துக்கள் இந்தத்துறைக்குள்தான் உள்ளன. எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்களது ஆசிரியவாண்மை, உளநலத் துணையாளர் என்ற தகைமை, என்பவற்றுடன் அவரது எழுத்தின் செழுமையும் இணைந்து இன்னும் பல சிறார் நூல்களை எமக்குப் பெற்றுத்தரவேண்டும்.

# அகிம்சை உரைத்தவரே! அக்கிரமம் பாரீரோ!

எறும்புக்கும் தீங்கு
இளைக்காத பெருமானே!
தீங்குசெய்தோர் திருந்தவெனச்
சென்றவர்தம் காலடியில்
தொண்டுசெய்தீர் மன்னித்தீர்.
திருந்தவவர் வழி சமைத்தீர்
பஞ்சசீலம் போதித்தீர்
பாவத்தை விலக்கென்றீர்
இன்றோ,
பஞ்சமா பாதகத்தை
உம்மைப்
பின்பற்றுவ தாயுரைப்போர்
அஞ்சாது செய்கின்ற
அக்கிரமம் பாரீரோ!
மாற்று மதத்தாரை
மனம்நோகச் செய்வதுவும்
தூற்றியவரைத்
துன்புறுத்தல் செய்வதுவும்
ஏற்றமென எண்ணுகின்றார்
இரக்மில்லா மானிடராய்.
நீர்
மீண்டு பிறந்தாலும்
சத்தியத்தை
ஊன்றி உரைத்தாலும்
ஒன்றுமாகா என்செய்வீர்
ஒருவார்தை இயம்புமையா!

**– ஜின்னாஹ்**

# என் ஞானக்குயிலே!



'பாலை வெளியான நெஞ்சில்
பால் நிலவுப் பாடல் தந்தே
காலம் இனிதாகு மென்றாய்
ஞானக்குயிலே!' ...
காவியங்கள் பாடி நின்றேன்
உன் உயிர்க் குரலில்
என் சுயத்தின் தரிசனம்
என் சுயமென்ன ...
எங்கள் பண்பாட்டின்
ஆக்க இசை மரபே
உன்
ஆத்மாவில்தானே
தன்னைக்கண்டு கொண்டது
எல்லையற்ற ஞானத்துடன்
இதயம் கனக்க
நீ காத்திருந்தாய்
உன்னை
முழுதாய் பருகும் பாய்க்கியமின்றி
அவசர உலகில்
அலைந்து தொலைத்தோம்
பரா
என் ஞானக்குயிலே
என் இறுதிப்பாடலுக்கான
உன் இசையையும்
அன்றே முடித்துத் தந்திருந்தாய்
'குளிரும் நிலவினிலே
இரு பறவை
வளரும் உறவினிலே
ஒரு பிரிவு
நிலவும் சுடுவதுமேன்
இனியிருளா...!'

**– என்.சண்முகலிங்கன்**

மார்ச் 28 - ஆக்க இசை கலைஞர்,ஈழத்து மெல்லிசைக் கலை மூலவர் ,மூத்த ஒலிபரப்பாளர் எச்.கே பரராஜசிங்கம் 22 வது ஆண்டுநினைவுகள் மீட்டப்படுகின்றன.

# சுந்தரம் சுவைப்போம்



**[06]**

- B. **சந்திரன் ஐயர்**

ஒரு செயலின் ***ஆரம்பம்*** சரியாக அமையவேண்டும் என்பது மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது. செயல்களின் ஆரம்பங் களுக்கு எமது முந்தையோர் அதீத முன்னுரிமை வழங்கி வந்துள்ளதைக் காணலாம்.

***வால்மீகி***, சுந்தர காண்டத்தின் தொடக் கத்திலே ஹனுமானின் செயல்களின் வாயி லாக ஆரம்பத்தின் முக்கியத்துவத்தை அழ காகப் பதிவு செய்துள்ளார்.

வாலியின் மகனான அங்கதனின் தலை மையில் வானரக் கூட்டம், சீதையைத் தென்திசையிலே தேடி ஒருமாத காலமாக அலைகின்றது. சீதை எங்கும் கிடைத்திலள். ஜடாயுவின் சகோதரனான ***சம்பாதி*** மூலமாக இலங்கையிலே சீதை இருப்பதைத் தெரிந்து கொள்கின்றனர். ஹனுமான் இலங்கையை நோக்கி தனித்துப் புறப்படுகின்றான். அவன் மகேந்திர மலையில் ஏறி இலங்கையை நோக்கிச் செல்ல ஆயத்தமாகின்றான். இங்கே தான் சுந்தர காண்டம் ஆரம்பமாகின்றது.

ஏற்கனவே சீதையை ஒரு மாதமாகத் தேடிய போதிலும், இலங்கைக்கு ஹனுமான் தனித்து தேடச் செல்வது ஒரு புதிய ஆரம்பமாகும். மலையின் உச்சியிலே ஏறிய ஹனுமான், தான் செய்யப் போகின்ற செயலானது வெற்றி கரமாக அமையவேண்டும் என்பதற்காக வணக் கத்தைத் தெரிவிக்கின்றான். *(ஸர்க்கம்-1)*

*மகேந்திர மலைமீது ஏறிய ஹனுமான், கிழக்கு திசை நோக்கி வணங்குகின்றான். பின்னர், தனக்கு குருவாகிய சூரிய பகவானையும், தந்தையாகிய வாயு பகவானையும், தனக்கு அருள் நல்கிய இந்திரனையும், தனக்கு வரங்கள் அளித்த பிரம் மாவையும் கரங்களினால் அஞ்சலி முத்திரை கொண்டு வணங்கிவிட்டு தனது பயணத்தின்மீது புத்தியைச் செலுத்தினான்.*

வால்மீகி, இதிலே ஒரு நுட்பம் வைக் கின்றார். கூர்ந்து கவனித்தால் இந்த வழி பாட்டிலே இராமனையோ சீதையையோ ஹனுமான் வழிபாடு செய்யாமையை நாம் காணலாம்.

வால்மீகி வைத்த நுட்பம் என்ன...?!

இலங்கையை அடைந்த ஹனுமான் முதலிலே எங்கு தேடியும் அவனால் சீதை யைக் காணமுடியவில்லை. மனமுடைந்த ஹனுமான், தேடிய இடங்களிலெல்லாம் மீண்டும்மீண்டும் தேடுகின்றான். ஆனாலும் அவனின் கண்களுக்கு சீதை தென்படவே இல்லை. தான் சீதையைக் காணாது திரும்பிச் சென்றால் யாரெல்லாம் துக்கத்தால் உயிர் துறப்பார்கள் எனக் கோவையாக எண்ணி, அவன் மனம் கலங்குகின்றான்.

மனமுடைந்த ஹனுமான், லக்ஷ்மணனுடன் கூடிய இராமனுக்கும் சீதைக்கும் நமஸ்காரம் செய்கின்றான். அவன் நமஸ்காரம் செய்தது தான் தாமதம், அசோகவனமானது ஹனுமா னின் கண்களுக்குத் தெரிகின்றது. பின்னர் நடந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. சீதையைக் கண்டான், இலங்கைக்கு தீ வைத் தான், வெற்றியுடன் இராமனிடம் திரும்பினான்.

ஹனுமான் வழிபட்ட இந்த சுலோகமானது மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. *(ஸர்க்கம்-13)*

நமோஸ்து ராமாய ச லக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்ய ஜனகாத்மஜாயை
நமோஸ்து ருத்ரேந்திர யமாநிலேப்யக
நமோஸ்து சந்திரார்க்க மருத் கணேப்யக

மனமுடைந்த சந்தர்ப்பங்களிலே இந்தச் சுலோகத்தைக்கூறி வழிபடும் வழக்கம் இன் றும் பரவலாக மக்கள் மத்தியிலே உள்ளது.

சுந்தரகாண்டத்திலே ஹனுமான் செய்கின்ற இன்னுமொரு செயலானது ***ஆரம்பத்தின் முக் கியத்துவத்தை*** எமக்கு மீண்டும் வலியுறுத்து கின்றது.

கடலைத் தாண்டி இலங்கையை அடைந்த ஹனுமான், இரவுவரை காத்திருந்து நகருக் குள் நுழைகின்றான். தான் முதலாவதாக இலங்கை நகருக்குள் நுழையும்போது

இலங்கைக்கு நன்மை ஏற்படக்கூடாது என்பதற்காக **முன்வாயிலின் வழியாக உள்ளே நுழையாமல் மதிலின்மேல் ஏறித் தாண்டி கொல்லை வழி**யாகச் செல்கின்றான். "பகைவரது இருப்பிடத்தை வாயில் வழியாலே சேர்தல் ஆகாது" என எமது பண்டைய நூல்கள் கூறுவதையும் இவ்விடத்திலே ஞாபகத்திலே கொள்ளலாம். **கம்பனும்** இந்த இடத்திலே நுட்பமாகக் கவனம் செலுத்தியுள்ளான்.



வீரனும், விரும்பி நோக்கி, மெய்ம்மையே விளைவும் அ∴து"
என்று,
ஆரியன் கமல பாதம் அகத்து உற வணங்கி, ஆண்டு, அப்
பூரியர் இலங்கை மூதூர்ப் பொன் மதில் தாவிப் புக்கான்
சீரிய பாலின் வேலைச் சிறு பிரை தெறித்தது அன்னான்

இலங்கை நகருக்குள் உள்ளே நுழையும் முன்னர் இலங்கையின் நகரத்து வாயிலிலே ஹனுமான் நின்றவாறு **இராமனைத் துதிப்பதாகக் கம்பன் பாடியுள்ளான்**. இராமனைத் துதித்துவிட்டு மதில்மேலே ஏறித் தாவி ஹனுமான் உள்ளே செல்கின்றான். அவன் நகருக்குள் நுழைந்த செயலானது, நிறைந்த பாலுக்குள்ளே சிறிய அளவு மோர்த் துளி விழுந்ததுபோல இருந்த தாகக் கம்பன் உவமை கூறுகின்றான். எவ்வாறு சிறிய துளி மோரானது அனைத்துப் பாலையும் திரிபடையச் செய்து கெடுத்துவிடுமோ அதே போன்று சிறிய உருவம் கொண்ட ஹனுமா னின் நுழைவானது இலங்கைக்கு அழிவைத் தந்தது.

இதைவிட நுட்பமான செயல் ஒன்றை **வால்மீகி** பதிவு செய்கின்றார். தன்னுடைய வரவு, இலங்கை நகரத்துக்கு நன்மை பயக்கக்கூடாது என்பதற்காக வேண்டுமென்றே **இலங்கை நகரத்துக்குள் ஹனுமான் நுழையும்போது அமங்கலமாக தனது இடதுகாலை முதன்முதலிலே** வைத்து உள்ளே நுழைகின்றான்.

அதன்பின்னர், இலங்கைக்கும் இராவண னுக்கும் நடந்தவை பற்றி அனைவரும் அறிவர்.

"முதற் கோணல் முற்றிலும் கோணல்" எனும் பழமொழி இந்தப் பின்னணியிலே எம் மிடையே உள்ளதை நினைவில் கொள்ளலாம்.

இன்றும் திருமணச் சடங்குகளிலே **மணப் பெண் வீட்டுக்கு முதற்தடவை வரும்போது தனது வலதுகால் வைத்து** வரவேண்டிய வைதீக முறை இருப்பதைக் காணலாம்.

மணப்பெண் வலதுகால் வைத்து முதற் தடவையாக உள்ளே செல்லும்போது, மன திலே களங்கம் அற்றவளாக வீட்டுக்குள் பிர வேசிக்கின்றேன், எமக்குச் சந்ததி தோன்ற வேண்டும். போன்ற முறையான வழிபாடு களுடன் இந்தத் திருமணச் சடங்கின் பகுதி கூறப்பெற்றுள்ளன.

இவ்வாறாக, ஆரம்பம் சரியாக அமைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் நூற் றுக்கணக்கான உதாரணங்களை நாம் இராமா யணத்திலே காணலாம்.

இதேபோன்று செய்யத் தொடங்கும் செயல்கள், தடைகள் இன்றி முடிவடைய வேண்டும் என்பதற்காக மங்கலமாகச் செய்யும் பல செயற்பாடுகளையும் இராமாயணம் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

**வால்மீகி, தபஸ்** எனும் மங்கலச் சொல்லிலும், **கம்பன், உலகம்** எனும் மங்கலச் சொல்லிலும் இராமாயணங்களைத் தொடங்குவதும் **காளி தாசன், வாக்கு** எனும் மங்கலச் சொல்லிலும், **அரசகேசரி, உலகம்** எனும் மங்கலச் சொல்லிலும் இரகுவம்ச காவியங்களைத் தொடங்குவதும் இந்தக் காரணங்களாலேதான்.

ஆரம்பம் மங்கலகரமாகவும் சரியாகவும் அமைந்தாலேதான் காரியங்கள் சிறப்புற நிறை வுறும்.

**(சுவைப்போம்...)**

❍ ❍ ❍

ரஷ்ய மொழிச் சிறுகதை

# மெக்ஸிம் கோர்க்கி-யின் கொலுஷா



சிங்களமொழியில்
சாலியகுணவர்தன



தமிழாக்கம்
மலரன்பன்

பொதுமயானத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக வேறாக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் காற்றில் பறந்துவந்த இலைகுழை சருகுகள் பரவிக்கிடக்க, இற்றுப்போய் வீழ்ந்துகிடக்கும் பழைய புதைகுழி தோரணமொன்றினருகே, இலையுதிர்ந்து மூளியாகநிற்கும் இரண்டு பேர்ச் மரங்களுக் கிடையிலுள்ள கட்டடத்தின் தரையில் முழங்கால்களில் மண்டியிட்டுள்ள மாது ஒருத்தி மெல்லிய கதர் கறுப்புத் துணியினால் முக்காடிட்டிருக்கின்றாள்.

வெள்ளி நிறமாக மாறிக்கொண்டிருக்கும் மயிர் கற்றைகளில் சில ஒட்டி உலர்ந்து சோகத்தின் அடையாளமாய் சுருக்கம் விழுந்துள்ள கன்னங்களில் கோடிழுத்திருக்கின்றன. காய்ந்து வரண்டுபோன மெல்லிய உதடுகளின் ஓரங்களிலும் சுருக்கங்கள். இரவெல்லாம் தனியே நித்திரையின்றி விம்மிவிம்மி அழுதுகொண்டிருந்தமையினால் கண்ணிமைகள் வீங்கியிருக்கின்றன.

சற்றுத் தொலைவில் அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்த என்னைப்பற்றிய எந்த சிரத்தையுமில்லாமலிருந்த அவளின் அருகே நான் சென்றபோதும்கூட எதுவித சலனமு மில்லாமலிருந்தவள் தலையை சற்றே உயர்த்தி, வெளிறிப்போன கண்களினால் ஒருமுறை என்னைப் பார்த்து மீண்டும் தலைகுனிந்து புதைகுழியை வெறித்துப் பார்த்தவாறு இருக்கின்றாள்.

நான் அவளருகே சென்று எதிர்பார்த்த குறைந்தபட்சம் ஒரு சமிக்ஞையோ அல்லது அதற்கான அறிகுறியோகூட அவளிடமிருந்து தென்படவில்லை.

சம்பிரதாயத்திற்காக நானே அவளிடம் பேச்சை ஆரம்பித்தேன். ஓரிரு வார்த்தைகள் பேசிய நான், அந்த குழிமேட்டில் புதைக்கப்பட்டுள்ளது யாரெனக் கேட்டேன்.

என்னுடைய மகன்!”

பொறுமை யிழந்தவளாய் உதாசீனத் தொனியில் பதில் சொன்னாள்.

“பெரிய பிள்ளையா?”

“பன்னிரண்டு வயது!”

“இறந்தது எப்போது?”

“தற்போது நான்கு வருடங்களாகின்றன.”

நீண்ட பெருமூச்சுவிட்ட அவள் காற்றில் அலைபாய்ந்த மயிர்களைவருடி, முக்காட்டினுள் மறைத்துக் கொள்கிறாள். கடும் கோடைநாள் சூரியன் சிறிதளவேனும் கருணை யில்லாமல் இறந்தவர்களின் இடுகாட்டுமண்ணில் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. வளர்ந்துள்ள புற்கள் வெய்யிலில் வாடி, கருகி தூசுகள் நிறைந்து மண்ணிறமாக மாறி யிருக்க. பட்டமரங்களும், புதைகுழிகளில் நடப்பட்டுள்ள சிலுவைகளும் இறந்துபோனவர்களைப்போல சோகமயமான தொரு தோற்றத்தைத் தருகின்றது.

“உங்களின் மகன் இறந்தது எதனால்?”

சிறுவனின் புதைகுழியை உற்றுப் பார்த்தவனாய் நான் கேட்கிறேன்.

“குதிரைகளின் கால்களில் மிதிபட்டு”

மெலிந்தசுருக்கம் விழுந்த கையினால் குழிமேட்டைக் காட்டுகிறாள்.

“என்ன நடந்தது?”

நான் அவளைப்பற்றி எந்த ஒரு அக்கறையும் கொள்ளாமலிருப்பது எனக்குப் புரிகின்றது. அந்தப் பெண்ணின் உதாசீனச் செயல் எனக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கின்றது. அவளது கண்ணீர் எனக்குள் ஒரு குரூரதிருப்தியை ஏற்படுத்துகின்றதா? அவளது அந்தமௌனம் ஒருவித அலட்சிய பாவத்தை வெளிப்படுத்துவது போலவும் நடவடிக்கைகளில் எந்த ஒருமாற்றமும் தென்படவில்லை.

எனது கேள்வியினால் அவளது விழிகள் என்னை உற்று நோக்குகின்றன. உச்சிமுதல் உள்ளங்கால்வரை வெறித்துப் பார்த்தவள், நீண்டதொரு பெருமூச்சுடன் சாந்தமான தொனியில் அவளது துயரம் நிறைந்த கதையை சொல்லத் தொடங்கினாள்...........

"நடந்தது இதுதான். எனது மகனின் தந்தை பணமோசடி வழக்கொன்றில் குற்றவாளியாகி ஒன்றரைவருடம் சிறைசெல்ல நேர்ந்தது. அந்தநாட்களில் கையில் மடியில் இருந்த பணமெல்லாம் செலவாகிவிட்டது.

"அப்படியொன்றும் பெரிதாக காசு பணம் இருக்கவில்லைதான். என்னுடைய புருஷன் சிறையிலிருந்து விடுதலையாகி வரும்வரை நாங்கள் சமையலுக்கு விறகுக்கு பதிலாக வைக்கோலையே பயன்படுத்தினோம். எனக்கு தெரிந்த தோட்டக் காவல்காரன் ஒருவன் ஒருவண்டி வைக்கோல் கொண்டுவந்து தந்தான். வைக்கோல் எரியும்போது வீட்டினுள் கடும் புகை மண்டலம் சூழ்ந்துகொள்ளும். சமைத்த உணவு கொஞ்சம்கூட ருசியாக இருக்காது. சாப்பாடெல்லாம் ஒரே புகை மணம். அப்போது எனது மகன் கொலுஷா பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தான். அவன் மிகவும் சுறு சுறுப்பான துடிப்பானவன். எனது வறுமை நிலையை அந்த சிறியவயதிலேயே நன்றாக புரிந்துகொண்டிருந்தான். சாந்தமான அவன் முகத்திலும், கண்களிலும் சோகம் குடி கொண்டிருக்கும். நிலைமைக்கேற்ப சிக்கனமாக வாழப் பழகிக்கொண்டவன். பாடசாலை விட்டுவரும் வழியில், வீதியோரம் கிடக்கின்ற ஒடி விறகுகள், சுள்ளிகள், குச்சிகளை பொறுக்கி எடுத்துக் கொண்டுவருவான். ஏதாவது கொடுத்ததை சாப்பிடுவான். எதையும் கேட்டு நச்சரிக்க மாட்டான். பனி உருகியோடிய வசந்த காலமது. தோலினால் தைக்கப்பட்ட ஒரேயொரு சப்பாத்து ஜோடிமட்டுமே கொலுஷாவுக்கு இருந்தது. அவற்றைக் கழட்டிப் போடும்போது பாதங்கள் இரண்டும் இரத்தநிறமாக மாறியிருக்கும். இவ்விதமாக நாங்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும்போது, ஒருநாள் கொலுஷாவின் தந்தையை சிறையிலிருந்து விடுதலை செய்து குதிரை வண்டியில் கொண்டு வந்தார்கள். சிறையில் அவருக்கு பெரிதாக நோய் ஏற்பட்டிருந்தது. அவர் என்னைப்பார்த்து மெல்லசிரித்தார். அவரைப் பார்த்தவாறு இருந்த எனக்கு மனதில் இப்படித் தோன்றியது.

இந்த துயரத்தை எல்லாம் எனக்கு தந்தவன் நீதான். இனி, நான் உன்னையும் பராமரிக்க வேலைசெய்யவேண்டும், பாடுபடவேண்டும். உன்னை ஒருகுழியில்தான் தள்ளவேண்டும்.

ஆனால், தந்தையைக் கண்டவுடன் கொலுஷா அழுதான். பனிபடர்ந்ததுபோல ஆகியதுமுகம். கண்களில் தாரைதாரையாக கண்ணீர் வழிந்தது.

"அம்மா அப்பாவுக்கு என்ன நடந்திருக்கு?" என்னிடம் கேட்டான்.

"அந்த ஆளின் காலம் குறுகிக்கொண்டு வருகின்றது" என்றேன் நான் வெறுப்புடன்.

எங்கள் நிலைமை நாளுக்குநாள் மோச மாகிக் கொண்டே போனது. கை விரல்கள் தேய்ந்துபோகும் வரைக்கும் வேலை செய்தும் கூட, இருபது கொபெக்குக்கு மேலாக ஒரு தம்பிடிகூட கிடைப்பதில்லை. அதுவும்கூட எப்போதாவதுதான். இதைவிட சாவதுமேல்.

சிலநேரங்களில் நானே எனது நெஞ்சில் கைகளினால் ஓங்கி ஓங்கிஅடித்துக் கொள்வேன். அதைக் காண்கின்ற கொலுஷாவின் முகம் கருமையடைந்து வாடிவிடும். அவன் அமைதி யில்லாமல் துடித்துக் கொண்டிருப்பான். கண்ணி மைகளில் நீர் நிறைந்திருக்க மௌனமாக அனாதையைப்போல அவன் பார்ப்பது பரிதாபமாக இருக்கும் இவற்றையெல்லாம் நினைத்து நினைத்து பொறுமையிழந்து நான் ஒருநாள், என்னையறியாமலேயே பேசி விட்டேன். பேசினேனா? இல்லை என்னை யறியாலேயே வார்த்தைகள் வெளிவந்து விட்டன.

"ஐயோ எனக்கு ஏன் இந்த தரித்திரம் பிடித்த வாழ்க்கை. ஒன்று நான் சாகனும் இல்லைன்னா நீங்கள் எங்கயாவதுபோய் செத்துதொலைங்க". கொலுஷாவையும் அவனது தந்தையையும் பார்த்துதான் பேசினேன்.

"நான் நீண்டநாட்கள் வாழப்போவதில்லை. கொஞ்சம் பொறுத்துக்கொள். என்னை ஏசாதே"

தலையை ஆட்டியபடியே கொலுஷாவின் தந்தை.

என்னையே மௌனமாகப் பார்த்தவாறு இருந்தான் கொலுஷா, அப்பொழுதும் அவன் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போன்ற அந்தப் பரிதாபமான பார்வை. எப்போதாவது வேலைகிடைக்கின்ற நாட்களில் அம்மாவுக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்தில் மூன்றுபேர் கால்வயிறு அரை வயிறுமாக நாட்களைக் கடத்துவதுபற்றி அந்த சிறுவயதிலும் யோசித்துக் கொண்டிருக்கக்கூடும் கடைசியாக ஒருமுறை என்னையும் தந்தையின் முகத்தையும் பார்த்தான் அப்பொழுதும் அவன் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போன்ற அந்த பரிதாபமான பார்வை. கொலுஷா கீழேகுனிந்தபடி வீட்டைவிட்டு வெளியேபோனான். அவன் போனதன் பின்னர், நான் ஏன் இப்படியெல்லாம் பேசினேன் என்று எனக்கு வேதனையாகவும், துக்கமாகவும் இருந்தது. நான் என்னையறியாமல் அவசரத்தில் பெரிய தவறுசெய்துவிட்டேன். காலதாமதம் செய்துவிட்டேன். ஆமாம் மிகவும் தாமதம் செய்துவிட்டேன்.

ஒருமணித்தியாலம்கூட ஆகியிருக்கவில்லை. குதிரைவண்டி யொன்றில் பொலிஸ்காரர் ஒருவர் எங்கள் வீட்டுக்குவந்தார்.

கொஸ்பதா ஷிஷேனிக்கா என்பது நீங்கள்தானா?'' என்று என்னிடம் கேட்டார். எனது நெஞ்சம் பதைபதைத்து துடிக்கின்றது.

“உங்களுக்கு ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு செய்திவந்திருக்கு. அனோகின் முதலாளியின் குதிரைகள் உங்கள் மகனை மோதிச் சென்றுள்ளன.''

நான் அந்தவண்டியிலேயே ஏறிச்சென்றேன். வண்டியின் ஆசனம் அக்கினியால் தகிப்பதுபோல இருக்கின்றது எனக்கு.

தரித்திரம் பிடித்தவளே என்ன காரியம் செய்துவிட்டாய் நீஷ!'' என்னை நானே திட்டிக்கொள்கின்றேன்.

இறுதியில் ஆஸ்பத்திரி வார்டுக்குச் செல்கிறேன். முழு உடம்புமே வெள்ளைத் துணிபட்டியினால் சுற்றப்பட்ட கொலுஷா கட்டில் ஒன்றில் சுருண்டு கிடக்கின்றான். என்னைக் கண்டதும் மெல்ல பேசமுயற்சிக்கின்றான். கண்களில் கண்ணீர் வழிந்தோட முணங்கியவாறு சொல்கிறான்.

“என்னை மன்னித்துக்கொள் அம்மா!'' மெல்லிய ஸ்தாயியில் நடுங்கும் குரலில். “பொலிஸ்காரர் நிறைய பணத்தை எடுத்துக் கொண்டார்.''

“பணமா? எந்தப்பணம் மகனே கொலுஷா?...''

“தெருவில் ஆட்கள் கொடுத்த பணம். அதோடு அனோகின் முதலாளி கொடுத்ததும்தான்......''

“ஆட்கள் ஏன் உனக்கு பணம் குடுத்தாங்க,'' நான் கேட்டேன்.

அவன் தனது காயம்பட்ட இடங்களை கண்களினால் காட்டி

“இதற்காகத்தான்'' என்கிறான் ஈனஸ்வரத்தில். அதேவேளை அவனது கண்கள் பெரிதாக விரிகின்றன.

“கொலுஷா குதிரைகள் வருவதை நீ பார்க்க வில்லையா?''

“குதிரைகள் வருவதை நான் கண்டேன்தான் அம்மா. ஆனால் நான் விலகிப்போக விரும்ப வில்லை. குதிரைகளினால் நான் மிதிக்கப் பட்டு காயம்பட்டால் ஆட்கள் எனக்கு பணம் கொடுப் பார்கள் என்றுநான் நினைத்தேன். உண்மை யிலேயே நான் நினைத்தபடி ஆட்கள் கொடுத்தார் கள்தான்.''

இப்படித்தான் அவன் சொன்னான். எல்லாம் எனக்கு மனத் திரையில் தெரிகின்றது. அவன் என்ன செய்திருக்கிறான் என்பது தெளிவாகப் புரிகின்றது. நான் பெற்ற வீரத்திருமகன். இருந்தும் காலம் கடந்துவிட்டது. மறுநாள் அவன் இறந்துவிட்டான். ஆனால் இறுதிவரை அவன் சுய நினைவோடுதான் இருந்தான்.

“இன்ன இன்னதெல்லாம் அப்பாவுக்கு வாங்கிக் கொடுங்கள். அம்மாவுக்கும் தேவையான வற்றையெல்லாம் வாங்கிக் கொள்ளுங்கள்.''

ஏதோ பெரிதாக பணம் இருப்பதுபோல் சொன்னான். இருந்ததோ ஏழே ஏழு ரூபிள்கள் மட்டுமே.

நான் அனோகின் முதலாளியைச் சந்திக்கப் போனேன். அவர் என்னிடம் ரூபிள் ஐந்தைக் கொடுத்து,

“பொடியன் தான் வேணுமென்றே குதிரைகளுக்கு முன்னால் பாய்ந்திருக்கின்றான். நிறைய ஆட்கள் பார்த்திருக்கிறார்கள். நீ இன்னும் என்ன கேட்கிறாய்?'' அதற்குப் பின்னர் நான் அவரிடம் போகவில்லை.

இதுதான் நடந்தது இளைஞனே.

கதையைக் கூறிமுடித்தவளிடம் மீண்டும் அவளது வழக்கமான உதாசீன தோற்றம் வெளிப்படுகின்றது.

இடுகாடு சூனியமாகத் தெரிகின்றது. சிலுவைகள், மொட்டைமரங்கள், மண்மேடுகள்

வெறுமையாக காட்சியளிக்க அங்கே சோக மயமாக குந்தியிருக்கும் பெண், இவை யாவும் மரணமும் மனிதவாழ்வின் துன்பங்கள் பற்றிய எண்ணங்களும் தொடராக என்னுள் எழ, துயரம் பீரிடுகின்றது.

மேகங்கள் இல்லாவானில் சூரியக் கதிர்களின் வெம்மை சுட்டெரிக்கின்றது.

நான் எனது சட்டைப் பையிலிருந்து சில்லறைகளைப் பொறுக்கியெடுத்து துர்பாக்கி யமாய் கொல்லப்பட்டவனின் - இன்னும் உயிரோடிருக்கும் அந்த தாயிடம் நீட்டுகின்றேன்.

அவள் தலையை உயர்த்தி மெல்லியகுரலில் சொல்கிறாள்

"இளைஞனே நீங்கள் ஒன்றும் கஸ்டப்பட வேண்டாம். எனது இன்றைய தேவைக்கு போதுமானது என்னிடம் இருக்கின்றது. அதற்கு மேலதிகமாக ஒன்றும் தேவையில்லை. நான் தனித்துவிட்டேன். ஆமாம் முழு உலகமும் எனக்கு தனிமையாகிவிட்டது..............."

நீண்ட பெருமூச்சுடன் முகத்தில் சோகம் படர உதடுகளை இறுக்கிக் கடித்துக் கொள்கிறாள்.

○○○

# விருந்தாளி

ஆவணி மாதம், காலைப்பொழுது
நீராடிக் கொண்டிருந்தவேளை
அவனைக் கண்டேன்
நீர்த்தொட்டியின் விளிம்பில் அமர்ந்தபடி
வைத்தகண் வாங்காது
கள்ளமின்றி என்னைப் பார்த்துக்
கொண்டிருந்தான்!
இருசாராரும் விட்டுக் கொடுப்பதாயில்லை
பழுப்பு நிறத்தில் ஈரமாய்
பளபளப்பாய்
பார்க்கவே பிடிக்கவில்லை!
வாரியள்ளி வெளியே வீசவேண்டும்
என்று உள்ளுணர்வு சொல்லிற்று
ஆனால் எப்படி?
தொட விருப்பமில்லை
பளபளக்கும் கண்கள்
உடல் பிசுபிசுக்கும் போல!
நேரமாகி விட்டதால்
குளித்து முடிய
அவசரமாக வெளியேறினேன்
அவனை விட்டுவிட்டு!

அடுத்த நாள் காலையும்
அவன் அங்கிருந்தான்
'இதென்ன தொந்தரவு!'
என்றலுத்த நான்
ஒரு வாளி வெந்நீரை அவன் மேல்
வீசினேன்
அந்தக் குளியலை அவன்
ஆனந்தமாக அநுபவித்தது தெரிந்தது!
எமது சந்திப்பு ஒவ்வொரு நாளும் தொடர்ந்தது
என்னுள் இருந்த தத்துவஞானி
குரல் கொடுத்தான்
"உன்பால் வந்த விருந்தாளி மீது
ஏனிந்தக் காரணமில்லா வெறுப்பு?
உன் குளியலறையை அவன்
பயன்படுத்தினால்
குறைந்தா போய்விடும்?
'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!'
என்று நீ பேசுவது வெற்றாரவாரமா?"

என்னில் ஒரு மாற்றம் ஏற்படுவதை
என்னால் உணரமுடிந்தது
தவிர்ப்பு எதிர்பார்ப்பாய்
அருவருப்பு ரசிப்பாய் மாறியது

அன்று விடுமுறை நாள்
சாவகாசமாக குளியலறை புகுந்தேன்
என் கண்களை நம்ப முடியவில்லை!
வழமை போல் என் விருந்தாளி இருந்தான்
ஓர் ஒயிலான பெண் துணையுடன்!
'ஆளைவிடு!' அலறினேன் நான்!
"நீங்கள் இருவரும் ஒரு கூட்டம்
வாற் பேத்தைகளைப் பெற்று
என்னை வெளியே துரத்தி விடுவீர்கள்!"
"தம்பட்டம். தம்பட்டம்!" என்று மிழற்றியது
பெண்
"புகலிடம் கோருகிறாயா?"
"தம்பட்டம், தம்பட்டம்!"
"சரி, சரி
ஆனால் கவனம்!
எங்கள் தோட்டப் பக்கம்
ஒரு சாரைப் பாம்பு வருவதுண்டு!"

மனம் அமைதியடைகிறது
அடுத்தடுத்த மாதம்
மாரி தொடங்க
"தம்பட்டம், தம்பட்டம்"
என்ற தாலாட்டைக் கேட்டபடி
நான் கண்ணுறங்கலாம்
குறையொன்றுமில்லை!

— சோ.ப

# கலை இலக்கியத் திறனாய்வும் மேட்டுமை உளப்பாங்கும்



பேராசிரியர்
சபா ஜெயராசா

சமனற்ற சமூகவளர்ச்சியும், ஏற்ற இறக்கங்களும், கலையாக்கத்திலும், திறனாய்விலும் முரணுறு நிலைகளைத் தோற்றுவித்தன. மேட்டுக்குடியினருக்குரியவை, விளிம்பு நிலையினருக்குரியவை என்றவாறு கலையாக்க நடப்பு நிலைவரம் தோற்றம் பெற்றது. கலை இலக்கியங்களை அதிகாரத்தின் வடிவங்களாக மேட்டுக்குடியினர் ஆக்கிக் கொண்டனர். அவர்களே தொன்மையான சமூகத்தில் எழுத்தறிவுடையோராய் இருந்தமையால், எழுத்து வழியான திறனாய்வும் அவர்களுடைய தீர்மானிப்புக்கு உட்பட்டதாகவே அமைந்தது.

தொன்மையான உரோமர் மற்றும் கிரேக்கர்களின் கலைப்பண்பாட்டில் செவ்வியற் கலைகளும் மேட்டுமை உளப்பாங்கும் ஒன்றிணைந்துகொண்டன.

உரோமர்களின் வரலாற்றில் (கி.மு 480 – 323) பகுதி பொற்காலமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்தில் அடிமைகள் முழுநிறைவடையாதவர்கள் என அதிகாரமுடையோராய் அடையாளப் படுத்தப்பட்டனர். அக்காலத்தில் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் உயர்குடி ஆண்களையும் பெண்களையும் மாதிரிகை வடிவினராக வைத்தே ஆக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதே நிலைவரம்தான் கிரேக்க சிற்பங்களிலும் காணப்பெற்றது.

அவர்களால் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான கட்டடங்கள் அதிகாரத்தின் வடிவங்களாகவும், கீழ்ப்படியவைக்கும் பயமுறுத்தலைக் கொண்டவையாகவும், அமைந்தன. பிரமாண்டமான பெருவடிவங்கள் உளவியல் நிலையில் இலகுவாகப் பயமுறுத்தலை ஏற்படுத்தவல்லவை. அதிகாரம், கட்டடக் கலையாலும் வெளிப்படுத்தப்பட்டது.

பேரரசுகள் பெரும் கட்டடங்களை ஆக்கியமை உலகெங்கும் காணப்படும் ஒரு பொதுப்பண்பு. கட்டடங்களின் பெரும் தூண்களில் சிங்கம், புலி, குதிரை, முதலாம் வலிய விலங்குகளை செதுக்கி ஒன்றிணைத்தமையும் அதிகாரத்தின் பலத்தைக் காட்சி வடிவில் நிறுவுவதாயிற்று.

கலைகளிலும் இலக்கியங்களிலும் ஊடுருவிய மேட்டுமை உளப்பாங்கு "அதீத அலங்காரம்" என்ற செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. கட்டடங்களிலும் பாவனைப் பொருட்களிலும் அதீத அலங்கார வடிவங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. அவையும் அதிகாரத்தைக் கலைவடிவிற் காட்டின.

இலக்கியங்களின் தரம், அதில் இடம்பெறும் அலங்காரங்களினால் தீர்மானிக்கப்பட்டது. அலங்காரத்தைப் பகுத்து விளக்கும் அலங்கார சாஸ்திர நூல்களும் எழுதப்படலாயின. வலிந்து அலங்காரங்களைப் புகுத்தும் செயற்பாடுகளும் இடம்பெறலாயின.

அதேவேளை நாட்டார் கலை இலக்கியங்களில் அதீத அலங்காரம் தவிர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டது. நேரடி வெளிப்பாடுகளால் மனவெளிச்சிக் கையளிப்பு செறிவுடன் மேற்கொள்ளப்பட்டது. நாட்டார் பாடல்களை ஆராய்ந்து பார்க்கையில் இக்கருத்துத் தெளிவாகப் புலப்படும்.

தற்கால அரங்கியலில் பேசப்படும் "வறியோர் அரங்கு" (POOR THEATRE) நாட்டார் அரங்கை அடியொற்றி மேலெழுந்த கருத்துவடிவமாகும்.

மேட்டுமை நோக்கில் உயர்குடிப் பிறந்தோரே வீரர்கள் என்ற அடையாளத்துக்கு ஏற்றப்பட்டு எழுத்துவழி இலக்கியங்களிலே புகழ்ந்துரைக்கப்பட்டனர். தொன்மையான கிரேக்க இலக்கியங்களில் மட்டுமன்றி தமிழர் வீரயுகப் பாடல்களிலும், அதே நிலைவரம் காணப்பட்டமையைப் பேராசிரியர் க.கைலாசபதி தமது ஆய்விலே சுட்டிக்காட்டியுள்ளார்.

விளிம்புநிலை மக்களிடத்தே தோற்றம் பெற்ற வீரர்கள் வாய்மொழிப் பாடல்களாலும், வழிபாடுகளினாலும் நாட்டார் அரங்குகளினாலும் நிலைநிறுத்தப்பட்டனர். சமூக ஏற்றத்தாழ்வும் வர்க்க வேறுபாடும் வீரர்களாலும் வெளிப்படுத்தப்பட்டது.

கலை இலக்கியங்களை மேட்டுமை நோக்கில் பாகுபடுத்தமுயன்றோர் "செவ்வியல்" அல்லது "செந்நெறிப்பாங்கு" என்பதை முன்வைத்தனர். நாட்டார் கலை இலக்கியங்கள் செவ்வியல் (CLASSIC) என்ற அடையாளத்துக்கு உட்படுத்தலை மேட்டுமை உளப்பாங்கினர் ஏற்றுக்கொள்வதில்லை. (அண்மையில் வெளிவந்த ஹரிபொட்டர் நாவல் செவ்வியற்படைப்பு என அடையாளப் படுத்தப்பட்டிருத்தல் பிறிதொரு செய்தி)

தமிழ் மரபில் கருநாடக இசை, தேவரடி யார் ஆடல் ஆகியவை செவ்வியல் அடையாளத்துக்கு உட்படுத்தப்பட்டிருத்தலும், நாட்டார் இசை, நாட்டுக்கூத்து முதலியவற்றுக்கு செவ்வியல் அங்கீகாரம் வழங்கப்படாதிருத்தல் மேட்டுமை உளப்பாங்கின் பிறிதொரு வடிவம். மேலும் கர்நாடக இசைக் கச்சேரியில் நாட்டார் பாடலைப் பாடுதல் இழுக்கென்று கருதப் படுகின்றது.

தமிழிசை இயக்கம் எழுச்சி கொள்வதற்கு முதல், கருநாடக இசைக்கச்சேரிகளில் தமிழ்ப்பாடல் பாடுதலும் இழுக்கென்று கருதப்பட்டது.

மேட்டுமை திறனாய்வு அடிப்படையில். தேவரடியார் ஆடல், அல்லது "திருச்சதிர் ஆடல்" என்ற பெயர்கள் புறக்கணிக்கப்பட்டு "பரதநாட்டியம்" என்ற பெயர் 1930ஆம் ஆண்டிலே சுட்டப்பட்டது. அம்மட்டோடு நின்றுவிடாது, மேட்டுக் குடியினருக்குரிய ஆடை அணிகலன் களை அணிந்து ஆடும் கட்டாயமும் அறிமுகம் செய்யப்பட்டது. முற்றிலும் மேட்டுமை உளப்பாங்கினுக்கு உட்படுத்தப்பட்ட கலையாக அது உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டார் பாடல், இசைமற்றும் கலைகள் தொடர்பான முக்கியத்துவத்தை ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மகிழ்புனைவியம் (ROMANTICISM) வலியுறுத்தியது. மகிழ்புனைவிய இயக்கம் (1800-1850) முன்னைய அறிவெளிக்கால மேட்டுமை உளப்பாங்கினுக்கும் கைத்தொழிற் புரட்சியின் வாழ்நிலை அவலங்களுக்கும் எதிராக மேற் கிளம்பியது.

நாட்டார் கலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மகிழ்புனைவியச் சிந்தனைகள் ஆங்கிலக் கல்வி வாயிலாக தமிழ்ச் சூழலுக்கு வந்தது.

ஆங்கிலம் கற்ற எழுகுழாத்தினரே நாட்டார் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்தச் செயற்பாட்டிலும் மேட்டுமை உளப்பாங்கு சுவறிநின்றது. 'FOLK' என்ற ஆங்கிலச் சொல் மக்களையே குறித்துநின்றது. அதற்குத் தமிழ் வடிவம் கொடுத்தோர் 'பாமரர்' என்ற சொல்லை உருவாக்கினர். நாட்டார் இலக்கியம் "பாமரர் இலக்கியம்" எனப்பட்டது. FOLK என்பதற்கு தாழ்வான ஒரு விளக்கமே தமிழில் முதற் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னர் அதற்கு "நாட்டார்" என்ற வடிவம் கொடுக்கப்பட்டது. அதுவும் மேலோங்கித்தனமான விளக்கமாக அமைந்தது. அந்தச் சொல்லே நிலைபேறுகொண்டது. அந்தச் சொல்லோடு உடன்பாடு கொள்ளாதோர் 'மக்கள்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர்.

மேட்டுமை நோக்கில் மக்கள் இலக்கியத்தை அணுகும் முறையில் தகர்ப்பை ஏற்படுத்தியவர் பேராசிரியர் நா.வானமாமலை. அதுவரை காலமும் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத கிராமத்துத் தெய்வங்களையும் விளிம்பு நிலை யினரின் வீரத் தெய்வங்களையும் சமூகவியல் நோக்கில் அவர் ஆய்வுக்கு உட்படுத்தினார்.

பல்கலைக்கழகக் கல்வி என்பது, உயர் குடியினருக்குரிய ஏற்பாடாகவே வளர்ச்சியுற்று வந்துள்ளது. சாதாரண மக்களுக்கு பல்கலைக் கழகங்கள் எட்டாதவையாக இருந்தமையால் "தந்தக்கோபுரங்கள்" என அழைக்கும் மரபு ஆங்கிலப் பண்பாட்டில் இடம்பெற்றது. இன்றும் அதன் எச்சசொச்சங்கள் தொடர்ந்த வண்ண முள்ளது.

பல்கலைக்கழகங்கள் மேட்டுமை உளப் பாங்கை வளர்ப்பதில் தொடர்ந்து பங்களிப்பைச் செய்துவருகின்றன. அதன் பின்புலத்தல் உருவாக்கம் பெற்றதே சமூக இருப்பைத் தவறவிட்ட புலமைநிலை (ACADEMIC) த் திறனாய்வு.

பல்கலைக்கழகங்களின் கலைப்பீடங்களில் இடம்பெற்ற விளிம்புநிலை மாணவர் உள்நுழைவு, மேட்டுமை உளப்பாங்கினுக்குச் சவாலாக இருத்தல் ஒரு முக்கியவரலாற்று நிகழ்ச்சியாகும்.

அத்தகைய பின்புலத்திலேதான் நாட்டுக் கூத்துக்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே மேடையேற்றப்பட்டன. தொடர்ச்சியாக, தமிழ்த் தேசிய விசையில் பேராதனை, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பங்குகொண்டனர்.

அந்தநிகழ்ச்சி ஒருபுறம் நிகழ, கலைகளின் சமூக இருப்பையும் விசைகளையும் நோக்காத மேட்டுமை உளப்பாங்கும் திறனாய்வும் தொடர்ந்த வண்ணமுள்ளன. மேட்டுமைத் திறனாய்வு தூய அழகியல் நோக்குடன் தொடர்புடையது. குறித்த கலைபற்றிய ஆழ்ந்த புலமை உடையோரே அழகின் ஆழங்களையும், திறனாய்வையும் தரிசிக்க முடியும் என்பது அவர்களின் நோக்கு.

கலையாக்கங்களிலும் திறனாய்விலும் பங்கேற்றல் என்பது மக்கள் மயப்பட்ட ஒரு திறந்த செயற்பாடு. எதுவித நிபந்தனையுமின்றி யாரும் பங்குபற்றும் உரிமை உடையவர்கள் அவரவர் கண்ணோட்டத்தில் திறனாய்வை முன்வைக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. அதேவேளை அவர்களின் திறனாய்வு சுவைத்தலுடன் தொடர்புடையதாக இருத்தல் இயற்கையானது.

ஐக்கிய அமெரிக்காவின் ஓவியக்கலை வளர்ச்சிபற்றி அண்மையில் ஆராய்ந்தோர் முன்வைத்துள்ள ஒரு கருத்து கலைச்சமூக நோக்கில் முக்கியமானது. பணவசதி மிக்கோரின் கலையாக ஓவியம் பெயர்ச்சிகொண்டு வருவதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோன்ற ஒரு நிலைவரம் தமிழ்ச் சூழலிலே பரதநாட்டியக் கலைக்கும் ஏற்பட்டுவருகின்றது. பரதநாட்டிய அரங்கேற்றம் என்பது இலட்சக்கணக்கான செலவை உள்ளடக்கிய ஏற்பாடாக மாற்றப்பட்டுள்ளது. வறியோர் ஒதுங்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மேலும், சமூக உள்ளடக்கத்தைக் கருத்திற் கொள்ளாத தொல்பொருள் அரங்காகவே பரதநாட்டியம் இயக்கப்படுகின்றது.

செவ்வியல் ஆடலாகிய கதகளி கேரள நாட்டின் சமகாலப் பிரச்சினைகளை ஆடு பொருளாக்கிக் கலை உயிர்ப்பை ஏற்படுத்திய வண்ணம் மேற்கிளம்புவதற்கு அந்நாட்டின் முற்போக்குத் திறனாய்வு கைகொடுத்த வண்ணமுள்ளது.

○○○

# ஞானத்தின் கண்ணீர் அஞ்சலி

## செல்வன் இ. வாமணன்



எழுத்தாளர் இராஜேஸ்கண்ணனின் மகன் செல்வன் வாமணன் *17-02-2021* அன்று தனது பதினோராவது வயதில் - பிஞ்சுப் பருவத்திலேயே அமரராகிவிட்டார் என்ற செய்தி எம்மை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. இராஜேஸ்கண்ணன் ஞானம் சஞ்சிகையுடன் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பினைப் பேணிவருபவர் ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டிகளில் மூன்று தடவைகள் பரிசுபெற்றவர். ஞானம் சஞ்சிகையில் அவர் எழுதிய “தொலையும் பொக்கிஷங்கள்” என்ற கதை, *2007*இல் அறிமுகமான தரம் பத்திற்கான தமிழ் மொழிப்பாட ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி நூலிலும் இடம் பெற்றது அவருக்கு மட்டுமல்ல ஞானம் சஞ்சிகைக்கும் பெருமை தருவது. ஞானம் சஞ்சிகையில் இராஜேஸ்கண்ணன் பல கட்டுரைகள், கவிதைகள் நூல்விமர்சனங்களை எழுதியுள்ளார். ஞானம் ஆசிரியத் தலையங்கள் *101*அடங்கிய ‘பகிர்தலும் பரிதலும்’ என்ற ஞானம் ஆசிரியரின் தொகுப்பு நூலுக்கும் இராஜேஸ்கண்ணன் முன்னுரை வழங்கியிருக்கிறார். இவ்வாறாக ஞானம் இலக்கியக் குடும்பத்தில் இராஜேஸ்கண்ணனின் இருப்பு முக்கியமுடைதாக விளங்கி வந்திருக்கிறது.

மகனின் பிரிவால் தாங்கொணா சோகத்தில் ஆழ்ந்திருக்கும் இராஜேஸ்கண்ணனுக்கும் அவரது மனைவி சுனிதா மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அஞ்சலி செலுத்துவதோடு அந்தச் சிறுவனின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கிறோம்.

சிறுகதை




அவருக்குத் தெரியும் தான் இப்போதைக்கு இறந்துபோகப் போவதில்லை என்பது. எழுபது வயதானாலும் உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும் இன்னும் திடகாத்திரமாக இருப்பதாகத்தான் நம்பிக்கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்த நெஞ்சுவலி அவ்வப்போது வந்து மிரட்டுகிறது. அது வருவதும் போவதும் அவருக்குப் பழக்கப்பட்டுத்தானிருந்தது. அதை அவர் ஒருபோதும் பெரிதுபடுத்துவதில்லை. ஆனால் இது அந்தமாதிரி வந்துபோகும் வலியல்ல! நடுநெஞ்சைப் பிடித்து இறுக்குகிறது. இடப்பக்கமாக தோள்மூட்டு, கை என உளைவெடுக்கிறது. கையை உதறிஉதறிப் பார்த்தார். மறுகையால் நெஞ்சை அழுத்தித் தடவினார். வலிவிட்டுப் போவதாகத் தெரியவில்லை.

பணியிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டாலும் இன்னும் அவர் ஓய்ந்துபோகவில்லை. வீட்டில் சும்மா இருக்கமாட்டார்.நாலு வாழைமரங்கள் மட்டும் வைக்கக்கூடியநிலத்தில் நாற்பது விதமான செடிகளை நாட்டி அவற்றிற்கு நாள்முழுதும் பரிகாரம் செய்துகொண்டிருப்பார். மனைவி சத்தம் போடுவதையும் காதிற் கொள்ளமாட்டார்.

'சும்மா அதையிதை வெட்டிக் கொண்டிருக்காமல்... விட்டிட்டுவாங்கோ..!'

அவர் வரமாட்டார்.

இப்போது 'நெஞ்சுநோகிறது...!' எனச் சொன்னாலும் மனைவியிடம் ஏச்சுப் பேச்சைத்தான் கேட்கவேண்டியிருக்கும்! 'சொல்லச் சொல்லக் கேட்காமல் மாய்ஞ்சுகொண்டிருந்தீங்கள்...கேட்டாற்தானே..!' என முதல் அடி விழும். மனைவி சொல்வதுபோல அந்தமாய்ச்சல்தான் நெஞ்சுவலிக்குக் காரணமோ?

மனைவியைச் சலிப்பேற்படுத்துமளவிற்கு அவருக்கு நெஞ்சுநோ வருவதும் அவள் அது இது என ஏதாவது தைலங்களை நெஞ்சிற் போட்டு உரஞ்சுவதுமாகத்தான் பல காலங்கள் போயிருக்கின்றன.

'டொக்டரிட்டைக் காட்டலாம் வாங்கோ..!' என மனைவியின் ஆதங்கத்தைப் பலமுறைகேட்டுக் கேட்டு ஒருமுறை அவர் வைத்தியசாலைக்குப் போவதற்கு இணங்கியிருந்தார். பதினைந்தோ இருபது வருடங்களுக்கு முன்னதாயிருக்கலாம். ஒருதனியார் வைத்தியசாலைக்கு நெஞ்சு பற்றிய சோதனைமுன்ஆய்வுக்காகப் போயிருந்தார்கள். இந்தியலேடி டொக்ரர்... அன்ஜியோகிராம் சோதனை செய்தார்.

'இரத்தநாளமொன்று பத்துவீதமளவில் அடைபட்டிருக்கிறது... பயமில்லை! குளிசைகள் எடுத்தால் சரியாகிவிடும்...தேகப்பியாசம் செய்யவேண்டும், உணவுவகைகள் எடுப்பதில் ஒரு ஒழுங்கைப் பின்பற்றவேண்டும்...' என்றெல்லாம் ஒரு லிஸ்ட் போட்டுத் கொடுத்தார்கள்.

கொஞ்ச நாட்கள் அவற்றை ஓரளவு கடைப்பிடித்தார். பிறகு யார் அதைக் கணக்கெடுத்தது? நாட்கள் ஆகஆக, அந்த அளவுக்கு சாப்பாட்டிலெல்லாம் நுணுக்கம் பார்க்க முடியுமா என்று அவருக்குத் தோன்றியது. குளிசை



**சுதாராஜ்**

களைத் தொடர்ந்து எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்டதொகை காசு தேவைப்பட்டது. பல தடவைகளில் அது இயலுமானதாக இருக்க வில்லை. 'சரி போகட்டும்...! நன்றாகத்தானே இருக்கிறேன்...!' என அதையெல்லாம் கை விட்டார்.

இரண்டொரு வருடங்களில் மீண்டும் பிரச்சனை தொடங்கியது. நடக்கும்போது நெஞ்சுவலித்தது. சற்று ஏற்றமான பாதைகளில் நடக்கவே முடியாமல் வருத்தியது. மீண்டும் அதே டொக்டரிடம் போக வேண்டியதாயிற்று! டொக்டரிடமிருந்து நல்ல டோஸ் கிடைத்தது. குளிசைகளைத் தொடர்ந்து எடுக்காது இடைநிறுத்தியது தவறு என்று கூறினார். தன்னிச்சையாகமுடிவெடுக்காதுஒரு டொக்டரிடம் ஆலோசனை பெற்றிருக்கலாம் என்பது அவரது அபிப்பிராயம்.இதய சம்பந்தமமான எக்கோ ரெஸ்ட், ஈசீஜீ போன்ற சில உடனடி சோதனைகள் செய்துபார்த்தார்.

"அன்ஜியோகிராம் சோதனை செய்ய வேண்டும்... இதய அடைப்பு ஏற்பட்டிருக்கக் கூடும்... அன்ஜியோ பிளாஸ்ற் அல்லது பைபாஸ் சத்திரசிகிச்சை செய்யவேண்டியும் வரலாம்..." என டொக்டர் விளக்கமளித்தார். டொக்டர் கூறியது அவருக்குப் புரிந்தாலும், அவர் விளக்கமளிக்கிறாரா அல்லது பயமுறுத்துகிறாரா என்றுகூடத் தோன்றியது! ஏதோ வெட்டுக் கொத்து நடக்கப்போகிறது என்ற பயமும் நெஞ்சில் ஏற்பட்டது. 'சிகிச்சைச் செலவுக்கான பணத்தை ஒழுங்குசெய்துகொண்டு இரண்டு கிழமையின் பின்னர் வாருங்கள்!' என கூறி அனுப்பியிருந்தார்கள். அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்ற தகவலையும் கூறினார்கள். 'அதற்கு இவ்வளவு பணமா!' என அப்போதே ஏக்கமாயிருந்தது.

இப்போதும் அந்தப் பயம்தான்.

அப்போது அண்ணை தம்பி என சிலரிடம் பணம் ஒழுங்குசெய்துகொண்டு சிகிச்சைக்காகப் போனார். 'கடவுளே... கடவுளே.!' என நாள்முழுதும் பிரார்த்தித்தபடியே வார்ட்டில் தங்கியிருந்தார்.மனம் பலவீனப்படும் போதுதான் கடவுளின் நினைப்பும் வருகிறது. அடுத்தநாள் சத்திரசிகிச்சை வார்ட்டிற்கு ஸ்ரெச்சரில் அவரைக் கிடத்தி உருட்டிக்கொண்டு போன போது மனைவி கலங்கும் கண்களுடன் கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டு நின்றாள். அது இன்னும் மனவேதனையை ஏற்படுத்தியது. 'சத்திரசிகிச்சைசெய்ய நேரிட்டால்... தனக்கு ஏதாவது ஏறுக்குமாறாக நடந்திட்டால்... 'எனமனம் குழப்பியது. தானில்லாத நிலையில் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு மனைவி என்ன கஷ்டப்படுவாளோ...! 'கடவுளே அந்த நிலைமை வந்திடக்கூடாது!'

சிகிச்சையைத் தொடங்குமுன் "பணத்தை ஒழுங்கு செய்துவிட்டீர்களா..?"என டொக்டர் முதற் கேள்விகேட்டார். அவர் தலைய சைத்து பதிலளித்தார். இதே கேள்வியை ஏற்கனவே மனைவியிடமும் கேட்டிருந்ததை அவர் டொக்டரிடம் நினைவு படுத்தினார். அப்படிக் கூறியபோது அவர் சினப்பட்டிருக்கக்கூடும்... "சரி...ரிலாக்ஸ்சாக இருங்கள்...!" என சற்று மனத்துணுக்குடன் டொக்டர் கூறினார். அன்ஜி யோகிராம் சோதனையை தாதிமாரின் உதவியுடன் ஆரம்பித்தார். முன்னே அமைக்கப் பட்டிருந்த டிஜிற்றல் ஸ்கிரீனில் செயல்ப்படு முறைகளைப் பார்த்தவாறு அவர் அமைதியாகக் கிடந்தார்.

சற்றுநேரம் கடந்து சோதனை முடிவுக்கு வந்தது. டொக்டர் ஒரு பெருமூச்சுடன், "Thanks God...!" என்றார். "It's getting cleared! God helped you...! You saved a lot of money...!"

இதய அடைப்பு பெரிதாக இல்லை என்பது ஆறுதலைக் கொடுத்தது. கடவுளின் கிருபையை எண்ணி வியந்துபோனார். டொக்டரின் சிகிச்சையை நம்பித்தான் அவர் வைத்தியசாலைக்கு வந்தார். அந்த டொக்டரே 'கடவுள்தான் உங்களுக்கு கருணை செய்திருக்கிறார்...' என்று கூறுகிறார்! அதைவிடவேறுஎன்ன தேவை? இனி எல்லாம் சரியாகிவிடும் என்றுதான் தோன்றியது. அவ்வாறு பத்துவருடங்களுக்கு மேலாக நன்றாகத்தானிருந்தார்.

இப்போது அந்த நினைவுகள் நெஞ்சில் வந்தன.

இப்போது நிலைமை மோசமாகி வைத்திய சாலைக்குப் போகநேரிட்டால், வைத்திய செலவுகளுக்குப் பெரியதொகை பணம் தேவைப்படுமே! அதற்கு என்ன செய்வது? ஏற்கனவே சுவாரிஸ் அபயவர்த்தனவிடம் பட்டகடனுக்குப் பதில் சொல்லமுடியாமலுள்ளது. முன்னர் ஒரு அவசர தேவைக்காகக் கேட்டபோது,சுவாரிஸ் இன்னொருவரிடம் பணம் பெற்றுத் தந்திருந்தான். ஐந்துவீத வட்டி! இரண்டொரு வருடங்கள் மாதாமாதம்

வட்டியைக் கட்டிக்கொண்டிருந்தார். பிறகு, வட்டியும் கட்டமுடியாமல் இன்னும் இரண்டொரு வருடங்கள் இழுபட்டது. வட்டி, முதலுடன் ஒன்றிணைந்து இன்னும் பெரியதொகையாகக் கூடிக்கொண்டிருந்தது. சுவாரிஸ் அவ்வப்போது கோல் எடுத்துக் கேட்பான். காசுதந்தவர் தன்னை நெருக்கி கரைச்சல் படுத்துகிறார் என முறைப்படுவான். தனது கார்புத்தகத்தை ஈடு வைத்து பணம் தந்தவனுக்கு கொஞ்சக் காசுகொடுத்ததாகவும் ஒருமுறை கூறினான்.

'மொனவாஹறி கறலா அற மினிஹாகே சல்லி டிக்கக் தென்ட பலன்ட மஹத்தயா..! (ஏதாவது ஒழுங்கு செய்து அவனது காசைக் கொடுப்பதற்கு வழி பாருங்க மஹத்தயா..!)' என வினயமாகவும் கேட்டுக்கொள்வான். ஏதாவது ஒழுங்கு என்றால் என்ன ஒழுங்கு செய்வது?

"எப்படியாவது சீக்கிரம் தந்துடுவேன்… கொஞ்சம் ரைம் தாங்க சுவாரிஸ்..!" என்றுமட்டும் எப்போதும் கேட்டுக்கொள்வார்.

ஒரே நிறுவனத்தில் அவருக்கு அடுத்த நிலையில் பலகாலம் பணியாற்றியவன் சுவாரிஸ். வேலையிலிருந்து அவர் விலகியபிறகு அவரது கஷ்ட நிலையையும் அறிந்தவன்தான். எனினும் தனக்கு உதவிசெய்யப் போய் அவன் இன்னொருவனிடம் தொல்லைப்படுவது அவருக்குக் கவலையளித்தது. இன்று காலையும் கோல் எடுத்திருந்தான். அதே கேள்வியும் அதே பதிலும்தான். பணத்தை மீளக் கொடுக்கும் வழி தெரியவில்லை. எங்குபோய் யாரிடம் கை நீட்டுவது? எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் நாள்முழுதும் அந்த யோசனை மனதில் ஓடிக்கொண்டிருந்தது. ஒருவேளை அதுதான் நெஞ்சுவலிக்குக் காரணமோ?

நெஞ்சுவலிக்கிறது எனக் கூறிவீட்டில் கலவரமேற்படுத்தாமல் வெளியே வந்து உலாவிக்கொண்டிருந்தார். சற்றுநேரம் படுக்கையில் போய் சாய்ந்துகொள்ளலாமா என அயர்ச்சியாயிருந்தது.

'இந்த நேரத்தில் என்னபடுக்கை..?' என்று மனைவி குழப்பமடைவாள். 'ஏதாவது செய்யுதா… நெஞ்சுநோகுதா..?' எனக் குடைந்தெடுப்பாள். சற்றுநேரமாக அங்குமிங்கும் மெல்லநடந்தார்.

மெல்லமெல்லப் பொழுதுசாய்ந்து இருள் வந்து சூழ்ந்து கொண்டிருந்தது.

அது இன்னும் மனப் பயத்தை அதிகரித்தது. நெஞ்சுப் படபடப்பா அல்லது மனப் பதற்றமா என்று புரியமுடியாத நிலைமைக்குட்பட்டுக் கொண்டிருந்தார். இன்றைய இரவு என்ன செய்ய நினைத்திருக்கிறதோ..?

நடப்பதற்கும் இயலாமல் வந்து சாய்கதிரையில் அமர்ந்தார். பேரக் குழந்தைகள் இருவரும் முன்னே ஹோலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதில் மனதைச் செலுத்தி வலியை மறக்கலாமா என முயன்றார். முடியவில்லை.கதிரையில் அமர்ந்தவாறே அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக அசைந்து பார்த்தார். வலி இன்னுமின்னும் கூடிக்கொண்டிருந்தது. எழுந்துநின்று பார்த்தார். ஹோலுக்குள்ளேயே மெல்லநடந்து பார்த்தார். முதுகுப்பக்கம் உளைவெடுத்தது. சுவரில் முதுகை அழுத்திப் பார்த்தார். அறையினுட் சென்று படுக்கையில் குப்புறப்படுத்து தலையணையை நெஞ்சில் அழுத்தியவாறு புரண்டெழுந்தார். எந்த வித்தைகளும் பலனளிப்பதாயில்லை.

அப்பாவின் வித்தியாச நடவடிக்கைகளை முதலில் மகள்தான் அவதானித்தாள்.

"அப்பா…என்னசெய்யிது..?"

அவர் ஏதும் பேசாமல் அல்லது பேசமுடியாமல் அல்லது பேசவிரும்பாதிருந்தார்.

"சொல்லுங்கோ…என்னசெய்யிது?"

"ஒன்றுமில்லையம்மா… நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்கோ..!"

"அம்ம்..மா..!" மகள் பெரிய குரலெடுத்து அழைத்தாள்.

அம்மா பக்கத்தில் குசினியிற்தான் இரவுச் சாப்பாடு செய்துகொண்டிருந்தாள்.

"இங்கதானே நிக்கிறன்…ஏன் இந்தக் கத்துகத்துறீங்கள்..?"

"அப்பாவுக்கு என்னவோ செய்யுது..!"

"என்ன நெஞ்சு நோகுதா..?" என்ற கேள்வியுடன் அம்மா பக்கத்தில் வந்தாள்.

அவர் பதிலேதும் பேசவில்லை. இல்லையென்பதா…உள்ள தென்பதா..? நெஞ்சுவலி அணையுடைக்கும் உச்சத்துக்கு ஏறிக்கொண்டிருந்தது. மகன், மருமகன் எல்லோரும் பதற்றத்துடன் அப்பாவைச் சூழ்ந்துகொண்டார்கள்.

"அப்பா வாங்கோ ஹொஸ்பிற்டலுக்குப் போவம்..!"

"தேவையில்ல சரியாகியிடும்… பார்ப்பம்..!" என அவர் மறுத்துக் கொண்டிருந்தார்.

கொரோனா நோய்த் தொற்று பரவல்கள் காரணமாக நாட்டில் தனிமைப் படுத்தல்கள் ஊரடங்கு என தொல்லைகள் ஒருபக்கம். ஊரடங்கு நேரத்தில் வெளியே போவது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாயிராது என்ற காரணமற்ற பயம் நெஞ்சில். வீதியில் இராணுவத்தினரையும் கண்காணிப்புக்குப் போடப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. யுத்தகாலங்களில் பலவருடங்கள் யாழ்ப்பாணத்திலிருந்தவர்... இராணுவ நடவடிக்கைகளின்போது பிள்ளை களையும் தூக்கிக்கொண்டு மனைவியுடன் அங்குமிங்குமென போக்கிடமில்லாது மர நிழல்களிலும் கோயில் தாவாரங்களிலும் அலைந்து திரிந்தவர். போய் ஒதுங்கும் இடங்களிலும் ஷெல் அடிகள் தாறுமாறாக வந்து விழுந்து கலக்குக் கலக்கியிருக்கிறது. இராணுவம் என்றதுமே ஒருவிதமாகக் கிடிகலங்குகிறது. பத்துமணியும் கடந்துவிட்ட இந்த நேரத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறிய காரணத்துக்காக பிள்ளைகள் ஏதாவது வில்லங்கத்தில் மாட்டிக்கொள்ளவும் நேரிடலாம்.

அதையும் விட கொரோனா நோய்த்தொற்று வீரியமாக பரவிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வைத்தியசாலையொன்றுக்குப் போவது எவ்வளவு தூரம் பிள்ளைகளுக்கோ தனக்கோ பாதுகாப்பானது என்ற குழப்பமும் மனதிலிருந்தது. வயதானவர்களைத்தான் தொற்று இலகுவில் பற்றிக்கொள்கிறதாம். போட்டும் தள்ளுகிறதாம்! நோயாளர்கள் யாரெவர் என்னநோயுடன் வைத்தியசாலைக்கு வந்துபோகிறார்கள் என்பது யாருக்குத் தெரியும்? வலிந்துபோய் வில்லங்கத்தில் மாட்டிக்கொள்வதா? வைத்தியசாலைக்குப் போகாது ஒருவாறு சமாளித்துவிடலாம் என்றுதான் நினைத்தார். ஆனால் முடியவில்லை.

கட்டிலைவிட்டு சீமெந்துத் தரையில் குப்புறப் படுத்து நெஞ்சை அழுத்தினார். சீமெந்துக் குளிர்வலியைத் தாக்காட்டுமா என்று பார்த்தார். அதுவும் முடியாததாக எழுந்து உட்கார்ந்தார். வியர்த்துக் கொட்டியது. மனைவி வியர்வையைத் துடைத்துத் துடைத்துவிட்டாள். வியர்வை பெருகிக்கொண்டிருந்தது.

“கண்களும் அந்தமாதிரிச் சிவந்து போயிருக்கு... வாங்க அப்பா போகலாம்!” என மகன் வற்புறுத்தினான். அவர் எழுந்து கண்ணாடியிற் பார்த்தார். கண்கள் இரத்தச் சிவப்பாகியிருந்ததைப் பார்த்து அவரும் பயந்துபோய்விட்டார். ‘வைத்தியசாலைக்குப் போகத்தான் வேண்டும்!’என அவருக்கும் தோன்றியது.

மருமகன் விரைந்துசென்று தனது காரை ஸ்ரார்ட் எடுத்தார். மகனும் மகளும் கைத் தாங்கலாகக் கூட்டிச்சென்று அவரைக் காரில் ஏற்றினார்கள். மனைவியை பேரர்களுடன் வீட்டில் நிற்குமாறு பிள்ளைகள் கூறினார்கள். அவர் மனைவியைத் திரும்பிப் பார்த்தார்... கண்கலக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டு நின்ற பழைய நினைவை அவளது ஏக்கப் பார்வைகொண்டுவந்தது. போவதற்குமுன் பேரக் பிள்ளைகளை அறையினுட் சென்று பார்த்துவிட்டுப் போனார். பார்க்கவேண்டும் போலிருந்தது... ‘திரும்ப வருவேனோ என்னவோ!’ என்றமனப்பயம்.

குழந்தைகள் உறங்கிப் போயிருந்தார்கள். அதுகூட நல்லதுதான் என நினைத்துக்கொண்டார். அல்லது அவர்களைத் தாக்காட்ட முடியாமற் போயிருக்கும். நாலுவயதும் ஆறு வயதுமான பையன்கள். சிலவேளைகளில் அவர் விளையாட்டாக அவர்களுக்குச் சொல்வதுண்டு...‘நான் செத்துப்போனால் நீங்க ரெண்டு பேரும்தான் என்னைத் தூக்கி சிமெற்றிக்குக் கொண்டுபோகவேணும்!’

‘அம்மப்பா...நீங்க செத்திடுவீங்களா?’

‘எல்லாரும் ஒருநாளைக்குச் சாகத்தானே வேணும்?’

‘நீங்க சாகவேணாம் அம்மப்பா...நீங்க எங்களோட இருங்க!’

‘இல்லடா... இந்த உலகம் எல்லாரையும் தாங்குமா? வயசு போனவங்க நாங்கள் செத்தாற்தானே பிள்ளைகள் நீங்க வளர்ரதுக்கு இந்த உலகத்தில இடமிருக்கும்!’

பிள்ளைகள் விடுத்து விடுத்துக் கேட்பார்கள். இறப்பதிலுள்ள தவிர்க்கமுடியாத இயல்புத் தன்மையைப் புரியவைத்து, அப்படியான இழப்புகளைத் தாங்கக்கூடிய தயார் மனநிலையை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்காக என விளக்கங்களைக் கூறுவார்.

எனினும் அவர்களுக்கு அவர் செத்துப்போவது சம்மதமில்லை. ‘இல்ல அம்மப்பா... நீங்க நெடுக எங்களோட இருக்கவேணும்!’ அவர் அதை நினைத்து வேதனையுடனேயே காரில் ஏறினார்... ‘பிள்ளைகள் காலையில் எழுந்து தேடுவார் களோ?’

"அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போங்கோ... பிறைவேற் ஹொஸ்பிட்டலுக்குப் போனால் நிறையச் செலவுவரும்...!" என பிள்ளைகளிடம் முனகலாகக் கூறினார். காரின் இருக்கையிலும் அமர்ந்திருக்க முடியாது துவண்டுகொண்டிருந்தாலும், 'வைத்திய செலவுகளுக்கு என்ன செய்வது...?' என்ற யோசனையும் ஒருபக்கம் மனதை அலைத்துக் கொண்டிருந்தது.

"சரி அப்பா...கவ்மேன்ட் ஹொஸ்பிடலுக்குத்தான் போறம்... பேசாமலிருங்க!" மகள் அவரை அமைதிப்படுத்தினாள்.

சோதனைச் சாவடியில் மறித்து நிறுத்தினார்கள். காரினுள் ரோர்ச்லைட் அடித்துப் பார்த்து விசாரித்தார்கள். அவசரத்தில் பிள்ளைகள் மாஸ்க் மாட்டியிருக்கவில்லை. அது அவர்களுக்குப் பிரச்சனையாயிருந்தது. பிரச்சனைதான்! மகன் அவர்களுக்கு நிலைமையைப் புரியவைப்பதற்குத் தடுமாறிக் கொண்டிருந்தான். மருமகன் காரினுள் ஹூட்லைட்டை ஒளிர்வித்தார். வாகனத்துக்குரிய பத்திரங்கள் லைசென்ஸ் ஆகியவற்றைக் கேட்டார்கள். 'இன்னும் சுணக்கமாகிறதே' என அவர் சினமடைந்தார். தன் நெஞ்சை வருடிக்கொண்டே, "செஸ்ற் பெயினிங்... ஸ்பிறித்தாலட்ட யனவா!" என அவர்களிடம் கூறினார். அவர்கள் உடனே விலகி வழி விட்டார்கள்.

"Sorry Sir... அடுத்த சோதனைச் சாவடிக்கு நாங்கள் தகவல் தெரிவிக்கிறோம்... நிறுத்தாமற் போகலாம்!"

வைத்தியசாலையின் முன்னே வாகனத்தை நிறுத்தியதும் வீல்செயர் பக்கத்தில் வந்தது. மகள் ஏற்கனவே அவர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கவேண்டும். தனியார் வைத்தியசாலைதான். 'இங்க க்விக்காக பார்பாங்க அப்பா... காசு அது இதென்று யோசிக்காமல் வாங்க!' என மகள் அவரைச் சமாதானப் படுத்துவதுபோல கூறினாள்.

அவர் அதுபற்றி ஏதும் பேசவில்லை. உண்மையைச் சொல்வதானால் இப்போது வைத்தியச் செலவு, பணப் பிரச்சனை... என எதுவும் பேசும் மனநிலையில் அவர் இல்லை. நெஞ்சைப் பிளந்து வெடிக்கும்போல வலி வியாபித்துக்கொண்டிருந்தது.

அவரை வீல்செயரில் அமர்த்த முயற்சித்தார்கள். எனினும் "இல்லநான் நடந்து வருவன்!"என நாத் தடுமாறியபடி கூறினார். அவர்கள் அதைக் கேட்காதவர்கள்போல விரைந்து செயற்பட்டார்கள். பக்குவமாகக் கதிரையில் அமர்த்தி, முதற் சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டுசென்று

## அட்சய பாத்திரம்

சுக்குப்புக்கு... சுக்குப்புக்கு வண்டி...அது போனவருச வண்டி!
போகுது மெதுவாய் நொண்டி...அது போகுது மெதுவாய் நொண்டி!!
உலகம் சுற்றிய என் மகனே!வா வா மீண்டும் வா வா!
நீ தேடிய அந்தப் பொம்மை கிடைத்துவிட்டதா?
தேவலோகத்துப் பொருட்கள் கனவில் மட்டுமே விற்பனைக்குண்டு.
நீகேட்டதெல்லாம் தந்துதந்து நீகேட்காததும் தந்துதந்து
உன்னை வளர்க்காது உன் ஆசைகளை வளர்த்துவிட்டேனா?

மகனே நீ எதற்காக அலைகிறாய்?
காதலும் வாழ்க்கையும் கடைகளில் இல்லை!
இலவச இணைப்பாக எதுவும் கிடையாது!
அன்பைபிச்சை கேட்டு அலைவது தப்பப்பா!!
எறிந்துவிடு உன் பிச்சா பாத்திரத்தை!!!
தொடு மகனே தொடு... உன் இதயக் கமலத்தைத் தொடு!
ஆனந்தம் சுரக்கும் அமுதசுரபி அது!
அள்ளஅள்ளக் குறையாத அட்சய பாத்திரம் அது!.

அன்பைஅடைத்துவைத்து
அதனை வெம்ப வைத்துவிடாதே!
நீயும் நாறிப்போவாய் வாவெளியேவா!
பூக்களின் புன்னகை குழந்தையின் மழலை...
குயில்களின் தாலாட்டுதலை தடவும் தென்றல்
இவைஅத்தனையும் உன்தன் உடமைகள் மகனே!
நடமகனே நட!உன் பாதம் பட்டுப் பூமிபூக்கட்டும்!!.

**– திருமதி கலாநிதி ஜீவகுமாரன்**

சிகிச்சைக் கட்டிலுக்கு அவரைத் தூக்கி மாற்றினார்கள். இரவுநேர வைத்தியரும் தாதி மார்களும் பரபரப்புடன் அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக ஓடி தேவையான முதற்சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினார்கள். வாயைத் திறக்கச் சொல்லி மருந்தை ஸ்பிறே செய்தார்கள். ஒருகையில் இன்ஜெக்சன் மூலம் மருந்து ஏற்றினார்கள். இன்னொரு கையிலும் ஊசியேற்றி சோதனைக்காக இரத்தம் எடுத்தது போலிருந்தது. சில குளிசைவகைகளை அவரது வாயிலிட்டு தண்ணீர் பருக்கி உட் செலுத்தினார்கள். எல்லாம் ஒரு மயக்க நிலை போல தன்னுணர்வற்று பிறரின் கட்டுப்பாட்டுக்குள் தனது உடலியக்கங்கள் வந்து விட்டதாக உணர்ந்தார். எதையாவது செய்து முடிக்கட்டும் என்ற மனநிலையுடன், "வலிக்குது...வலிக்குது!" என்று மட்டும் அவர்களுக்கு சைகை செய்துகொண்டிருந்தார்.

திரும்பத் திரும்ப வாய்க்குள் மருந்தை ஸ்பிறேசெய்தார்கள். சுவாசிப்பது தானாகவே தடைப்பட, தன்னியல்பாகவே மூச்சு ஆள உள்ளிளுக்கப்பட்டு அவரது நெஞ்சு மூசி மூசி உயர்ந்துபதிந்தது. இதயம் அடிப்பது நெஞ்சில் மட்டுமின்றி கன்னங்கள் கை கால்கள் என உடலெங்கும் திடும் திடும் என அடிப்பது போலிருந்தது. தாதிமார்கள் விரைந்து ஒட்சிஜன் பொருத்தியை சுவாசத்திற்கு கொடுத்தார்கள். மூச்சு நிதானத்துக்கு வந்தது. "நெஞ்சுவலி இப்போது எப்படி?" என்று கேட்டார்கள். "பரவா யில்லை...குறைவடைகிறது!"என சைகை யிலேயே கூறினார். அதனால் பரபரத்துக் கொண்டிருந்த அவர்களும் நிதானமடைந்ததை அவதானித்தார். அவர்கள் அவரை ஸ்டெச்சரில் படுக்கவைத்து உருட்டிக்கொண்டுபோக, பிள்ளைகளும் கூட வந்தார்கள். தீவிர சிகிச்சைப்பிரிவு நுழைவில், பிள்ளைகளை வெளியே நிற்கச் சொல்லி உள்ளே கொண்டு போனார்கள்.

அங்கு ஏற்கனவே ரெடியாகியிருந்த சிகிச்சைக் கட்டிலில் அவரைத் தூக்கிக் கிடத்தினார்கள். தலைமாட்டுப் பக்கமாக வைக்கப்பட்டிருந்த இலத்திரன் கருவியிலிருந்த வயர் போன்ற சமாச்சாரங்களை நெஞ்சிலும் கைகளிலும் பொருத்தினார்கள். அதுகீ... கீ..! எனசத்தம் போட ஆரம்பித்தது. புறங் கையில் ஊசித்துழையிடப்பட்டு, கையுயரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த மருந்துப் போத்தலிலிருந்து சொட்டுச் சொட்டாக மருந்து உட் செலுத்தப்பட்டது.

அவருக்கு அந்த நேரத்தில் சினிமாப் படங்களில் பார்த்த காட்சிகள் நினைவில் வந்தன! பிள்ளைகள் வெளியே காத்து நிற்கக்கூடும். ஒரு டொக்ரரோ தாதியோ வெளியே வரும்வரை பதற்றத்துடன் பார்த்து நிற்பார்கள். அவர்களில் யாராவது வந்து, 'அப்பாவுக்கு ஆபத்து ஒன்றுமில்லை... நல்லாயி ருக்கிறார்!'என்றோ அல்லது 'இப்போது ஒன்றும் சொல்லமுடியாது... தகுந்த சிகிச்சைக்குட்படுத்துகிறோம்... சரியாகியிடும் பார்க்கலாம்!' என்றோ கூறக்கூடும். பிள்ளைகள் அதை எப்படித் தாங்கிக்கொள்வார்களோ என்று கவலையாயிருந்தது. அதுபோன்ற நினைவுகளுடன் அவருக்கு அயர்ச்சியில் கண்கள் சொருகியது. உறக்கத்துக்கு குளிசைகள் ஏதாவது தந்திருப்பார்கள் போலிருக்கிறது என நினைத்தார். அவ்வளவுதான்... தூங்கிப் போனார்.

தாதியொருவர் இடைதரம் வந்து, சோதனைக்காக என இரத்தம் எடுத்தார். சில குளிசைகளைப் பருக்கினார். அவ் வேளைகளில் கண்கள் விழிப்பதும் அந்தக் கணமே உறங்கிப் போவதுமாக பொழுது நகர்ந்தது. உறக்கம்... உறக்கம் என உடலும் மனதும் அசந்து தூக்கத்திலாழ்ந்து கொண்டிருந்தது. எனினும் இலத்திரன் கருவி 'கீ...கீ...'என விசிலடித்து அடிக்கடி துயிலெழுப்பிக் கொண்டிருந்தது.

விடியப்புற நேரமாக சற்று தூக்கக் கலக்கம் கலைந்ததும் கண்களை உயர்த்தி இலத்திரன் திரையைப் பார்த்தார். விசிற் சத்தத்துடன் மினுக் மினுக் என சிவப்பில் ஒளிர்விடும் அறிவுறுத்தல்! இதய அடிப்பையும் இரத்த அழுத்த ஏற்ற இறக்கங்களையும் பதிவுசெய்யும் கருவியாயிருக்கலாம் என்று தான் தனது அறிவுக்குகந்தவரையில் ஊகித் தருந்தார். அல்லது இது வேறு ஏதாவதா யிருக்குமா? யாரிடம் கேட்பது? கேட்டாலும் விளக்கமளிப்பார்களா? ஏதாவது வில்லங்க மாயிருக்குமோ? இரத்த அழுத்தமோ இதயத் துடிப்போ குழப்பமடைகிறதா? ஒருவேளை அப்படியே இதயத்துடிப்பு நின்றுபோய்விடக் கூடுமோ? மனைவியோ பிள்ளைகளோ பக்கத்திலில்லாதபோது மூச்சு நின்று உயிர் போய்ச் சேர்ந்துவிடுமோ!

தாதிமார் அங்கு இங்கு என ஓடியபடி ஒவ்வொரு நோயாளிகளையும் பராமரித்துக்

கொண்டுதானிருக்கிறார்கள். சில நோயாளிகள் பெரியகுரலெடுத்துக் கத்துகிறார்கள்! தாதிமார்கள் பக்கத்தில் போனதும் அவர்களை தூசணத்திலும் ஏசுகிறார்கள் .'பாவம், தாதிமார்கள் அதையெல்லாம் பொருட் படுத்தாமல் கருணையுடன் பணிவிடை செய்து கொண்டிருக்கிறார்கள்.' எனமனதில் இரக்கப் பட்டார். ஒருவேளை அந்த நோயாளிகளின் நிலைமை தன்னைவிட மோசமாயிருக்குமோ? எல்லாம் ஓர் அனுமானம்தான். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் என்ன பிரச்சனை என்று பார்க்கவும் முடியவில்லை. திரையிட்டு மறைப்புசெய்து அவரவராக நோயாளிகளைத் தனிமைப்படுத்தியிருக்கிறார்கள்.

அடுத்த தடவை தாதியொருவர் பக்கத்தில் வந்தபோது கேட்டார்…"மிஸ்… இது என்ன..? Why there's a red blinging indication… is that mean anything wrong in my heart…?இதயத்தில் ஏதாவது பிரச்சனையா..?"

"எஹே மகிசிதெயக் நே! You are alright… பயவென்ன எப்பா…! (அப்படி ஏதுமில்லை பயப்படவேணாம்…!)"

விடியும் வேளையில் தாதியொருவர் வந்து அவரைத் துயிலெழுப்பினார். "டொக் டர் வரப்போகிறார்… எழுந்திருங்கள்!" கைச் சுறுக்காக அவரது போர்வையை விலக்கி ஈரத்துணியினால் அவரது முகம், கை கால்கள் என உடலனைத்தையும் சுத்தம் செய்தார்.

அவருக்கு இப்போது நெஞ்சுவலி குணமாகிவிட்டது போலிருந்தது. வழக்கமாக வந்துபோகும் நெஞ்சுவலிதான் சற்று அதிகமாகி பயமுறுத்திவிட்டது. அப்படியானால் காலையில் வீட்டுக்குத் திரும்பப் போய்விடலாமோ என்று தோன்றியது. பெரியசெலவுமாகாது!

தாதியிடமே அதுபற்றிக் கேட்டார்… "மிஸ்! தென் மட்ட ஹொந்தய்…! சுட்டக்வத் றிதென்ன நே…! (இப்போ எனக்கு நல்லம்…! கொஞ்சம்கூட வலி இல்ல…!) காலையில் வீட்டுக்குப் போய்விடலாமா?"

தாதி ஒருபுன்முறுவல் பூத்தார்…" அய் மெச்சற ஹதிசயவென்னே? டொக்டர் நோனா அவிலா பலலாகியய்! (ஏன் இவ்வளவு அவசரப்படுறீங்க? டொக்டர் அம்மா வந்து பார்த்துச் சொல்லுவாங்க!)"அதைக் கேட்டு அவர் தளர்ந்துபோனார்.

அதிகாலையிலேயே மனைவி மகனுடன் வந்திருந்தார். மனைவியை மட்டும் அவரைப் பார்க்க அனுமதித்திருந்தார்கள். இதய நிபுணத்துவ டொக்ரர் அம்மாவும் வந்திருந் தார். இரவிரவாக எடுத்திருந்த இரத்த சோத னைத் தரவுகள் மற்றும் அவதானிப்புக் குறிப்புகளையெல்லாம் பார்த்தார். இதய இயக் கம் பற்றிய எக்கோ சோதனை செய்தார்.

"You are lucky…!, இரவு உங்கட நல்ல நேரத்துக்கு வந்திருக்கிறீங்க! இல்லாவிட்டால் நிலைமை மோசமாகியிருக்கும்! இரத்தசோதனை அறிக்கைகளைப் பார்க்கும்போது மாரடைப்புக்கு உள்ளாகியிருக்கிறீங்க போலுள்ளது. இப்போது ஆறு ஏழு மணித்தியாலங்கள் கடந்த பிறகு இன்னெருமுறை இரத்த சோதனை செய்ய வேண்டும்…அதன் பின்னர்தான் உறுதி செய்யலாம்..!"

மாரடைப்பு என்றதும் அவர் அதிர்ந்து போனார். "டொக்ரர்! இது ஏதாதவது ஆபத்தான நிலைமையா?"எனக் கேட்டார்.

"நோநோ…(இல்ல இல்ல…) தெம்பாக இருங்கள்! அன்ஜியோகிராம் சோதனையொன்று செய்துபார்க்க வேண்டிவரும்…" எனடொக்ரர் இன்னொரு புதிர்போட்டுச் சென்றார்.

அவருக்குத் திரும்பவும் குழப்பமாயிருந்தது. 'இதற்கெல்லாம் இன்னும் செலவாகுமே…!' என யோசனையாயிருந்தது. மாரடைப்பு அது இது என டொக்ரர் கூறியதைக் கேட்டு மனைவியும் கலங்கிப்போயிருந்தார். அவரது கையை தனது கைக்குள் எடுத்து வைத்துக்கொண்டு சொல்வதறியாது நின்றார் மனைவி. தாதி வந்து மனைவியை இனி வெளியே போகு மாறு தயவுடன் கூறினார். மனைவி தன்கூட நின்றபோது சற்று ஆறுதலாகத் தானிருந்தது. மனைவி வெளியேபோனதும் மனப்பயமும் சேர்ந்துகொண்டது. இது அவ்வப்போது வந்துபோகும் நெஞ்சுவலி என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தார். டொக்டர் 'மாரடைப்பு' என்று கூறியதும் பயந்துபோனார். ஒருவேளை இறந்துபோய்விடுவேனோ?

எல்லோருக்கும் ஒருநாள் இறப்பு வரத் தான் போகிறது. அது இப்போதோ…எப் போதோ! அவருக்கு எப்போதும் மனதில் ஒருநினைவு இருக்கிறது. வயதான பிறகுதான் இந்த நினைவுகள் வந்துபோகிறது! இந்த உலகை விட்டுப் போகும்போது, தன் வாழ்க்கையில் யாருக்கும் எதுவித குறைவும் செய்யவில்லை என்ற மனத்திருப்தியோடு 'பை…பை!' என பிள்ளைகளிடம் கையசைத்து விடைபெற்றுச்

செல்லவேண்டும்! அதுஎவ்வளவு தூரம் சாத்தியமாகும்?

தனது வாழ்க்கைக் காலம் அவரது மீள் நினைவுக்குட்பட்டுக் கொண்டிருந்தது. தன்னால் இயலுமானளவு எல்லாவற்றையும் சரியாகத் தான் செய்து வந்திருக்கிறார். வெளிநாட்டு நிறுவனமொன்றில் நீண்டகாலமாக வெவ் வேறு நாடுகளில் உயர்பதவியில் பணி யாற்றியபோது, போக்கிடமின்றிருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு தொழில் வசதிசெய்து வாழ வழி காட்டியிருக்கிறார். அவர்களெல்லாம் இப்போது குடும்பசமேதராக நல்ல நிலைமையிலிருக்கிறார்கள். அது மனதை நிறைவுசெய்கிறது.

வாழ்க்கைக் காலத்தில் பழக நேர்ந்த எவருடனும் அவர்களது மனம் கோணாமல் நடந்திருக்கிறார்.

மணமுடித்தபோது அவரது அம்மா கூறியது எப்போதும் அவரது ஞாபகத்திலிருந்திருக்கிறது. 'பெண்பிள்ளைகாரியம்... ஒருபெண் அப்பா அம்மாவுடன் இருக்கும்போது சந்தோஷமாக இருந்திருப்பாள்... கல்யாணம் முடித்து வந்தபிறகு அந்த சந்தோஷத்தையெல்லாம் இழந்து விட்டேனே என ஒருபோதும் அவள் கவலைப்படக்கூடாது. கட்டிய மனைவியை தன் மகள்போல மனச்சுதந்திரமாகவும் சந்தோஷ மாகவும் வைத்திருப்பது உனது கடைமை!' அது கடைமையல்ல... உயிர்த்தொடுசல் என உணர்ந்து அதற்கும் மேலான இணைவுடன்தான் வாழ்க்கை நடத்தியிருக்கிறார்.

தன் முயற்சிக்கும் வசதிக்கும் இயலு மானவரை பிள்ளைகளை ஓரளவுக்கேனும் ஆளாக்கிவிட்டிருக்கிறார். பேரப்பிள்ளைகளுடன் குத்திமுறிந்து விளையாடி சந்தோஷப் பட்டிருக்கிறார். இயற்கைக் கொடைகளையும் மரம் செடிகளையும் பாதுகாத்து வளர்த் திருக்கிறார். வேறுவேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்து வேறுவேறு வீடுகளில் வசிக்க நேர்ந்தாலும் குருவிகளுக்கும் இதர பறவைகளுக்கும் தானியங்களும் தண்ணீரும் மரக்கிளைகளில் தொங்கவைத்து அவை வந்து தண்ணீரில் முங்கிக் குளிப்பதையும் உணவுண்டு செல்வதையும் பார்த்து நிறைவடைந்திருக்கிறார்.

இப்போது என்ன... ஒரேயொரு கவலைதான் மனதை வாட்டுகிறது!

எல்லா அப்பாமார்களும் பிள்ளைகளுக் கென்று சொத்துபத்து சேர்த்து வைத்துவிட்டுப் போவார்கள். தான்கடன் சுமையைத்தான் அவர்களது தலையில் போட்டுவிட்டுப் போவார் போலிருக்கிறது! அவ்வப்போது வந்துபோகும் நெஞ்சுவலியைப்போல இந்த கடன் சுமைகளும் அவற்றை எப்போது தீர்த்துவைக்கமுடியும் என்ற மனக்கவலையும் வந்துபோய்க் கொண்டு தானிருக்கிறது. இவையெல்லாம் ஒரேயடியாகப் போயேபோய்ச் சேர்ந்துவிடாதா? இப்போது இந்த வைத்தியச் செலவுகள் வேறுவந்துவிட்டது.

பக்கத்தில் தாதியொருவர் சோதனைக்காக இரத்தம் எடுக்கவந்தபோது,"மிஸ்! அன்ஜி யோகிராம் ரெஸ்ருக்கு எவ்வளவு சார்ஜ் பண்ணுவாங்க?"என அப்பாவித்தனமாகக் கேட்டார்.

"தன்னேநே...! அஹலா கியன்னங்! (தெரியல்ல...! கேட்டு சொல்கிறேன்!") எனக் கூறியபடி அவர் சென்றுவிட்டார். வருவார்வருவார் எனப் பார்த்துக் கொண்டிருந்தவாறே உறக்கத்தி லாழ்ந்துபோனார்.

எழுந்தபோது இரத்த சோதனை ரிப்போர்ட் வந்திருந்தது. டொக்ரர் அம்மாவும் வந்திருந்தார். டொக்ரர் கூறியதை சாதாரண புரியக்கூடிய பாஷையில் சொல்வதானால், 'இரவு மாரடைப் பிலிருந்து தொன்னூற்றொம்பதில் தப்பியி ருக்கிறீங்க! அன்ஜியோகிராம் செய்து பார்ப்போம்... இரத்தக்குழாய் அடைப்பு இருந்தால் ஸ்ரென்ற் போடவேண்டி யேற் படலாம்!' என ஸ்ரென்ற் போடுவது பற்றிய விளக்கத்தையும் கூறிச் சென்றார்.

'அன்ஜியோகிராம் சோதனை செய்து பார்த்து, இரத்தக்குழாய் அடைப்பு ஏதுமிருந்தால் அல்லது சுருங்கிப் போயிருந்தால் அடைப்பை அகற்ற சுருக்கத்தை விரிவுபடுத்தும் செய்முறை தான் இது. ஒருபலூன் ஊதுவது போன்ற செய்முறையில் அவ்விடத்தில் ஊதி விரிவு படுத்தப்பட்டு, இரத்தக்குழாய் மீண்டும் சுருக்க மடையாமலிருப்பதற்காக ஒரு நுண்ணிய மெற்றல் நெற் பொருத்தப்படும். குறிப்பிட்ட காலத்தில் இது உடலமைப்புக்களுடன் இசைந்து சேர்ந்துவிடும்.'

டொக்ரர் மிக இலகுவாக இதையெல்லாம் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். அவருக்கு இன்னுமின்னும் மனக்குழப்பம் மேலிட்டுக் கொண்டிருந்தது. இத்தனூண்டு இதயத்துக்குள் இவர்கள் இந்த வேலைகளையெல்லாம் நுணுக்கமாகச் செய்துமுடிப்பார்களா? சரியாகச் செய்துமுடிப்பார்களா..! கரணம் தப்பினால்

மரணம் என்ற கதைதான்! நுண்ணிய குழாயி னூடு இழையைச் செலுத்தும் போது ஏதாவது உடைவு அல்லது பாதிப்பு ஏற்பட்டால்... தனது கதை அதோ கதி என முடியவேண்டியது தான்! இதெல்லாம் தனது அதீத கற்பனைகளோ என்ற எண்ணமும் தோன்றியது. எனினும் பயம் மனதைக் கௌவிக் கொண்டிருந்தது.

மதியம் இரண்டு மணிக்கான பொழுதில் சிகிச்சைக்கு நேரம் குறிக்கப்பட்டிருந்தது. தாதிமார் வந்து அவர் தரித்திருந்த உடைகளை மாற்றி சத்திரசிகிச்சைக்கான இலகு உடை களை அணிவித்தபோது வாழ்வின் நிஜத் துக்கும் முடிவுக்கும் இடைப்பட்ட ஒரு தருணத்திற்கு வந்திருக்கிறோம் என்று தோன்றி யது. எதுவும் இப்போது தன்கையில் இல்லை! எல்லாவற்றையும் அவர்கள் கைகளுக்கு விட்டாயிற்று! நிபுணத்துவ டொக்டரின் ஆற்றலில் எல்லாம் சரியாக நடந்தேறலாம். ஆனால் எங்கேயும் எல்லா தருணங்களிலும் சறுக்கல்கள் உண்டு!எதுவும் நேரலாம்!

ஸ்டெச்சரில் உருட்டிக் கொண்டுபோனபோது வெளிவாசலில் மனைவியும் பிள்ளைகளும் ஏக்கப் பார்வையுடன் நின்றார்கள். அவர்களது ஏக்கம் இப்படியே நிலைத்துப் போய்விடுமோ? அவரது கடைக் கண்களில் கண்ணீர் கசிந்துவந்தது. வாய் பேசமுடியாத தருணத்தில் உணர்வுகள் கண்ணீராக வெளிப்படுகிறது.

அன்ஜியோகிராம் சோதனை ஆரம்பமானது. நோய்வாய்ப்படுவதும் சிகிச்சை பெறுவதும் வாழ்க்கைக் காலத்தில் தவிர்க்கமுடியாத விடயங்கள்தான். சிகிச்சைக்கான செலவுகளும் தவிர்க்கமுடியாதவைதான். பிரச்சனை ஏதாவது பெரிதாகி விடக்கூடாது என்ற பிரார்த்தனையே அவரது மனதை ஆக்கிரமித்திருந்தது. 'You are lucky... God helped you...! You saved a lot of money...!' என இருபது வருடங்களுக்குமுன் அந்த டொக்ரர் சொன்னதுபோல் இவரும் சொல்வாரா...?

"உங்களது பிரதான இரத்த நாளமொன்று முழுமையாக மடிந்துபோயிருக்கிறது...அதனால் இரத்த ஓட்டம் தொண்ணூறு வீதமளவில் தடைப்படுகிறது..."டொக்ரர் தனது சோதனை முடிவில் சொன்ன சேதியைக் கேட்டு அவர் அதிர்ந்துபோனார். அதிர்ந்துபோனது தனது நோய் நிலைமையை நினைத்தா அல்லது இதற்கான வைத்தியச் செலவுகளை நினைத்தா என்றும் புரியவில்லை.

"குறிப்பிட்ட இடத்தில் ஒரு ஸ்ரென்ற் உட்செலுத்தி இரத்த நாளத்தின் மடிப்பை சரிசெய்துவிடலாம்...அதுதான் உடனடியாகச் செய்யவேண்டிய சிகிச்சைமுறை...!"

'அதற்குப் பெரியதொகை செலவாகுமே...!'

இப்படி அவர் கேட்கவில்லை...மன தில் நினைத்துக்கொண்டார். "டொக்ரர்...! ஸ்ரென்ற் போடுவதை இன்னொரு தடைவை செய்ய முடியாதா...?"

"செய்யலாம்... ஆனால் உங்களுக்கு இன்னொருமுறை இதுபோன்ற சிகிச்சை சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும்... அதைவிட, சுணக்கம் செய்யாமல் சிகிச்சையை செய்வதுதான் நல்லது... வெளியே நிற்கும் பிள்ளைகளுக்கும் தகவல் அனுப்பியிருக் கிறேன்..."

அவர், "சரி டொக்ரர்...!" என்றார்.

ஸ்ரென்ற் உட்பொருத்தும் சிகிச்சை நிறைவு பெற்று மீண்டும் தீவிரசிகிச்சைப் பிரிவில் மருத்துவ கண்காணிப்பில் ஒருமுழுநாள் முழுதும் இருந்தபோதும், வைத்தியசாலையில் கணக்கை எப்படி செலுத்துவது என்றயோசனையே அவரது மனதில் ஓடிக்கொண்டிருந்தது. மூன்றாம் நாள் தனிப்பட்ட வார்ட்டிற்கு மாற்றப்பட்டபின், மனைவி பிள்ளைகள் பேரர்கள் எல்லோரும் பார்க்க வந்திருந்தார்கள்.

அறைவாசலில் நுளைந்ததும் சின்னவன் சற்று பிறேக் அடித்து நின்றான். தயக்கத்தில் அவனது முகம் வியப்படைவது தெரிந்தது. அவர் அவனை சைகைசெய்து பக்கத்தில் அழைத்தார். மெல்லமெல்ல பக்கத்தில் வந்தான்... "அம்மப்பா...!"

"என்ன சொல்லுடா...!"

"நீங்க செத்திட்டு திரும்ப எழும்பி வந் தீங்களா...?"

"ஏன்டா செல்லம்...! நான் நல்லாத்தானே இருக்கிறன்!"

மகள் சிரித்தபடி கூறினாள், "இவங்க ரெண்டுபேரும் பயந்துபோயிருந்தாங்க அப்பா...! வீட்டுக்கு சுகம் விசாரிக்க வந்தவங்களும் ரெலிபோனில பேசினவங்களும் அதையிதைச் சொல்லிக்கொண்டிருந்தாங்க...இது முதலாவது அற்றாக்கா செகண்ட் அற்றாக்கா என்றெல்லாம் கேட்டாங்க...! அம்மாவும் பயந்து அழுதாங்க... அது இவங்களையும் குழப்பிவிட்டிருக்கு...

"ராவு படுக்கும்போது இவன் கேட்கிறான்... 'அம்மப்பா செத்திட்டாரா...? எங்களத்தானே

சிமெட்றிக்குத் தூக்கியட்டுப் போகவேணும் என்று சொன்னவர்… எப்பிடித் தூக்கிறது? பாரமாயிருப்பாரே…" என்று!

அவர் அவனைத் தன் கைகளுக்குள் அணைத்துக்கொண்டார்.

"கூடியகெதியில வீட்டுக்குப் போவதுதான் நல்லது… இப்பவே பில் எவ்வளவு வந்திருக்குமோ தெரியாது… என்னம்மா செய்யிறது?" என பிள்ளைகளிடம் கேட்டார்.

"ஏதாவது ஒழுங்கு செய்யலாம் அப்பா… நீங்க யோசிக்காமலிருங்க…!"

மறுநாள் காலையில் டொக்ரர் அம்மா வந்து அவதானிப்பு அறிக்கைகளைப் பார்த்தபிறகு வீட்டுக்குப் போகக்கூடியதாயிருக்கும் என, பிள்ளைகள் விசாரித்துவந்து கூறினார்கள்.

"பில் எவ்வளவு என்று பார்த்தீங்களா…?" என மீண்டும் ஈனமான குரலில் கேட்டார். "கேட்டனாங்க அப்பா…அவங்க கணக்குப் பார்த்துச் சொல்லுவாங்க!"

எவ்வளவு தொகை என்பது ஏற்கனவே பிள்ளைகள் அறிந்திருக்கக்கூடும்… தன்னிடம் கூற விரும்பவில்லையோ என நினைத்துக்கொண்டார். மகள் அடிக்கடி சித்தப்பா, சித்தி, மாமா என ஒவ்வொருவருடனும் பேசிக்கொண்டிருந்தாள். கண்களை மூடியபடி அவளது பேச்சுக்களை கிரகித்துக்கொண்டிருந்தார். அப்பாவுக்குக் கேட்டக்கூடாது என ரகசியக் குரலில்தான் பேசுகிறாள். எனினும் அவள் என்ன பேசுகிறாள் என்பதை அவரது மனம் அனுமானித்துக்கொண்டிருந்தது. வைத்தியச் செலவை செலுத்துவதற்காக பிள்ளை பிரகண்டப் படுவதை நினைத்து மூடிய கண்களுக்குள்ளும் கண்ணீர் பனித்தது. நெஞ்சுக்குள் அழுகையை அடக்கிக் கொண்டிருந்தார்.

சுகயீனமுற்ற வேளையிலிருந்து ஓப்ஃ. செய்யப்பட்டிருந்த அவரது மொபைல் ஃபோனை மகள் ஓன் செய்து கொடுத்திருந்தாள். மாலைநேரமாக ரெலிபோஃன் றிங்கிட்டது. மகள்தான் கையிலெடுத்துப் பார்த்துவிட்டு பதற்றமடைந்தாள், "அப்பா…சுவாரிஸ் அங்கிள் கோல் பண்றார்!"

அவருக்கும் திடும் என நெஞ்சு ஒருமுறை அடித்தது. "ஆன்சர் பண்ணுங்க… ரெண்டு நாளில அப்பா பேசுவார் என்று சொல்லுங்கோ!"

மகள் பேசினாள்…"அங்கிள்…அப்பிதென் ஸ்பிறித்தாலே இன்னே…தாத்தி பஸ்ஸ கத்தாகறய்… (நாங்க இப்ப ஆஸ்பத்திரியில நிக்கிறம்…அப்பா பிறகுபேசுவார்…)"

"அய்யி மொனவத பிறஸ்னே துவ? (என்ன பிரச்சனை மகள்?)"

மகள் விபரம் கூறினாள். சுவாரிசின் பக்கம் போஃன் மௌனமாகியது.

'சுவாரிஸ் தந்திருந்த காசு பற்றித்தான் கேட்கப்போகிறான்… இப்போது என்னபதில் சொல்வது?' என எண்ணி அவரது நெஞ்சிடிப்பு அதிகமாகியது.

மகள் பரிதாபமாக அவரது உறைந்துபோன முகத்தைப் பார்த்தாள்.

ஒருகணப் பொழுதுதான்…சுவாரிஸ் அபயவர்த்தனாவின் குரல் மீண்டும் கேட்டது. "ஹொஸ்பிட்டல் வியதம்ட மொனவத கறன்னே? (ஹொஸ்பிட்டல் செலவுக்குஎன்ன செய்றீங்க)?"

"சில ஒழுங்குகள் செய்தனாங்க அங்கிள்… இன்னும் கொஞ்சம் தேவைப்படுது!"

"எவ்வளவு?"

"ரெண்டுலட்சம் அளவில…"

"ஒயாகே எக்கவுன்ட் டீற்றெய்ல்ஸ் மெசேஜ் கறன்ன புத்தே…மங் சல்லி தான்னங்! (உங்கடஎக்கவுண்ட் விபரம் மெசேஜ் பண்ணிவிடுங்க மகள்…நான் காசு போட்டு விடுறன்!)

அதைக் கேட்டதும் அவருக்கு நெஞ்சு ஒருமுறைவிம்மியது. ஆனால் அது சுகமா வலியா என்பது புரியவில்லை.

❍❍❍





ஞானம் 250ஆவது இதழ்

## "ஞானம் பரிசுச் சிறுகதைகள் 60"

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு **"ஞானம் பரிசுச் சிறுகதைகள் 60"** என்ற மகுடத்தில் வெளிவந்துள்ளது 428 பக்கங்கள் கொண்ட இந்தச் சிறப்பிதழின் விலை ரூபா. 2000/= ஞானம் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

– ஆசிரியர்

# ஈழத்து இதழியலில் சுதந்திரனின் வழித்தடம்:
## விரிவான ஆய்வுக்கான சில குறிப்புகள்

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் மூத்த தமிழ்த் தலைவரான ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகஸ்ட் 29, 1944இல் தொடங்கப்பட்டது. 1947இல் நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் இக் கட்சி சில ஆசனங்களையும் வென்றது.

தந்தைசெல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை ஆரம்பிப்பதற்கு இரண்டு வருடங் களுக்கு முன்னமே அதாவது இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் 1947ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையில் சொந்தமாக ஒரு அச்சகத்தை வாங்கி, அந்த அச்சகத்துக்கு ‘சுதந்திரன் அச்சகம்’ என பெயருமிட்டு அதில் சுதந்திரன் பத்திரிகையைத் தொடங்கினார். இலங்கை தமிழரசுக் கட்சியின் உத்தியோக பூர்வ நாளிதழாக பின்னாளில் பேசப்பட்ட அப்போதைய ‘சுதந்திரன்’ வெளிவந்து வீறுநடை போட்ட அக்காலகட்டத்தில் கொழும்பி லிருந்து இரு பெரும் பத்திரிகைகள் தமிழ் மக்களுக்கான ஊடகச் சேவையை வெற்றிகரமாக நடத்திவந்தன.




**என்.செல்வராஜா**
நூலகவியலாளர்- லண்டன்


வீரகேசரி நாளிதழ் ஒகஸ்ட் 06, 1930 அன்று 8 பக்கங்களுடன் தமிழகத்தவரான பெ. பெரி. சுப்பிரமணியம் செட்டியார் என்பவரால் தொடங்கப்பட்டது. பத்திரிகையின் ஆசிரியராகப் பதவி வகித்த போதும், ஆசிரியப் பகுதியின் பெரும் பொறுப்புகளை அவரது நெருங்கிய நண்பரும் வங்கியாளருமான எச்.நெல்லையா அவர்களே கவனித்து வந்தார். கே.பி. ஹரன் (1939-1959) பின்னாளில் ஆசிரியராக இருந்தார். கொழும்பு செட்டியார் தெருவில் நிறுவப்பட்ட வீரகேசரி அச்சகத்திலிருந்து முதலில் வீரகேசரி வெளியிடப்பட்டது. அக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து தமிழ்நாடு, சுதேசமித்திரன், நவசக்தி, மலேசியாவில் இருந்து தமிழ்நேசன் ஆகிய பத்திரிகைகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தன. வீரகேசரி ஆரம்பிக்கப்பட்டு ஓரிரண்டு ஆண்டுகளில் கொழும்பில் கிராண்ட்பாஸ் வீதி 185ஆம் இலக்கத்துக்கு அதன் அச்சகம் மாற்றப்பட்டது. இன்றுவரை (2021) அந்த முகவரியிலேயே வீரகேசரி இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர் தொடர்பான செய்திகளையும் தலைநகர் கொழும்பை மையமாகக் கொண்ட செய்திகளையுமே வீரகேசரி வெளியிட்டு வந்தது. நாளடைவில், இது ஒரு தேசியப் பத்திரிகையாக உருவெடுத்தது.

சுதந்திரன் வெளிவரத் தொடங்கிய காலத்தில் கொழும்பில் இயங்கிவந்த மற்றுமொரு பத்திரிகை தினகரனாகும். இப்பத்திரிகை வீரகேசரி தொடங்கப்பெற்று ஈராண்டுகளின் பின்னர் மார்ச் 15,1932 அன்று தனது பயணத்தைத் தொடங்கியிருந்தது. அரச ஆதரவு நிலையெடுத்திருந்த அப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக கே.மயில்வாகனம் பணியாற்றினார். இலங்கையின் முன்னணி வெளியீட்டு நிறுவனமான லேக் ஹவுஸ் நிறுவனம் இதனை வெளியிட்டுவந்தது.

1949ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து உட்பூசல் காரணமாகப் பிரிந்த எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் அவர்களின் தலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. சுதந்திரன் பத்திரிகையை உருவாக்கி சரியாக இரண்டு வருடம் ஏழுமாதங்களுக்குப் பின்பே 18.12.1949 இல் கொழும்பு மருதானை எழுதுவிளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியின் உதயத்தினை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

அதன்பின் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உள்வீட்டுப் பிள்ளையாகச் சுதந்திரன் பிரபல்ய மடையத் தொடங்கியது. வீரகேசரி, தினகரன் ஆகிய இரு அனுபவம் மிக்க பத்திரிகைகளின் மத்தியில் ஈழத்தமிழர்களுக்கான, அவர்களது இதயத்திற்கு நெருக்கமானதாக தனித்த பாதையில் பயணித்த சுதந்திரன் ஆரம்பத்தில் நாளிதழாகவே பயணிக்கத் தொடங்கியிருந்தது. பின்னர் 1951 முதல் வார இதழாக வெளிவரத் தொடங்கியது.

சுதந்திரனின் முதல் ஆசிரியராக இருந்தவர் கோ. நடேசையர் என்பது வரலாறு. **கோதண்டராம நடேசய்யர்** (14.01.1887-07.11.1947) தமிழகத்தில் பிறந்து இலங்கையின் மலையகத்தில் குடியேறிய தமிழறிஞர், இவர் பதிப்பாளர், அரசியல்வாதி, இதழாசிரியர், எழுத்தாளர் எனப் பல்பரிமாணம் கொண்டவர். 1924 முதல் இலங்கை சட்டசபையிலும், பின்னர் இலங்கை அரசாங்க சபையிலும் உறுப்பினராக இருந்தவர். 1921-ஆம் ஆண்டு இலங்கையின் முதல் தமிழ் நாளிதழான 'தேசநேசன்' என்ற பத்திரிகையைத் தொடங்கியிருந்தார். இந்தியத் தொழிலாளர்களின் துயரத்தை முதன்முதலாக ஆய்வு செய்து வெளியிட்ட சிறப்பு 'தேசநேசன்' இதழுக்குண்டு. பின்னர் 03.09.1924இல் 'தேசபக்தன்' என்ற இதழைத் தொடங்கினார். வாரத்தின் மூன்று நாட்கள் இது வெளியாகியது. 1924ஆம் ஆண்டு நடேசய்யர் இலங்கை சட்டசபையில் மலையகத் தமிழரின் சார்பில் உறுப்பினராக நியமிக்கப்பட்டு, பின்னர் இலங்கை அரசாங்க சபைக்கு 1936ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அட்டன் தேர்தல் தொகுதியிலிருந்து தேர்தெடுக் கப்பட்டார். அன்று முதல் 1947ஆம் ஆண்டு வரை சட்டமன்றத்தில் நடேசய்யரின் உரைகள் கணீரென ஒலித்தன. இலங்கை இந்தியக் காங்கிரசுடன் இணைந்து செயற்பட்ட அவர், 1947இல் நாடாளுமன்றத் தேர்தலில் மஸ்கெலியா தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார்.

நடேசையரின் அரசியல் பணி, பத்திரிகைப் பணி ஆகியவற்றை நன்கறிந்திருந்த தந்தை செல்வா, அவரையே தனது புதிய பத்திரிகையான சுதந்திரனை வழிநடத்தும் முதலாவது ஆசிரிய ராக நியமித்ததில் வியப்பேதுமில்லை. குறுகிய காலமே சுதந்திரனுடனான அவரது பயணம் அமைந்திருந்தது. தேர்தல் தோல்வியின் பின்னர் அவர் அதிக காலம் உயிர்வாழவில்லை. நோய்வாய்ப்பட்டு, 07.11.1947 அன்று மரணமான அவரது இறுதிக்கிரியைகளை தந்தை செல்வாவே முன்நின்று நடத்தி வைத்தார். நடேசையரின் மரணச்செய்தி சுதந்திரனின் 08.11.1947 அன்றைய இதழில் முதற் பக்கத்தில் புகைப்படத்துடன் இடம்பெற்றிருந்தது.

சுதந்திரனில் கோ. நடேசையரின் இடத்தை நிரப்பத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், எஸ்.டி.சிவநாயகம் (02.07.1921-22.04.2000) அவர்களாவார். இவர் 1948ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகை முலம், தனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்திருந்தார். பின்னர், 1952 - 1961 காலகட்டத்தில் சுதந்திரன் வார இதழிலும், பின்னர் வீரகேசரியிலும் ஆசிரிய ராகப் பணிபுரிந்தார். அதன் பிறகு தினபதி, சிந்தாமணி முதலான தேசிய தினசரி மற்றும் வார இதழை உருவாக்கி அவற்றின் பிரதம இதழாசியராகவும், பிற்காலத்தில் ஆசிரிய பீடத்தின் பணிப்பாளராகவும் (அந்த நிறுவனம் 1974ஆம் ஆண்டில் மூடப்பட்ட காலம் வரை) பணியாற்றினார்.

எஸ்.டி. சிவநாயகம் சுதந்திரன் ஆசிரிய ராகப் பணியாற்றிய காலத்தில் சுதந்திரன் தமிழர் ஒன்றுகூடும் இடங்களில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழிலகங்களில் குழு நிலையில் உரத்து வாசிக்கப்பட்ட ஒரு பத்திரிகையாக இருந்தது. தேநீர்க்கடைகள் உள்ளிட்ட சில இடங்களில் ஒருவர் வாசிக்க, பலர் சூழவிருந்து கேட்கும் வழக்கமிருந்தது. சுதந்திரன் பத்திரிகை உரத்து வாசிக்கப்படும்போது, அதன் செய்திகள் இலகுவாக மற்றவர்களின் செவிகளிலும் புகவேண்டும் என்பதால் குறைந்த சொற்களில் எளிய வசனங்களில் விளங்கும்

வகையில் தாம் சுதந்திரனை அமைத்ததாக அவர் தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

1958ஆம் ஆண்டு ஸ்ரீ எதிர்ப்பு போராட்டமும் அதன்பின் ஏற்பட்ட தமிழர்க்கெதிரான இன வன்முறைகளும் சுதந்திரன் பத்திரிகையை இலங்கை அரசு சிறிதுகாலம் தடைசெய்து வைக்கக் காரணமாகின. 1962இல் எஸ்.டி. சிவநாயகம் சுதந்திரன் பத்திரிகையில் இருந்து விலகினார். அவர் சுதந்திரனிலிருந்து விலகி வீரகேசரியில் இணைந்த பின்னர் 1962-66 காலகட்டத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த இராசதுரை பத்மநாதன் (19.7.1929-16.4.2005) அவர்கள் சுதந்திரன் வார இதழில் ஆசிரியராகக் கடமை புரிந்தார். இவர் ஆங்கில உதவி ஆசிரியராக 1950இல் தன் தொழிலைத் தொடங்கியவர். வீரகேசரி பத்திரிகையின் அதிபர் பி.பி.ஆர்.எஸ்.செட்டியாரின் அந்தரங்க காரியதரிசியாக (1955-56) முதலில் இருந்தவர்.

1962இல் அதே காலப் பகுதியில்தான் கோவை மகேசனும் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியபீடத்தில் இணைந்துகொண்டார். கோவை மகேசனின் இயற்பெயர் மகேஸ்வர சர்மா (22.03.1938 - 04.07.1992). இவரது இளமைக்காலத்தில் தான் இலங்கையில் தமிழ் அரசியல் வீறுடன் எழுச்சிபெறத் தொடங்கியது. தமிழ்ப் பற்று மிக்க கோவை மகேசன் தமிழ் அரசியலால் கவரப்பட்டார். தந்தை செல்வா உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டார். 1956ஆம் ஆண்டு கோப்பாய் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கு. வன்னியசிங்கத்துக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார்.

கொழும்பில் சுதந்திரன் பத்திரிகையில் 1962இல் இணைந்தபோது இவருக்கு வயது இருபத்திநான்கு மட்டுமே. 1965இல் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், பின்னர் சுதந்திரன் ஆசிரியர் இரா. பத்மநாதன் 1967இல் USIS அமெரிக்க தகவல் நிலையத்தின் தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளராகப் பதவியேற்று,சுதந்திரன் ஆசிரியர் பணியிலிருந்து நீங்கியதும், கோவை மகேசனே 1968இல் சுதந்திரனின் ஆசிரியர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் விடுதலைப் போராட்டம் பற்றிய அவரின் எழுத்துக்கள் அதி தீவிர நடையில் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தன. கோவை மகேசனின் அரசியல் ஈடுபாடு எழுத்துத் துறை வாயிலாகவே முதலில் அமைந்தது. அத்துடன் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் போன்ற போராட்டங்களில் நேரடியாக ஈடுபடவும் தொடங்கினார். அதுவே பின்னாளில் சுதந்திரனின் முடிவிற்கும் ஒரு காரணமாயிற்று.

இந்தவேளையில் 1977இல் ஏற்பட்ட இனவன்முறையால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையில் இயங்கிய சுதந்திரன் அச்சகம், சுதந்திரன் பத்திரிகை அலுவலகம் ஆகியன, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டு அங்கு பிரதான வீதியில் அமைந்த கட்டிடத்திலிருந்து வாரம் இருமுறை - புதன், சனிக்கிழமைகளில் வெளிவந்தது.

இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகள் உட்பட்ட எல்லாப் பத்திரிகைகளும் இலங்கையின் தலைநகரமான கொழும்பிலிருந்தே ஆரம்பத்தில் வெளியிடப்பட்டு வந்தன. இலங்கைத் தமிழரின் பண்பாட்டு மையமாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து அவர்களின் குரலைப் பிரதிபலிக்கும் நோக்கத்துடன் பத்திரிகைகள் எதுவும் இல்லாத குறையைப் போக்க 1958ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கே.சி.தங்கராஜா (20.6.1907-20.7.1987), கே.சி.சண்முகரத்தினம் ஆகிய இரு சகோதரர்களும் இணைந்து, 'கலாநிலையம்' என்ற பதிப்பகத்தை ஆரம்பித்திருந்தனர். 1959 பெப்ரவரியில் 'ஈழநாடு' என்ற பெயரில் செய்திப் பத்திரிகையையும் அவர்கள் ஆரம்பித்தனர். ஈழநாடு - ஆரம்பத்தில் வாரம் இரு முறையாக வெளிவந்தது. 1961 முதல் நாளிதழாக வெளிவர ஆரம்பித்தது. கொழும்பு தவிர்ந்த இலங்கை நகரமொன்றிலிருந்து வெளிவந்த முதல் நாளிதழ் இதுவே. ஈழநாட்டின் பிரதம ஆசிரியர்களாக எஸ்.எம். கோபாலரத்தினம், கே.பி.ஹரன் ஆகியோர் ஆரம்பத்தில் பணியாற்றினார்கள். ஈழநாடு ஞாயிறு வாரமலர் பதிப்பிற்கு ஆசிரியர்களாக சு.சபாரத்தினம், ம. பார்வதிநாதசிவம் உள்ளிட்ட பலரும் பங்காற்றியுள்ளனர்.

1977இன் பின்னர் யாழ்ப்பாணத்துக்குப் புலம்பெயர்ந்த 'சுதந்திரன்' பத்திரிகைக்கு 'ஈழநாடு' போட்டியாக இருக்கவில்லை. காரணம், இரண்டு பத்திரிகைகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. சுதந்திரன் கோவை

மகேசனின் கைகளில் தமிழரசுக் கட்சியின் முழுமையான பிரச்சாரப் பீரங்கியாகவே செயற்பட்டு வந்தது.

சுதந்திரன் ஆசிரியர் குழுவினரில் இன்றைய பிரபலங்கள் பல அன்று உதவி ஆசிரியர் களாகவும், இணை ஆசிரியர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் பணியாற்றி வந் துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் செல்லையா இராசதுரை, எழுத்தாளராகத் தன் வாழ்க்கை யைத் தொடங்கி, 'லங்கா முரசு' என்ற மாத இதழை நடத்திவந்தவர். பின்னர் சுதந்திரன் இதழில் துணை ஆசிரியராகவும் சிலகாலம் பணியாற்றியிருந்தார். பின்னாளில் முழுநேர அரசியல்வாதியாகி, இலங்கையில் 1956 முதல் 1977 வரை மட்டக்களப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார்.

தமிழரசுக்கட்சியின் தலைவர்களாகவிருந்த அ.அமிர்தலிங்கம், செ.இராசதுரை ஆகியோரின் சமகால நண்பராக விளங்கிய நாவேந்தன் இலங்கையில் பழந்தமிழ் இலக்கியத்தை அழகு தமிழில் எளிமையாகப் பேசும் தமிழரசுக் கட்சியின் மேடைப் பேச்சாளராகப் புகழ்பெற்றவர். தமிழரசுக் கட்சியின் ஆரம் பம் முதல் அதன் இளைஞர் அணியில் முக்கியஸ்தராகப் பணியாற்றியவர். இவரும் சுதந்திரன் பத்திரிகையின் முக்கிய எழுத்தாள ராகப் பரிணமித்தவரே.

வாகரைவாணன் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற தமிழாசிரி யராவார். சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம் எனும் முழுப்பெயரை இயற்பெயராய்க் கொண்டவர். தமிழ்நிதி வாகரைவாணன். இவரும் 'சுதந்திரன்' துணை ஆசிரியராகவும், கொழும்பு -10, பண்டாரநாயக்கா மாவத்தையில் அமைந்திருந்த சுதந்திரன் அச்சகம் வெளியிட்ட 'சுடர்' மாதாந்த சஞ்சிகையின் துணை ஆசிரிய ராகவும் விளங்கினார்.

ஈழத்தமிழர் அரசியல் பிரச்சினைகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டங்களையும் எடுத்து விளக்கும் பத்தி எழுத்துப் பகுதியை அரசியல் மடல் என்ற தலைப்பில் சுதந்திரன் பத்திரிகையில் 1969 முதல் ஆசிரியர் கோவை மகேசன் அவர்கள் எழுதி வந்துள்ளார். தொடர்ந்து 8 ஆண்டுகளாக எழுதப்பட்ட இம்மடல்களினூடாக அக்காலத்துக்குரிய எமது அரசியல் பிரச்சினைகளும் நடவடிக்கைகளும் பதிவுக்குள்ளாகியிருந்தன. அந்த அரசியல் மடல்களின் தேர்ந்த தொகுப்பாக 1977இல் 'அரசியல் மடல்' என்ற பெயரில் ஒருநூல் விடுதலைப்பாசறை அமைப்பினால் வெளியிடப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

28 மே 1962 முதல் 4 ஏப்ரல் 1963 வரையி லான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாநகர முதல்வராக இருந்த எஸ்.ஏ.தர்மலிங்கம் பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணியி லிருந்து விலகி, 'தமிழ் ஈழ விடுதலை முன்னணி' என்ற கட்சியை ஆரம்பித்தபோது அவரின் செயலாளராகப் பணியாற்றியவர் கோவைமகேசன் என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னாளில் அக்கட்சி அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. கோவை மகேசன் சாவகச்சேரி காவல் நிலையத் தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் 1982ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் வெலிக்கடை சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். 1983 ஜூலையில் இடம்பெற்ற வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலையில் மயிரிழையில் இவர் உயிர் தப்பினார். 1983இன் பின்னர் புலம் பெயர்ந்து மனைவியுடன் தமிழ்நாடு சென்றவர் அங்கிருந்து சில காலம் 'வேங்கைகள்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளியிட்டார்.சென்னையில் சிறிது காலம் இரத்த அழுத்தம், முடக்குவாதம், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த கோவை மகேசன் யூலை 4, 1992 சென்னையில் காலமானார். கோவை மகேசனின் கைதுடன் சிலகாலம் தொடர்ந்த சுதந்திரன் பத்திரிகை, 1983 யூன் 2ஆம் திகதியுடன் தனது வருகையை நிறுத்திக்கொண்டது.

இறுதிக் காலங்களில் தீவிர அரசியல் பத்திரிகையாக வலம்வந்த போதிலும், சுதந்திரன் பத்திரிகையின் ஆரம்ப காலங்களில் கலை இலக்கியப் பணிகளுக்கும் அது முன்னுரிமை வழங்கி வந்திருந்தது. சுதந்திரனில் தமது ஆரம்ப இலக்கிய முயற்சிகளைக்கண்டு மகிழ்ந்த ஈழத்து இலக்கியவாதிகளில் பலர் இன்று பிரபலங்களாக இருக்கின்றார்கள் என்பதையிட்டு நாம் பெருமைகொள்ளலாம்.

கவிஞர் நீலாவணன் அம்பாறை மாவட்டம் (முன்னர் மட்டக்களப்பு மாவட்டம்), பெரிய நீலாவணையில் பிறந்தவர். 1948இல் இருந்து

எழுதத் தொடங்கியவர் இவர். அவர் கே.சி. நீலாவணன் எனும் பெயரில் 'சுதந்திரன்' பத்திரிகையில் எழுதிய 'பிராயச்சித்தம்' என்ற சிறுகதையே இலக்கிய உலகிற்கு எழுத் தாளனாக அவரை அறிமுகப்படுத்தியது. 1953இல் சுதந்திரனில் வெளிவந்த 'ஓடி வருவதென்னேரமோ?' எனும் கவிதையே இவரை கவனிக்கத்தக்கதொரு கவிஞராக உலகிற்கு வெளிக்காட்டிற்று.

திருகோணமலையில் 22.11.1937இல் பிறந்த தாமோதரம்பிள்ளை பிரான்சிஸ் சுப்பிரமணியம் இலக்கியத்துறையிலும் ஓவியத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். 1954ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் 'நேர்த்திக்கடன்' என்ற தலைப்பில் இவரது முதல் ஆக்கம் பிரசுரமாகியது. பின்னாளில் இவரே இலக்கிய உலகில் தா.பி.சுப்பிரமணியம் என்று பெரிதும் அறியப்பெற்றவரானார்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்ததுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் ஆழக்கால் பதித்த S.P.கிருஷ்ணன், தனது 'எச்சில் இலை' என்ற முதல் சிறுகதைப் படைப்பினை சுதந்திரன் பத்திரிகையிலேயே 1958ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தார்.

சுதந்திரன் பண்ணையில் வளர்ந்த மா.க. ஈழவேந்தனின் 'என் நோக்கில் ஆனந்த குமாரசுவாமி' என்ற தொடர்கட்டுரை சுதந்திரன் இதழிலேயே முதலில் வெளிவந்தது. பின்னர் தனி நூலாகவும் வெளிவந்தது. ஈழவேந்தனின் அரசியல் பாதையில் சுதந்திரன் பத்திரிகையின் துணை அதிகமாயிருந்தது.

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட உதயணன் (இராமலிங்கம்) மட்டக் களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் எழுது வினை ஞராகப் பணியாற்றியவர். உங்கள் தீர்ப்பு என்ன (1959), மகன் தந்தைக்காற்றும்.. (1959), ஒருத்திக்கு ஒருவன் (1959), பூவரசம்பூ (1959), செவ்வாய் பார்த்த பார்வை (1959), ஒரு நாள் இன்பம்(1960) எனப் பல சிறுகதைகளை தனது இளமைக் காலத்தில் சுதந்திரன் இதழ்களில் எழுதிப் பயின்றவர் இவர். பின்னாளில் புலம்பெயர்ந்து பின்லாந்தில் வாழ்ந்தவேளை யில் பின்லாந்தின் இலக்கியமான கலேவெலா காவியத்தை தமிழாக்கம் செய்து பெருமை பெற்றவர்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் சுதந்திரன் வார இதழில் 'தொல்லை சுமக்கத் துணி' என்ற தலைப்பில் எழுதிய பரிசுக் கவிதையொன்றின் மூலம் இலக்கிய உலகில் தடம் பதித்தவர் கவிஞர் 'வீ.எம்.எஸ்.' எனப்படும் வி.எம்.சுந்தரம் அவர்கள்.

ஈழத்தின் சுதந்திரன் பத்திரிகைப் பண் ணையில் 50களில் முகிழ்ந்தவர் கவிஞர் தாமரைத்தீவான் (சோ.இராசேந்திரம்). கிழக் கிலங்கையின் கிண்ணியாப் பிரதேசத்தின் தாமரைத்தீவில் பிறந்து ஈச்சந்தீவில் வளர்ந்தவர்.

சுதந்திரன் பண்ணையில் ஒருங்கே வளர்ந்த நண்பர்களான சிற்பி (சி. சரவணபவன்), உதயணன் (ஆர்.சிவலிங்கம்), ஈழத்துச் சோமு (சோமகாந்தன்) ஆகியோரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர் இராஜநாயகனும், ஓவியக் கலைஞர் ஆதவனும் இணைந்து பின்னாளில் யாழ் மண்ணில் 'கலைச்செல்வி' என்ற சிற்றிதழ் உருவாகக் காரணமாயினர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஈழகேசரி, மறுமலர்ச்சி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாகத் தோன்றிய மிக முக்கியமான சஞ்சிகை இதுவாகும். 1958இல் கலைச்செல்வி வெளிவரத் தொடங்கியது. கலைச்செல்வி சுமார் எட்டு ஆண்டுகள் வெளிவந்தது.

துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசிரியர் துறையூர் க.செல்லத்துரை அவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக கவிதை உலகில் வலம்வந்தவர். அவரது முதலாவது கட்டுரை 'சூடு மிதித்தற் கிராமியக் கவிதைகள்' என்ற தலைப்பில் சுதந்திரன் பத்திரிகையில்தான் வெளிவந்தது.

வட்டுக்கோட்டையில் அராலியூரில் பிறந் தவர் ந.சுந்தரம்பிள்ளை. பின்னாளில் நாடகா சிரியராகப் புகழ்பெற்ற இவரது முதலாவது சிறுகதை 1950ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் 'கையொப்பம்' எனும் தலைப்பில் வெளியானது.

1962ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையின் 'வளர்மதி' மாணவர் பகுதி ஊடாக தம்பிராசா பரமலிங்கம் எழுத்துத் துறையில் பிரவேசித்தார். 'வடு' என்ற இவரது முதலாவது சிறுகதை சுதந்திரன் பத்திரிகையிலேயே பிரசுரமானது. தினகரன் முதலான பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட இவரது சிறுகதைகளும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளும் இதுவரையில்

வெளிவந்துள்ளன. நவாலியூர் பரமலிங்கம், மூலபாரதி, பட்டனைந்து, பூமணி மைந்தன், தேவி பரமலிங்கம் போன்ற புனைபெயர்களில் இன்று இவர் எழுதிவருகிறார்.

உடுவை எஸ்.தில்லை நடராஜா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது, 1962இல் தனது 15ஆவது வயதில் எழுதிய 'மந்திரக் கண்ணாடி' சிறுவர் நாவல் 1964இல் சுதந்திரன் வாரப் பத்திரிகையில் எட்டு வாரங்கள் தொடர்ந்து பிரசுரமானது.

தனது 'ராஷ்டிரபதி பவன்' என்ற நூலை 2007இல் எழுதிய பூங்குன்றன் (இ.சங்கர்), 1963களில் சுதந்திரன் பத்திரிகையில் வாராந்தம் ஏழாம் பக்கத்தில், தொடர்ச்சியாக பூங்குன்றன் என்ற புனைபெயரில் அரசியல் கருத்து விமர்சனக் கட்டுரைகளை எழுதிவந்தவரேயாவார்.

1939இல் பிறந்த து.வைத்திலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். தனது முதலாவது சிறுகதையை 'வைராக்கியம்' என்ற தலைப்பில் 1965இல் சுதந்திரன் வார இதழில் வெளியிட்டிருந்தவர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றித் தற்போது ஓய்வுபெற்றுள்ள யு.எல்.அலியாரின் முதலாவது ஆக்கம் 1965 அக்டோபர் 10ஆம் திகதிய சுதந்திரனில் தான் 'ஈழநாடும் கண்ணகி வழிபாடும்' எனும் தலைப்பில் பிரசுரமானது.

1966ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையூடாக சிறுகதை எழுத்தாளராக அறிமுகமானவர் கே.ஆர்.டேவிட். தமிழ்த் தேசிய உணர்வைத் தன் சிறுகதைகள், நாவல்கள், குறு நாவல்கள் மூலம் வெளிப்படுத்தியவர்.

1967இல் 'பாரம்' என்ற சிறுகதையின் மூலம் சுதந்திரன் பத்திரிகை வழியாக படைப்புலகுக்கு அறிமுகமானவர் நந்தினி சேவியர். பின்னாளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) வாலிப இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர்.

கல்வயல் சரவணமுத்து முருகையா (முருகு) மரபுக்கவிதை, புதுக்கவிதை, கீர்த்தனை, சிறுகதை என்று கடந்த 30 ஆண்டுகளாக எழுதி வருபவர். இவரது கன்னிக் கவிதையும் 1973இல் சுதந்திரன் இதழிலேயே வெளிவந்தது.

1990ஆம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டல பரிசை தனது 'நாளையை நோக்கிய இன்றில்' கவிதைத் தொகுதிக்காகப் பெற்ற கவிஞர் மேமன்கவியின் முதலாவது கவிதையும் 1974ஆம் ஆண்டு சுதந்திரன் இதழில்தான் 'தமிழே என் மூச்சு' எனும் தலைப்பில் வெளிவந்தது.

K.S.ஆனந்தன் எழுதிய பிரபல நாவலான 'தீக்குள் விரலை வைத்தால்' முன்னர் சுதந்திரன் பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தது.

நீண்ட பல ஆண்டுகளாக எழுத்துத்துறையில் நிலைத்து நிற்கும் பல்கலைச் செல்வர் ஏ. பி. வி. கோமஸ் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் கன்னி வெளியீடு 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்' 1965இல் சுதந்திரன் வார இதழில் தொடராக வெளியிடப் பட்டது.

எஸ்.பொன்னுத்துரையின் முதலாவது சிறுகதை 1948ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையிலேயே வெளியானது. அவரது முக்கிய நாவலான 'சடங்கு' கூட, 1966ஆம் ஆண்டு சுதந்திரன் வாரப் பத்திரிகையிலேயே முதன்முதலில் தொடராக வெளிவந்திருந்தது.

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குச் சுதந்திரன் ஆற்றிய பங்களிப்பையும், அதில் தம் சிறுகதைகளை எழுதிய படைப்பாளிகளின் ஒரு காலகட்டத்துப் படைப்பாற்றலையும் ஆவணப் படுத்தும் ஒரு முயற்சியாக 109 சிறுகதைகளைக் கொண்ட தொகுதியொன்றினை செங்கை ஆழியான் 'சுதந்திரன் சிறுகதைகள்'என்ற பெயரில் 2002இல் வெளியிட்டிருந்தார். இத்தொகுதி 1947ஜூன் 1ஆம் திகதியிலிருந்து 1983 டிசம்பர் வரையிலான மூன்றரை தசாப்தகாலத்தில் சுதந்திரன் பத்திரிகை கொழும்பிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும் வெளிவந்தபோது அதில் பிரசுரமான சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. சுதந்திரனின் ஈழத்து இலக்கியத்துக்கான பங்களிப்புக்கு இந்நூல் 'ஒரு சோற்றுப் பத மாகும்'.

ஈழத்தின் தமிழ் பத்திரிகைத்துறையின் வரலாற்றில் சுதந்திரனின் பணி விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அதன்மூலம் 1947முதல் 1983 வரையிலான ஒரு நீண்ட காலகட்ட அரசியல், கலை இலக்கிய வரலாற்றைப் பதிவுசெய்யமுடியும்.

○○○

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர்
துரை மனோகரன்

## நினைவில் என்றும் நிலைப்பவர்

டொமினிக் ஜீவா காலமாகிவிட்டார் என்ற செய்தி, பலரைப் போலவே என்னையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. ஆயினும், ஓர் ஆறுதல். அவர் வாழ்வாங்கு வாழ்ந்தவர். சகல பெருமைகளையும் சம்பாதித்ததோடு, சாதனைகளும் படைத்தவர். ஒருபுறத்தில் அவர் இலங்கையின் சிறந்த சிறுகதையாளர்களில் ஒருவர். மறுபுறத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மல்லிகை இதழின் ஆசிரியர். இன்னொரு புறத்தில், மல்லிகைப் பந்தல் என்ற வெளியீட்டு நிறுவனத்தின் பதிப்பாசிரியர். ஈழத்து இலக்கிய வரலாற்றை, தமது பெயரைத் தவிர்த்து எழுதமுடியாத நிலையை ஏற்படுத்தியமை, அவரது பெரும் புகழுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

நான் யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஏ.எல் படிக்கும்போது 1966 ஓகஸ்டில் பாவையின் பரிசு என்ற நாவலை எனது பதினெட்டாவது வயதில் எழுதி, "உத்தியோகபூர்வமாக" இலக்கிய உலகத்துள் நுழைந்தேன். நூல் வெளியீட்டின் பின்னர், எழுத்தாளரும், மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவாவிடம் எனது நாவலைக் கொடுத்து, அவரது அபிப்பிராயத்தையும் அறிய விரும்பினேன். ஒருநாள் எனது நாவலுடன் அவரை, அவரது அப்போதைய 'சர்வகலாசாலையான' யோசப் சலூனில் சென்று சந்தித்து, என்னை அறிமுகப்படுத்திக்கொண்டபோது, அவர் தமது தொழிலைச் செய்துகொண்டே, அன்புடன் என்னை வரவேற்று உரையாடினார்.

மல்லிகையின் அடுத்த இதழிலேயே ஜீவா எனது நூல் வெளியீடு பற்றிய குறிப்பொன்றையும் எழுதியிருந்தார். அது எனக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தரவே, எனது முதல் சிறுகதையை எழுதி, மல்லிகைக்கு அனுப்பினேன். முன் அட்டையிலேயே பிற எழுத்தாளர்களின் பெயர்களுடன் ஏ.எல் மாணவனான என் பெயரும் காணப்படவே, நான் அடைந்த மகிழ்ச்சி சொல்லும் தரமன்று. கதையில் அவர் எந்தத் திருத்தமும் செய்யவில்லை. ஆனால், கதைத்தலைப்பை மட்டும் மாற்றி வெளியிட்டார். அதன் பின்னர், அவ்வப்போது வேறும் சில சிறுகதைகளை மல்லிகையில் எழுதினேன். எனது சிறை என்ற சிறுகதை, மல்லிகைச் சிறுகதைகள் இரண்டாம் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. அவ்வப்போது கட்டுரைகளும் மல்லிகையில் எழுதிவந்தேன். மல்லிகையின் அட்டையிலும் என் படத்தை வெளியிட்டு, அவர் என்னைக் கௌரவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் துறைத்தலைவராக இருந்த காலத்தில், அவரது அனுமதியுடன் கலைப்பிரிவு மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துமுகமாகச் 'சங்கப்பலகை' என்ற சுவர்ச் சஞ்சிகையை ஏற்படுத்தினேன். அதில் காட்சிப்படுத்தப்பட்ட கவிதைகளை மல்லிகைப்பந்தல் வெளியீடாகக் கொண்டுவரும் முயற்சியில், அப்போது தற்காலிக விரிவுரையாளர்களாக இருந்த ஸ்ரீ பிரசாந்தனும் (தற்போதைய தமிழ்த்துறைத் தலைவர்), ஷர்மிளா என்பவரும் ஈடுபட்டனர். அவர்களைத் தொடர்ந்து, அப்போதைய தற்காலிக விரிவுரையாளரும், தற்போதைய சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி செ. சுதர்சன், 24 கவிஞர்களின் 37 கவிதைகளைத் தொகுத்தளித்த நிலையில், என் தேசத்தில் நான் என்ற கவிதைத் தொகுதி 2004இல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிடப்பட்டது. பேராசிரியர் எம். ஏ. நு்.மான் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அவர், என் வீட்டிலேயே தங்கிச் சென்றார்.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலகட்டத்தில், இப்பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராகவும் செயற்பட்டேன் (அதுவே இப்பல்கலைக்கழக வழமை). அப்போது, பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாகச்

சிறந்த கலை இலக்கியவாதிகளுக்குச் 'சங்கச் சான்றோர் விருது' வழங்கிக் கௌரவிக்கும் முயற்சியை மேற்கொண்டேன். அவ்வகையில், முதன்முதலாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவையே கௌரவிக்க விரும்பினேன். அதன்படி, 2007 ஜனவரி 7 இல், அப்போதைய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எச். அபயகுணவர்த்தன, தமிழ்ச்சங்கக் கலைவிழாவில் டொமினிக் ஜீவாவுக்குச் 'சங்கச் சான்றோர் விருது' வழங்கிக் கௌரவித்தார். அதே ஆண்டு மார்ச் மாத மல்லிகை இதழின் அட்டைப்படத்தில், அவர் விருது பெற்ற புகைப்படம் இடம்பெற்றது (தொடர்ந்தும் கலை இலக்கியவாதிகளைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் கௌரவித்துவருவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது).

டொமினிக் ஜீவா தொடர்பாகப் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், சபரகமுவப் பல்கலைக்கழகம் ஆகியன வற்றில் பல்வேறு ஆய்வு முயற்சிகள் நடைபெற்று வந்துள்ளன. தற்போது சபரகமுவப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கும் எமது மாணவியான தேவகுமாரி சுந்தரராஜன், "டொமினிக் ஜீவா சிறுகதைகளும் யாழ்ப்பாணச் சமூகமும் – ஒரு விமர்சன ஆய்வு" என்ற தலைப்பிலான தமது கலாநிதிப் பட்ட (பிஎச்.டி) ஆய்வினை, எனதும், பேராசிரியர் வ. மகேஸ்வரனதும் மேற்பார்வையின் கீழ் நிகழ்த்தி வருகிறார்.

டொமினிக் ஜீவா காலமானதை முன்னிட்டு, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, அவருக்கு அஞ்சலி நிகழ்ச்சி ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் இணையவழி இடம்பெற்ற இந்நிகழ்வினைக் கலாநிதி செ. சுதர்சன் நெறிப்படுத்தினார். பேராசிரியர் நு்.மான், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் பா. ரவிக்குமார் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். டொமினிக் ஜீவா எங்கள் நினைவில் என்றும் நிலைத்திருப்பார்.

## பாரதி குடும்பம்

இந்தப் பாரதி நினைவு நூற்றாண்டில், பலரைப் போலவே என்னையும் மிகக் கவர்ந்த மகாகவி பாரதி தொடர்பாக நாலு வரியாவது எழுதாவிட்டால், என் மனம் என்னைச் சும்மா விடாது. அதனால், பாரதி குடும்பம் பற்றி நான் அறிந்தவைகளைச் சுருக்கமாகப் பகிர்ந்துகொள்வதில், என் மனம் சமாதானம் அடைகிறது.

சீவலப்பேரியைச் சேர்ந்த சின்னச்சாமி ஐயர் (இவரின் மறுபெயர் சுந்தரராஜன்), எட்டயபுரத்தில் வாழ்ந்த தமது தாய்மாமன் மகளாகிய லக்ஷ்மி அம்மாளை மணந்து, எட்டயபுரத்திலேயே குடியேறினார். அவருக்குச் சுப்பிரமணியன் (சுப்பையா செல்லப்பெயர்), பாகீரதி என்று இரு பிள்ளைகள். பாகீரதி இளம் வயதிலேயே காலமாகிவிட்டார். கடையம் செல்லப்பா – மீனாம்பாள் தம்பதியினரின் ஏழு பிள்ளைகளில் ஒருவரான செல்லம்மாவுக்கும் (1889 – 1955), பாரதிக்கும் (1882 – 1921) தங்கம்மா (1905 – 1971), சகுந்தலா (1909 – 1976) என்று இரு பெண் பிள்ளைகள்.

செல்லம்மா இரண்டாவது பெண் குழந்தையைப் பிரசவித்தபோது, பாரதி காளிதாசனின் சாகுந்தலம் காவியத்தை ரசித்துப் படித்துக்கொண்டிருந்தார். குழந்தை பிறந்த செய்தி அறிந்தபோது, சகுந்தலா எனப் பெயரிடுமாறு பாரதி செய்தி அனுப்பினார். மூத்த மகள் தங்கம்மா சிறுவயதிலேயே செல்லம்மாவின் அக்கா பார்வதியின் பராமரிப்பிலேயே வாழ்ந்துவந்ததால், இளைய மகள் சகுந்தலாவே பாரதியுடன் வாழ வாய்ப்பு ஏற்பட்டது. சகுந்தலாவுக்கு வீட்டில் செல்லப்பெயர் பாப்பா. வீட்டிலே ஒருநாள் சமைத்துகொண்டிருந்த செல்லம்மா, பாரதியிடம் வந்து, "சோறாக்க சித்த நேரமாகும். குழந்தை பசியால் கரையாமல் இருக்க ஒரு பாட்டுப் பாடும்" என்று கேட்டுக்கொண்டார். உடனே தமது மகள் பாப்பாவுக்காகப் (சகுந்தலா) பாரதி பாடிய பாடல் தான் பாப்பாப் பாட்டு. சகுந்தலா என் தந்தை பாரதி என்ற நூலை எழுதியிருக்கிறார். சகுந்தலாவின் கணவர், கே. நடராஜன்.

பாரதியின் மூத்த மகள் தங்கம்மா தான், பாரதி பற்றிய தாயின் நூலை, அவர் சொல்லச் சொல்ல எழுதியவர். கே.எச். ஸ்தாணு ஐயர் என்பவரைத் திருமணம் செய்தார். அவர்களுடைய ஐந்து பிள்ளைகளில் ஒருவர், பேராசிரியை விஜயா பாரதி சுந்தரராஜன். விஜயா பாரதி 1969இல் இலங்கை வந்திருந்தபோது, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அவரது பேச்சை நான் கேட்டிருக்கிறேன். தங்கம்மா தம்பதிகளின் இன்னொரு மகளான லலிதாவின் பிள்ளைகளில் ஒருவர்தான், பிரபல இசைக்கலைஞரும், பின்னணிப் பாடகருமான ராஜ்குமார் பாரதி.

○○○

# வாசகர் பேசுகிறார்

சென்ற மாத ஞானம் இதழ் கிடைக்கப் பெற்றேன். இலங்கையின் ஆதிக் குடிகள் பற்றி பகிர்ந்துகொள்ள விழைகின்றேன். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையை இராவணன் விபீடணன் போன்ற திராவிடர்கள் ஆண்டுள்ளதாக இராமாயணம் மூலம் அறியக் கிடைக்கின்றது. இராவணன் திருக்கோணேஸ்வரம் சிவாலயத்துக்குச் சென்று சிவனை வணங்கி வரம் பெற்றான் என்றும் கன்னியா கிணறுகளை வெட்டுவித்தான் என்றும் ஐதீகம் உண்டு. திருக்கோணேஸ்வரத்தின் மீது கி.பி 7ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடியுள்ளார். கி.மு 6ஆம் நூற்றாண்டில் திராவிடப் பெண்ணான குவேனி இயக்க ராச்சியத்தின் அரசியாக இருந்துள்ளாள். இவள் இந்து இளவரசனாகிய விஜயனைக் கணவனாக ஏற்று ராச்சியத்தை ஆளும் உரிமையை அவனிடம் கையளித்தாள். அவனது இரண்டாம் மனைவி ஒரு சைவத் தமிழ்ப் பெண்மணி ஆவாள். விஜயனின் 700 கூட்டாளிகளும் சைவத் தமிழ்ப் பெண்களையே மணம் முடித்தார்கள். இதற்கு ஆதாரம் பௌத்த பிக்குவால் எழுதப்பட்ட மகாவம்சம் எனும் வரலாற்று நூல் ஆகும். கி.மு 6ஆம் நூற்றாண்டில் விஜயன் திருக்கேதீஸ்வரம் சிவாலயத்துக்குத் திருப்பணி வேலைகள் செய்வித்தான் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் மீது கி.பி 9ஆம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பாடியுள்ளார். இலங்கையைக் கிறீஸ்து சகாப்தத்துக்கு முன் தமிழரான சேனன் குத்திகன் எல்லாளன் ஆகியோரும் வேறும் பல தமிழர்களும் ஆண்டுள்ளதாக மகாவம்சம் கூறுகிறது. நகுலேஸ்வரம் தொண்டீஸ்வரம் முன்னேஸ்வரம் ஆகிய சிவாலயங்களும் கிறீஸ்து சகாப்தத்துக்கு முன் கட்டப்பட்டவை ஆகும். இலங்கையில் சைவ சமயம் கோலோச்சிய புராதன காலத்தில் இன்றைய முன்னணி மதங்கள் எதுவும் தோன்றியிருக்கக்கூட இல்லை. தண்ணிமுறிப்பில் அடர்ந்த காட்டுக்குள் குருந்தூர் நகரமும் பெரிய சிவாலயமும் புதைந்து போயுள்ளதாக நம்பகரமான தகவல்கள் ஆங்கில வரலாற்று ஆய்வாளரான எச்.சி.பீ.பெல் அவர்களின் ஆய்வறிக்கை மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது. பக்கச் சார்பின்றி ஆராய்ந்து பார்த்தால் கிறீஸ்து சகாப்தத்துக்கு முந்திய இலங்கையின் ஆதிக் குடிகள் யாரென்று இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

**– கலைமாமணி கா. தவபாலன்**

●●●

**“அசைல்” சிறுகதை பற்றிய கருத்து**

ஞானம் பெப்ரவரி இதழில் வெளியான பேராசிரியர் ஆசி கந்தராஜா அவர்களின் ‘அசைல்’ சிறுகதை, ஈழவிடுதலைப் போராட்டமானது, மனச்சாட்சியற்ற சுயநல விஷமிகளால் எவ்வாறெல்லாம் தவறாகப் பிரயோகிக்கப் படுகிறது என்பதனைக் கூறுகிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் பன்முகங்களில் பாதிக்கப்பட்டோரின் புலம்பெயர்வும் ஒன்று. புலம்பெயர்ந்து அரசியல் தஞ்சம் கோரியவர்களில் ஒரு பகுதியினரே பாதிக்கப்பட்ட நிஜப் போராளிகளும், பொதுமக்களும் என்பது உண்மைதான். அதைவிட மனதை உறுத்தும் உண்மையின் கோரமுகங்கள் பல உண்டு. புகலிடம் கோரியவர்களில் பெரும்பான்மையோர் அதை சாக்காக வைத்து தமது பொருளாதார நலன் தேடியவர்கள்.

தமது அகதிவாழ்வு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதற்காக உயிரினும் மேலான போராட்ட வரலாற்றையே கொச்சைப்படுத்தி குற்றம் சுமத்தத் தயாரான, இவர்களைப் போன்ற ‘தமிழ்ப் பெருங்குடி மக்களின் பொய்யெழுதும் போராட்ட வரலாறு’ பற்றியதே இந்தக் கதை. இதில் அகதி அந்தஸ்து கோரியவர்கள் மட்டுமல்ல ‘இயக்கத்திலை இருந்ததெண்டு’ சாட்சிப் படுத்துபவர்களும், ஊரிலை போர் தொடர்ந்தால்தான் நல்லது என்ற ‘நல்லெண்ணம்’ கொண்ட களவீரர்களும், இவர்களைக் குறிவைத்து பணம் பண்ணும் ஏஜென்சி முதலைகளும், புலம்பெயர் தேசத்தின் வழக்குரைஞர்களும் அடங்குகிறார்கள்.

ஆனால் இவர்கள் எல்லோரையும் பொறுத்தவரை ஏதோ ஒருவிதத்தில் தமிழர்களது பொருளாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தலே தமது உயரிய நோக்கம் என்பதை உறுதியாக நம்புகின்றனர். தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள இனப்பிரச்சனையை “உசுப்பேத்தி” விடும் நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அது மட்டுமல்ல தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் இது போன்ற நடவடிக்கைகளைக் கண்டும் காணாமலும் மறைமுக ஆதரவு தருவோர்களின் முகங்கள் வெளியுலகுக்கு தெரிவதேயில்லை.

இவ்வாறான நிலையில் தமிழரசி போன்ற உண்மையான போராளிகளின் மனவோட்டங்கள் எவ்வாறு இருக்கும்? போராட்டம் கண்முன்னே சிதைந்து போன சோகத்தை விட, அதன் உண்மையான நோக்கங்களைக் கேள்விக்குள்ளாக்கும் இந்தக் குள்ளநரிகளின் போக்கு கொடுமையானது என்றே அவளால் நினைக்க முடிகிறது.

கதையின் போக்கை நிர்ணயிக்கும் சம்பவங்களும், உரையாடல்களும், மனவோட்டங்களும் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. தமிழரசிக்கு விசா கிடைத்ததா இல்லையா என்ற கேள்வி தொக்கு நிற்பதே சுவாரசியமானது.

சிறப்பான பங்களிப்பை நல்கும் படைப்பாளிகளுக்கும், தரமான கதைகளைத் தேர்வு செய்து வெளியிடும் ஞானம் இலக்கிய சஞ்சிகைக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.

**– ரஞ்ஜனி சுப்ரமணியம்**

●●●

இதழியல் சாதனையாளர் ஜீவாவைக் கௌரவித்து வெளியான ஞானம் இதழ் கிடைத்தது. அடிமட்டத்திலிருந்து எழுந்து எழுத்துலகின் உச்சியைத் தொட்ட ஜீவாவின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அந்த வகையில் அவரைக் கௌரவித்து ஒரு நீண்ட தலையங்கத்தைத் தீட்டியிருந்த ஞானத்திற்கு எனது பாராட்டுக்கள். ஜீவா அவர்களுக்கு அரசு நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கவேண்டும் என்ற ஞானத்தின் பரிந்துரை வெற்றியளிக்க முற்போக்கு அரசியல் வாதிகள், முன்வந்து அதனை நடைமுறைப்படுத்த உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**– ஷெல்லிதாசன், திருகோணமலை**

●●●

யாழ். பேருந்து நிலையத்தை அண்மிய பாதைகளில் அவர் சுற்றி வருவார். கையில் ஒரு கன்வஸ் பை இருக்கும். அதனுள் அந்த மாத மல்லிகை இருக்கும். எதிர்ப்படுகிறவரிடம் ஒரு பிரதியைக் கொடுப்பார். பெறுபவர் அதற்குரிய விலையைத் தருவார். யார் மறுக்காமல் வாங்குவார் என்பது அவருக்குத் தெரியும். ஒரு நாள் என்னைக் கண்டவுடன் பையிலிருந்த ஒரு மல்லிகையை எடுத்துத் தந்தார். நான் ஏற்கனவே புதுமை லோலன் மாஸ்டரின் புத்தகக் கடையில் பிரதியை வாங்கிவிட்டதைச் சொல்லாமல் காசைக் கொடுத்துப் புத்தகத்தை வாங்கிக் கோண்டேன். யாழ் பெரிய கடை தெருவில் புதுமை லோலன் மாஸ்டரின் சிறு புத்தகக் கடை இருந்தது. அங்கேதான் அந்நாளில் தமிழ் நாட்டுப் புத்தகங்கள் - அண்ணாவின் பொன் மொழிகள், போன்றவற்றை நான் வாங்குவேன். மல்லிகையும் வாங்குவேன். இவர் தான் டொமினிக் ஜீவா மல்லிகை ஆசிரியர் என்று புதுமைலோலன் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். அதன்பிறகு, இவர் பேசும் கூட்டம் சிலவற்றிற்குப் போயிருக்கிறேன். கையை உயர்த்தி வீசி வீசி ஆவேசமாகப் பேசுவார்.

மல்லிகை தயாராகும் அச்சகம் யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியை அண்மித்த ஒரு ஒழுங்கையில் இருந்தது. ஒரு நாள் அப்பாதையால் போகும் போது, காணும் வாய்ப்புக் கிடைத்தது. எட்டிப் பார்த்தேன். ஒருவர் அச்சுக் கோர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். டொமினிக் ஒரு பைலைப் பார்த்துக் கொண்டிருந்தார். புன்னகைத்தார் பதிலக்கு புன்னகைத்து அப்பால் நடந்தேன். தன்மானமும் தன் முயற்சியும் அவரை உச்சத்தைத் தொடவைத்தன. எழுத்துலகில் கால்பதித்தவர் எல்லாராலும் இயலாத காரியம் அது.

**– வேரற்கேணியன், யாழ்ப்பாணம்.**

●●●

ஞானம் 249 சஞ்சிகை கிடைக்கப் பெற்றேன். நன்றியுடன் பெருமகிழ்வு கொண்டேன். எனது கட்டுரை வெளிவந்தமை இரட்டிப்பு மகிழ்ச்சி. ஞானம் கிடைத்தவுடன் ஒரே மூச்சில் படித்துவிட்டேன். அத்தனையும் அறிவுக் கரும்புப் பாணி. குறிப்பாக டொமினிக் ஜீவா பற்றிய ஆசிரியர் தலையங்கம் மனதில் பெருந்துயர் நெருப்பை மூட்டியது. அதைத் தொடர்ந்து சிறுகதை 'அம்மாவின் 80 ஆவது பிறந்த தின உரை' கடந்த காலத்தை மிக உணர்வு பூர்வமாகத் தொட்டுச்சென்றது. சுதாகருக்கு வாழ்த்துக்கள். 'கடைக்குட்டி' சிறுகதை மிக அழகாக பல அன்றாட நிகழ்வுகளை கூர்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'கடைக்குட்டி' நியாயப்படுத்த வேண்டியதேவை வாசகர்களுக்கும் உண்டு. ஜீவகுமாரன் மிக அழகு நடையில் கூறியுள்ளார். வாழ்த்துக்கள். மொத்தத்தில் ஞானம் மிகத் தரமாக உள்ளது. வாழ்க ஞானம்

**– கனகசபை தேவகடாட்சம் , திருகோணமலை.**

○○○



தரமான தங்க நகைகளுக்கு....

# Nagalingams Jewellers

Designers and Manufacturers of
22kt Sovereign Gold
Quality Jewellery

101, Colombo Street, Kandy.
Tel: 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

**Suppliers to Confectioners & Bakers**

**Dealers in all kinds of Food Essences,
Food Colours, Food Chemicals,
Cake Ingredients Etc.**

**76B, Kings Street, Kandy.
Tel: 081 - 2224187, 081 - 2204480, 081 - 4471563**

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/05/News/2021




ISSN 2478-0340